KALKI 22.1.95 ரூ. 3.00

கல்கி



அடுத்த பிரதமர்?



சதி லீலாவதி

முன்பாதி மாதவி ஆங்கிளிலும் பின்பாதி கண்ணகி ஆங்கிளிலுமாகச் சொல்லப்பட்டிருக்கும் பாலு மகேந்திராவின் மற்றொரு கோவலன் கதை.

ஆனால் ஒரே கதையைத் திருப்பித் திருப்பிச் சொன்னாலும் ஒவ்வொரு முறையும் ஒரு மாறுபட்ட கோணத்தைக் காட்டுவது நிஜமான கலைஞனின் சாமர்த்தியம்.

பாலுமகேந்திரா இந்தப் படத்தில் சொல்லியிருக்கும் ஒரு விஷயம் ஆழ்ந்த யோசனைக்கும் விவாதத்துக்கும் உரியது.

கதையை விடுங்கள். பொருளாதார ரீதியில் சிறு வயதிலிருந்தே சிரமப்படும் ஒரு பெண், தன்னைக் காதலிக்க வரும் ஒருவனை அவனது மிடில் கிளாஸ் வாழ்வைக் காரணம் காட்டி ஒதுக்குகிறாள்.

“எனக்குச் சாதாரணமா இருக்கப் பிடிக்கலை. I need luxury” என்கிற ரீதியில் தொனிக்கும் அவள் சிந்தனை, நடைமுறை வாழ்வில் பணத்துக்கு முன்னால் காதல் உள்ளிட்ட எந்த உணர்வுபூர்வமான விஷயமும் எத்தனை சாதாரணமாகப் போய் விடுகிறது என்பதை முகத்தில் அறைவது போல் காட்டுகிறது.

இதனாலேயே, தான் காதலிக்கத் ‘தேர்ந்தெடுக்கும்’ நபர், திருமணமாகி இரண்டு குழந்தைகளின் தகப்பன் என்கிற விஷயம் தெரிகிறபோதும் அவனை மறுக்க முடியாது போகிறாள்.

மிகப் பெரிய விஷயங்களைக் கூட சின்ன ஹைகூ மாதிரி ஆங்காங்கே வீரியத்தோடு செதுக்கியிருக்கும் நேர்த்தி மகா ஆச்சர்யம்.

உதாரணமாக ‘பாசம்’ என்பதற்கு ராஜா மூலம் பாலு தந்திருக்கும் டெஃபனிஷன்.

“பாசம்னா என்னங்க? குறைகளோட ஏத்துக்கறது. விட்டுக் கொடுத்து அரவணைக்கறதுதானே?”

வசனம், கிரேசி மோகன் என்றாலும் இயக்குநரின் பிரத்யேகக் கைவண்ணம் படம் நெடுகிலும் தெரிகிறது. (அநேகமாக பாலுமகேந்திராவின் இந்தப் படத்தில்தான் நாலு பக்கத்தைத் தாண்டி வசனம்.)

கமலுக்கு, இந்தப் படம் மாறுபட்ட தீனி போட்டிருக்கிறது. நடிப்பில் ஒரு புதிய சகாப்தம். ஹ்யூமர் என்னமாய் வருகிறது!

அவ்வண்ணமே கோவை சரளா, ரமேஷ் அரவிந்த், ஹீரா இன்ன பிறரும்.

மேலோட்டமாகப் பார்த்தால் முழு நீள நகைச்சுவைப் படமாகத் தெரிந்தாலும், அறிவுபூர்வமான அணுகுமுறையில் பல புதிய தரிசனங்கள் சிக்குகின்றன.


கமர்ஷியலாக இந்தப் படத்தில் பல காம்ப்ரமைஸ்கள் பண்ணிக் கொண்டிருப்பதாக பாலுமகேந்திரா சொல்கிறார்.

ஆனால், ஒரு நல்ல கலைஞனின் வீச்சு பரவலாகப் போவதை நோக்க, அது ஒன்றும் இமாலயத் தவறாகத் தோன்றவில்லை.

— ஆர்.பி.ஆர்.

அடுத்த மினி தொடர்...?

விவரங்கள் : 55-ஆம் பக்கம்



அடுத்த பிரதமர்

"சோனியா அரசியலில் குதிப்பாரா, மாட்டாரா?" - தலைவலியாய பிரச்னை மட்டுமல்ல, தலையைப் பிய்த்துக் கொள்ளும் பிரச்னையாகவும் தலைநகரில் பலருக்கு நிலவுகிறது. ராத்தூக்கமின்றித் தவிப்பவர்கள் ஏராளம்!

'குதிக்க மாட்டார்' என்பதற்கு இரண்டு முக்கிய காரணங்கள் பேசப்படுகின்றன. ஒன்று, ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்ட விதம் ஏற்படுத்தியுள்ள ஆழ்ந்த வடு, மனக் கசப்பு. இது அரசியல் மீதே ஒரு வெறுப்பை அவருக்கு உண்டாக்கியிருக்கிறது; தாமோ தமது மகளோ அரசியலில் புகுந்தால் ஒவ்வொரு நாளும் உயிராபத்தைச் சந்திக்க வேண்டியிருக்கும் என்ற நினைவுடன் அவர் வாழ்வதால்தான் பட்டும் படாமலும் இருக்கிறார் என்கிறார்கள். இதற்கெல்லாம் சோனியா அஞ்ச மாட்டார் என்று நினைப்பவர்கள் கூட மீண்டும் மீண்டும் தலையெடுக்கும் போஃபர்ஸ் ஊழலுக்காக அவர் பயப்படுவார் என்று கருதுகிறார்கள் - அது ராஜீவைப் பாதிப்பது மட்டுமின்றி சோனியா குடும்பத்தார் மீதும் கருநிழலைப் பரப்பும் என்பதால். 'போஃபர்ஸ் ஊழல் அம்பலம்' என்ற மறைமுக அச்சுறுத்தலே அவரை அரசியலில் ஈடுபடச் செய்யாது என்று கருதுகின்றனர். 'இதனால்தான் இன்றைய ராவ் அரசு, அதைக் கிடப்பிலும் போடாமல், தீவிரமாகக் கிளறி ஆராயவும் செய்யாமல், தேவைப்படும் போதெல்லாம் பயப்படுத்த ஓர் ஆயுதமாக வைத்துக் கொண்டிருக்கிறது' என்பது இவர்கள் வாதம்!

பெயர் சொல்ல விரும்பாதவர்கள் கூறும் இந்தப் பிரதான காரணங்கள் தவிர, தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டே பல்வேறு தரப்பினரும் பல விதமாகப் பேசுகிறார்கள்: உதாரணமாக, ஆந்திரப் பிரதேசத்து எம்.பியான வி. ஹனுமந்தராவ். இவர் சஞ்சய்காந்திக்கு மிக

" 'ராஜீவ் விசுவாசிகள்' என்று தங்களுக்குத் தாங்களே முத்திரை குத்திக் கொண்டுள்ள கோஷ்டியினர் மட்டுமே சோனியா காந்தியைச் சென்று தரிசிக்கிறார்கள் என்பது இல்லை. பிரதமரும் அடிக்கடி போய்ப் பார்த்து நாட்டு நடப்புக்களை அலசுகிறார். "இந்தியாவுக்கு இரண்டு ஜனாதிபதிகள்; ஒன்று சர்மா, மற்றொன்று சோனியா!" என்று எதிர்க்கட்சியினர் கிண்டலடிக்கும் அளவுக்கு ராவ், சோனியாவை மதித்து நடந்து கொள்கிறார்.

"இவ்வாறிருக்கும்போது, "ராஜீவ் விசுவாசிகளுக்குத் தேர்தல் டிக்கெட் கொடுங்கள்" என்ற சமீபத்திய அர்ஜுன் சிங்கின் கோஷம் விஷமத்தனமானது மட்டுமல்ல; விஷமயமானது! ஏதோ இவரும், ராஜீனாமா செய்ய வேண்டிய திர்ப்பந்தத்துக்கு உள்ளான ஊழல் பேர்வழிகளும்தாம் ராஜீவ் விசுவாசிகள் போலவும், மற்றவர்கள் ராஜீவ் விரோதிகள் போலவும் சித்திரிக்கும் இந்தப் போக்கு அர்ஜுன்சிங்குக்குப் பாதகமாகவே முடியும்" என்று சென்னையில் ராவ் விசுவாசி ஒருவர் நம்மிடம் சாடிய அதேநேரத்தில், கருணாகரனும் கடுமையாகக் கண்டனம் தெரிவித்திருக்கிறார்! "சரத் பவாரை மறுபடி காங்கிரஸுக்குள் அழைத்து வந்ததே ராஜீவ்தான்" என்பதை நினைவூட்டி, சவுக்குச் சொடுக்கியிருக்கிறார்.



இந்தச் சமீப நிகழ்ச்சிகள் ஒருபுறமிருந்தாலும், "ராவ் மீது சோனியா கோபப்படக் காரணம் உண்டா?" என்று கேட்டால், "இருக்கிறது" என்றே பதில் வருகிறது. முக்கியமான




- தமிழகத்தில்



படம் - நன்றி : சண்டே

சோனியா?

- தில்லியில் ஓர் அலசல்



நெருக்கமாக இருந்த இளைஞர் காங்கிரஸ் தலைவர்.

"வேண்டுமானால் உட்கட்சி அரசியலில் அதிகாரம் பெற்றவராக வரலாமே தவிர, "நான் முந்தி நீ முந்தி" என்று போட்டிப் போடும் ரகத்தைச் சேர்ந்தவரல்ல அவர். மேலும் தாம் ஒரு வெளிநாட்டுக்காரி என்கிற எண்ணமும் அவரது அரசியல் பிரவேசத்துக்கு உறுத்தலாக இருக்கிறது!" என்று சொல்கிறார் ஹனுமந்தராவ்.

ஆளுங்கட்சிக்காரரின் அபிப்பிராயத்தை விட்டுத் தள்ளுங்கள். எதிர்க்கட்சிக்காரர்கள் என்ன சொல்கிறார்கள்? "நரசிம்மராவுக்கு, சோனியா மிகுந்த மரியாதை தருகிறார். அவர் மனம்விட்டுப் பேசக் கூடிய அளவில் இருக்கும் ஒரே மூத்தவர் ராவ் மட்டும்தான். இந்த நிலையில் கட்சி அரசியலில் சோனியா யார் பக்கமும் சார்ந்திருக்க மாட்டார். நரசிம்மராவின் தலைமைக்கு ஆபத்து வருகிறபோது - கட்சி பிளவுபடும்போது - ஒரு பிளவின் தலைவியாகத் தம்மைக் காட்டிக் கொள்ள அவர் ஒருபோதும் விரும்பமாட்டார்!" என்கிறார் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளரும் எம்.பியுமான இந்திரஜித் குப்தா.

"ஆனால், ராவுக்கு எதிராகக் கிளம்பியிருக்கும் அர்ஜுன் சிங்கை சோனியா ஆதரிப்பதாகச் சொல்லப்படுகிறதே" என்று கேட்டால், 'அது உண்மையல்ல' என்ற மறுப்பும் வருகிறது. "ஜவஹர்பவன் டிரஸ்டிகளில் ஒருவரான உமாசங்கர் தீக்ஷித் காலமானபோது, அந்த இடத்தில் மூத்த காங்கிரஸ்காரர்களில் ஒருவரான அர்ஜுன் சிங்கை நியமிக்க சோனியா முடிவெடுத்தார். சோனியாவின் இந்த இயல்பான மனப் போக்கை அவர் தம்மையே ஆதரிக்கிறார் என்கிற மாதிரியானதொரு பொய்யான தோற்றத்தை உருவாக்க அர்ஜுன்சிங் மிகவும் சாமர்த்தியமாகப் பயன்படுத்தி விட்டார்" என்கிறார்கள்.

பயனீர் பத்திரிகையின் அரசியல் ஆசிரியர் அஜாய்போஸ், "சோனியா அரசியலுக்கு வருவது தற்கொலைக்கு ஒப்பானது" என்று தலைப்பிட்டுக் கட்டுரை எழுதுகிறார்;

காரணம், ராஜீவ் காந்தி கொலை பற்றிய சதியை விசாரிக்கும் ஜெயின் கமிஷனுக்கு மத்திய அரசு போதிய அளவு ஒத்துழைப்புத் தரவில்லை என்பது. இதை நீதிபதி ஜெயின், தாமே ஒரு முறை மனம் நொந்து

பலசாலியா?

வெளியிட்டிருப்பதை அர்ஜுன்சிங் ஆதரவு காங்கிரஸார் சுட்டிக்காட்டுகின்றனர்.

"என்ன இருந்தாலும் சோனியா ஓர் அயல்நாட்டுக்காரர் அல்லவா?" என்ற கேள்விக்கு, தமிழ்நாடு காங்கிரஸின் செய்தித் தொடர்பாளர் இன்னிவளவன் கோபத்துடன் பதிலளிக்கிறார்: "அவர் நேரு குடும்பத்தின் ஓர் அங்கம்; இந்தியப் பிரஜை; ஒரு வாதத்துக்காக அவரை வெளிநாட்டவர் என்று வைத்துக் கொள்வதானாலும், இந்திய தேசிய காங்கிரஸைத் துவக்கியவரே ஹ்யூம் என்ற வெள்ளைக்காரர்தானே? ஐரிஷ் பெண்மணி அன்னி பெஸண்ட் காங்கிரஸ் தலைவராக இருக்கவில்லையா?"

பொதுவாக, தமிழக காங்கிரஸ் தலைவர்கள், தொண்டர்கள் மத்தியில், 'ஒரு நபருக்கு ஒரு பதவி' என்ற கொள்கைக்கு ராவ் மட்டும் விதிவிலக்காக இருக்கக் கூடாது என்ற கருத்து நிலவுகிறது. "கட்சிப் பணியைக் கவனிக்க பிரதமருக்கு நேரமிருக்காது; கட்சித் தலைவர் என்று ஒருவரை உருவாக்குவது என்று தீர்மானித்துவிட்டால் அதற்கு சோனியாவை விடத் தகுதியானவர் யார்?"

சோனியாவின் தகுதிகளைப் பட்டியலிடுகிறார் பீ. ஸி. கணேசன் : "1. எந்தப் பிரச்னையிலும் சிக்கிக் கொள்ளாத புது முகம்; 2. இந்து - முஸ்லிம் மதவெறியர்கள்

கருத்துக் கணிப்பு....

சேலம் மாவட்டம் வாழப்பாடியில் 'கேம்பிரிட்ஜ் இன்ஸ்டிடியூட் ஆஃப் ஸ்போக்கன் இங்கிலீஷ்' என்ற நிறுவனம் உள்ளது. இதில் என்ன விசேஷம் என்றால் ஒவ்வொருவருக்கும் இரண்டு மணி நேரம் தனித்தனியாய்ச் சொல்லித் தருகிறார்கள். ஒரு மணி நேரம்தான் Theory. அடுத்த ஒரு மணி நேரமும் Practical! இதற்கென்றே நியமிக்கப்பட்டிருக்கும் ஓர் அழகான இளம்பெண்ணிடம் நம்மை ஆங்கிலத்தில் உரையாடச் சொல்கிறார்கள்! இது நமது கூச்ச சுபாவத்தை விரட்டும் என்பது அவர்களின் எண்ணம்!

- ரஜினி அருள்

"சோனியா ஒன்றும் அசடு அல்ல; திவாரியோ, அர்ஜுன்சிங்கோ, ராவோ யார் வந்தாலும் சந்திக்கிறார்; காது கொடுத்துக் கேட்கிறார்; அவ்வளவுதான். இந்தச் சந்திப்புகளுக்கெல்லாம் உள்ளர்த்தம் கற்பிப்பது அவரவர் கற்பனைத் திறனைப் பொறுத்தது. சோனியா தானாக ஏதும் பேசவில்லை. வதந்திகளை மறுப்பது கூடக் கிடையாது. இப்படி மௌனம் சாதிப்பது மூலமே ஒரு மர்மத்தை உருவாக்கி, நாட்டின் கவனம் முழுவதையும் தம் பக்கம் ஈர்க்க அவரால் முடிகிறது. அரசியல் அதிகாரத்தை நிராகரித்தும் கூட நாட்டின் மையப் புள்ளியாகத் திகழ்கிறார். மக்களின் மதிப்புக்கும் மரியாதைக்கும் உரியவராக இருக்கிறார்.

"அரசியலில் புகுந்த அடுத்தகணம் இதையெல்லாம் அவர் இழந்துவிடுவார். அரசியல் சாக்கடையில் நூறோடு நூற்றி ஒன்று என்றாகிவிடுவார். அப்படி ஒரு தியாகத்தைச் செய்து காங்கிரஸின் தலைமை ஏற்றாலும் அக்கட்சியின் எதிர்காலம் பிரகாசமாகிவிடும் என்பதற்கு உத்தரவாதமில்லை. சோனியாவின் வருகையாலேயே காங்கிரஸில் எல்லாம் சீராகிவிடும் என்று நினைப்பது முட்டாள்தனம். மாறாக காங்கிரஸில் பிளவு வலுக்கும். "ரோம ராஜ்யமா? ராம ராஜ்யமா? எது வேண்டும்?" என்று மக்களிடம் கேட்டு வோட்டுப் பெற பி.ஜே.பி.க்குத்தான் வசதியாகப் போய்விடும்!

"இந்திரா காந்தியும் ராஜீவ் காந்தியும் அரசியலில் புகுந்த சூழ்நிலையே வேறு. அவர்கள் இருவருமே முறையே தந்தையாலும் தாயாலும் அரசியலுக்குத் தயாராக்கப்பட்டவர்கள் என்ற தகுதியோடு வந்தனர். சோனியாவுக்கு அத்தகைய பின்பலம் இல்லை. இதையெல்லாம் சோனியா அறியாதவரும் அல்ல!"

பி.ஜே.பி. எம்.பியான உமாபாரதியிடம் சோனியாவின் பேச்சை எடுத்தாலே சீறுகிறார். "ஒரு பெண்மணியின் மூலமாகத்தான் ஒரு கவர்ச்சித் தலைவர் கிடைப்பார் என்றால், அப்படிப்பட்ட கவர்ச்சித் தலைவரைக் காங்கிரஸ் கட்சியே வைத்துக் கொள்ளட்டும்; நாட்டுக்குத் தேவையில்லை!" என்கிறார்.

இப்படிப் பலவாறான கருத்துக்கள் அடிபட்டாலும், "நரசிம்மராவின் மௌனத்தைவிட, சோனியாவின் மௌனம் ரொம்ப ரொம்ப ஆழமானது" என்பதில் மட்டும் எல்லோரும் கருத்து ஒருமித்துக் காணப்படுகிறார்கள்!

தில்லியிலிருந்து :

பிரேமா ராஜகோபாலன்

மத்தியில் கத்தோலிக்கப் பெண்மணியின் தலைமை, 'எம்மதமும் சம்மதம்' என்ற உணர்வை உண்டாக்கும்; 3. நேரு குடும்பத்தைச் சேர்ந்தவர் என்ற பிரபை; 4. இளமை."

ராவ் கோஷ்டியைச் சேர்ந்த சிலர், "சோனியா அப்படி ஒன்றும் சாது இல்லை; ராஜீவ் ஃபவுண்டேஷன் விழா ஒன்றிற்கு, காங்கிரஸை விட்டு நீக்கப்பட்ட பங்காரப்பாவைக் கூப்பிட்டு மேடையில் அமர்த்துவானேன்? பிரதமரின் விருப்பத்துக்கு விரோதமாக நடந்து கொள்ளும் மம்தா பானர்ஜி நடத்திய விழாவில் பங்கேற்க இவர் போவானேன்? அவர் சந்தர்ப்பம் பார்த்துக் கொண்டிருக்கிறார். அரசியலில் சரியான சமயத்தில் நுழைவது என்பது ரொம்ப முக்கியம் என்பதால் தோட்டம் விட்டபடி காத்திருக்கிறார்" என்கிறார்கள்.

"அடுத்து நடக்கவிருக்கும் மாநிலத் தேர்தல்களில் காங்கிரஸ் வெற்றிபெற வேண்டுமானால் ஒரு செல்வாக்கு பெற்ற தலைவர் தேவை; அது சோனியாதான் என்பதில் சந்தேகமில்லை" என்கிறார் போளூர் வரதன். "இதனால் நான் ராவுக்கு எதிர் கோஷ்டி என்று நினைக்க வேண்டாம்; ராவ் விசுவாசியாக, அதோடு காங்கிரஸ் விசுவாசியாகவும் இருப்பதாலேயே இப்படிச் சொல்கிறேன்"

அப்படியானால் ராவ் ஏன் தயங்குகிறார்?

இன்று கட்சிக்குத் தலைவராக வருபவர், நாளை அதிகார பீடத்துக்கும் போட்டியாக வருவார் என்ற அச்சம்தான் காரணமாக இருக்க முடியும்.

— ப்ரியன்

அட்டை வண்ணப்படம் :

கேமரா திருஞானம்

ஒரு சோகமான சந்திப்பு!

எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட இளைஞரான சேகரும், எய்ட்ஸ் நோய் கட்டுப்பாட்டுப் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ள இளைஞரான பிரான்ஸிஸ்பாபுவும் சந்தித்து உரையாடுகிறார்கள்.

பிரான்ஸிஸ் பாபு : நான் வியாசர்பாடியில் சலூன் ஒன்று வைத்து நடத்தி வருகிறேன். கடந்த ஒரு வருட காலமாக எய்ட்ஸ் நோய் கட்டுப்பாட்டுப் பணியில் ஈடுபட்டு வருகிறேன். பெரிய அளவில் இல்லாது போனாலும் கூட, என்னால் முடிந்த அளவுக்குப் பணியாற்றுகிற ஆத்ம திருப்தி எனக்குக் கிடைக்கிறது.

சேகர் : சில வருடங்களுக்கு முன்பு, எய்ட்ஸ் விழிப்புணர்ச்சிக்காக, ஒரு பேரணி சென்னையில் நடைபெற்றது. அப்போது நானும் அதில் கலந்து கொண்டிருக்கிறேன். ஆனால், நானே அந்த ஆட்கொல்லி நோய்க்குப் பலியாகப் போகிறேன் என்கிற பயங்கரமான உண்மை அப்போது எனக்குத் தெரியாது.

பாபு : கேட்கவே கஷ்டமாய் இருக்கிறது. எய்ட்ஸ் நோய்க்கான பிரத்தியேக டெஸ்ட் உங்களுக்குச் செய்யப்பட்டு, நோய் இருப்பது உறுதி செய்யப்பட்டதா?

சேகர் : ஆம்! அப்போலோ மருத்துவமனையில்தான் நான் அதற்குரிய டெஸ்ட்டை செய்து கொண்டேன். டெஸ்ட்டுக்கான சாம்பிளைக் கொடுத்து விட்டு, ஒரு வாரம் கழித்து, ரிசல்ட்டை வாங்குவதற்காகச் சென்ற போது, அந்த அறையில் இருந்த ஆஸ்பத்திரி ஊழியர்கள் கேட்ட கேள்விகளும், அவர்கள் பார்த்த பார்வையுமே, எனக்கு எய்ட்ஸ் இருக்குமோ என்ற சந்தேகத்தை வலுப்படுத்தியது. டாக்டர் வெகு சாதாரணமாக, 'உனக்கு எய்ட்ஸ் இருக்கிறது; அதற்கு மேல் நான் வேறு எதுவும் சொல்ல விரும்பவில்லை' என்கிற ரீதியில் சொன்ன போது, என் இதயம் வெடித்து விட்டது போல நான் உணர்ந்தேன்.

பாபு : திடீரென்று, எய்ட்ஸ் நோய் இருக்கிறதா என்று டெஸ்ட் பண்ணிக் கொள்ள வேண்டும் என்கிற எண்ணம் உங்களுக்கு எப்படி ஏற்பட்டது?

சேகர் : எனக்கு வீட்டில் திருமணத்துக்குப் பெண் பார்த்துக் கல்யாண ஏற்பாடுகள் துவங்கும் நேரம். என்னைப் பற்றி நன்கு அறிந்த, எய்ட்ஸ் கட்டுப்பாட்டு மையத்தில் பணிபுரியும் எனது நண்பர் ஒருவரின் ஆலோசனையின் பேரில்தான் நான் டெஸ்ட் பண்ணிக் கொண்டேன். எனக்கு எய்ட்ஸ்



இருப்பது உறுதிப்படுத்தப்பட்டபின், இதயம் சம்பந்தமான தீவிரமான நோய் என்று கூறி திருமண ஏற்பாடுகள் நிறுத்தப்பட்டு விட்டன.

பாபு : உங்கள் பெற்றோருக்கு, எப்படி இந்த விஷயம் தெரியவந்தது? தங்கள் மகனுக்கு இப்படி ஒரு நிலைமை என்பதைப் பொதுவாக எந்தப் பெற்றோராலும் தாங்கிக் கொள்ள முடியாதே!

சேகர் : சென்னையில் ஒருமுறை பரிசோதனை செய்து கொண்டாலும், மீண்டும் அதனை உறுதிப்படுத்திக் கொள்ளுவதற்காக, வேலூர் சி.எம்.சி. மருத்துவமனைக்குச் சென்றேன். விஷயம் தெரியாத நிலையில், என் தந்தையும் என் கூடவே வேலூருக்கு வந்தார். எனக்கு எய்ட்ஸ் இருப்பது மீண்டும் ஒரு முறை உறுதியானவுடன், என் தந்தையைப் பார்த்த போது, என்னால் அழுகையைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அவர் ஒன்றும் புரியாமல் திகைத்து நின்றார். நான் மெதுவாக அவரிடம் விஷயத்தைச் சொன்னதும், 'மகனே!' என்று என்னைக் கட்டிப் பிடித்துக் கொண்டு கதறினார். கொஞ்ச காலத்துக்கு

“
என்றைக்கேனும் ஒருநாள் போக வேண்டிய உயிர்தானே என்பதால் நான் எதிர்ப்புகள் பற்றியெல்லாம் கவலைப் படவில்லை.
”



இந்த விஷயத்தை என் அம்மாவிடம் சொல்ல வேண்டாம் என்று நான் கேட்டுக் கொள்ள, அவரும் அதற்கு ஒப்புக் கொண்டார். இருப்பினும் வீட்டுக்கு வந்தவுடன், என் அம்மாவைப் பார்த்ததும் அவரால், துக்கத்தைக் கட்டுப்படுத்த முடியாமல், விஷயத்தைச் சொல்லி விட்டார்.

பாபு : ஐயோ பாவம்! அந்த நேரம் உங்கள் மூவரின் மனநிலையும் எப்படி இருந்திருக்கும் என்று நினைத்தாலே என்னை சோகம் தாக்குகிறது! கொஞ்ச நாட்களுக்கு முன்பு நான் கேள்விப்பட்ட சம்பவம் இது. ஆந்திராவைச் சேர்ந்த ஒருவருக்கு, சென்னையில் பரிசோதனை செய்து, எய்ட்ஸ் இருப்பது உறுதிசெய்யப்பட்டது. அவருடைய சொந்த ஊருக்கு அவர் செல்வதற்கு முன்பே அங்கே விஷயம் தெரிந்து விட, 'எலெக்ட்ரிக் ஷாக்' ஏற்படுத்தி தற்கொலை என்ற போர்வையில் அந்த எய்ட்ஸ் நோயாளியைத் தீர்த்துக் கட்ட ஊரே திரண்டதாம். காரணம், எய்ட்ஸ் ஒரு தொற்றுநோய் என்கிற தவறான எண்ணம். அந்த நோயாளியின் உறவினர் ஒருவர் சென்னைக்கு விரைந்து வந்து, "நம் ஊர் பக்கம் எந்த காரணம் கொண்டும் இனி தலைகாட்டாதே! எங்கேயாவது போய் பிழைத்துக் கொள்" என்று எச்சரித்து அனுப்பினாராம்!

சேகர் : எய்ட்ஸ் நோயாளிகள் பலரும் இந்த சமுதாயத்தின் ஏச்சுக்கும், பேச்சுக்கும் பயந்து தற்கொலையில் ஈடுபடுவது அதிகரித்துக் கொண்டே போகிறது. உதாரணத்துக்கு என்னையே எடுத்துக் கொள்ளுங்கள். 'சேகர் இந்த வீட்டில் இருந்தால் நானும், என் மனைவி மற்றும் குழந்தையும் தனியாகப் போய் விடுகிறோம்' என்று என் கூடப் பிறந்த அண்ணனே கூறினார்.

பாபு : கேட்பதற்குச் சங்கடமாய் இருந்தாலும் எய்ட்ஸ் என்பது ஒரு தொற்று நோய் என்கிற தவறான எண்ணம்தான் அந்த அளவுக்கு அனைவரையும் திகிலூட்டியுள்ளது.

சேகர் : எய்ட்ஸ் உறுதிப்படுத்தப்பட்டதும், யாரையுமே சந்திக்கப் பிடிக்காமல், என் பாட்டிக்குச் சொந்தமான ஒரு வீட்டின் ஒதுக்குப்புறமான ஒரு அறையில், உள்ளே தாழ்ப்பாள் போட்டுக் கொண்டு, பத்து நாட்கள் தனிமையில் கழித்திருக்கிறேன். ஜன்னல் வழியே சோறு கொண்டு வந்து கொடுப்பார்கள்! பலமுறை தற்கொலை எண்ணம் கூட தலைதூக்கியது!

பாபு : எய்ட்ஸ் கட்டுப்பாடு ஒருபுறம் என்றால், எய்ட்ஸால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, மன தைரியமூட்டி, வாழ்நாளை உருப்படியாய்க் கழிக்க வழிகாட்டும்படியான ஆலோசனை சொல்லுவது என்பது மிக முக்கியம். அத்தகைய ஆலோசனை தக்க நேரத்தில் கிடைத்து, இன்று நீங்கள் எய்ட்ஸ் நோய் கட்டுப்பாட்டு பிரசாரத்தில் ஈடுபட்டு வருவது நிம்மதியளிக்கும் ஒரு விஷயம்!

சேகர் : எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்களை நேருக்கு நேர் பார்த்தால் கூட எய்ட்ஸ் தொற்றிக் கொண்டு விடும் என்பது போன்ற தவறான எண்ணங்கள் மக்கள் மத்தியில் நிலவுகின்றன.


பாபு : எய்ட்ஸ் பற்றிய சரியான தகவல்களை முறையாய் மக்களிடம் தெரிவிப்பதோடு, எய்ட்ஸ் பாதிப்புக்குள்ளானவர்களை மனிதநேயத்தோடு நடத்த வேண்டும் என்பதையும் அறிவுறுத்த வேண்டியது மிக அவசியம்.

சேகர் : எய்ட்ஸ் விழிப்புணர்ச்சி நிகழ்ச்சிகள் பலவற்றிலும் நான் கலந்து கொண்டு பேசுகிறேன். பாதிக்கப்பட்ட ஓர் இளைஞனே நேரடியாய் எச்சரிக்கும் போது,

காஷ்மீரைக் காணோம்!

●● 'இஸ்லாமிக விஞ்ஞான கோஷம்' என்ற புத்தகம் பெரும் சர்ச்சையைக் கிளப்பியிருக்கிறது. கேரளாவில். அரசும் அப் புத்தகத்தைப் பறிமுதல் செய்ய உத்தரவிட்டுள்ளது. காரணம், அதில் வெளியிடப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் காஷ்மீர் சேர்க்கப்படவில்லை; கூடவே, இந்தியாவுக்கு எதிரான கருத்துக்களும் இடம்பெற்றுள்ளன என்பதுதான். முஸ்லீம்கள் அடங்கிய ஒரு கமிட்டிதான் இப் புத்தகத்தை உருவாக்கியது. அந்தக் கமிட்டியின் முக்கிய உறுப்பினர்களில் ஒருவர் ஈ.டி. முகம்மது பஷீர். அவர் யார் தெரியுமா? கேரள கல்வி அமைச்சர். இவரைப் பதவி நீக்கம் செய்வதோடு தேசத் துரோக வழக்கும் பதிவு செய்ய வேண்டுமென பாரதிய ஜனதா கட்சியினர் போராடுகின்றனர்.

●● கேரளாவின் அடிஷனல் அட்வகேட் ஜெனரல் வி. கே. பீரான். இவர் ஹஜ் யாத்திரை போன போது, அங்குள்ள கலீஜ் டைம்ஸ் என்கிற பத்திரிகையில் இந்தியாவில் முஸ்லீம் சமூகம் கொடுமைப்படுத்தப்படுவதாகவும் அயோத்தியில் மசூதி இடிக்கப்பட்டபோது, அரசு நடந்து கொண்ட விதம் பற்றி விமர்சித்தும் பேட்டி கொடுத்து விட்டார். மாநில அரசின் முக்கிய பதவியில் உள்ள ஒருவர் இப்படி பேட்டி கொடுத்தது மத்திய அரசுக்கு அதிர்ச்சி. அதனால் மத்திய அரசு கேரள அரசுக்குக் கண்டனம் தெரிவித்துள்ளது. இந்த நிலையில்



பீரானை நீதிபதியாக்கும் முயற்சியும் ஒருபுறம் நடந்து கொண்டிருக்கிறது.

●● ஐயப்ப பக்தர்களுக்காக சபரி என்ற ஹோட்டல் ஒன்று பம்பையில் நடத்தப்படுகிறது. இந்த ஹோட்டலுக்கான மின்சாரத்தைச் சட்டவிரோதமான முறையில் எடுத்துப் பயன்படுத்தி வந்ததற்காக, பதினைந்தாயிரம் ரூபாய்க்கு மேலாக அபராதம் விதித்துள்ளது மின்சார இலாகா. அது சரி, ஹோட்டலை நடத்துவது யார் தெரியுமா? கேரள சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன்!

திருவனந்தபுரத்திலிருந்து : எஸ். எஸ். மணி

மக்களிடையே அது குறிப்பிடும்படியான அளவுக்கு பாதிப்பை ஏற்படுத்துகிறது. ஆனால் சில தரப்பினரிடமிருந்து அச்சுறுத்தல்களும், தாக்குதல் முயற்சிகளும் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. என்றைக் கேனும் ஒருநாள் போக வேண்டிய உயிர் தானே என்பதால் நான் எதிர்ப்புகள் பற்றியெல்லாம் கவலைப்படவில்லை. நீங்கள் எய்ட்ஸ் கட்டுப்பாட்டு பிரசாரத்தை எந்த முறையில் செய்து வருகிறீர்கள்?

பாபு : எங்கள் பகுதி மக்களிடையே, எய்ட்ஸ் எதனால் வருகிறது. அதை எப்படி தவிர்ப்பது என்றெல்லாம் துண்டுப் பிரசுரங்கள் விநியோகித்தும், நேரடியாய்ப் பேசியும் வருகிறேன். வழக்கமாய், சலூன் என்றால் பெண்களின் கவர்ச்சிப் படங்கள் மட்டுமே மாட்டி வைக்கப்பட்டிருக்கும். ஆனால் என்னுடைய சலூனில் எய்ட்ஸ் விழிப்புணர்ச்சி சம்பந்தப்பட்ட ஸ்டிக்கர்களும், போஸ்டர்களும் காணப்படும். தவிர, குடும்பநலத் துறை அலுவலகத்திலிருந்து, ஆணுறைகள் வாங்கி வந்து இலவசமாய் விநியோகிக்கிறேன். சேகர்! கடைசியாய் ஒரு கேள்வி! நீங்கள் எப்படி இந்த ஆட்கொல்லிக்கு ஆளானீர்கள்?

சேகர் : ஓரினச் சேர்க்கைதான் என்னை இந்தப் பயங்கர நிலைக்கு ஆளாக்கி விட்டது!

தொகுப்பு : **மௌலி**
ஏற்பாடு : **பரமானந்தம்**
படம் : **யோகா**

கிராமச்சுவை ரொம்ப 'டேஸ்ட்டுங்க!'

◆ வரிக்கு வரி 'கிராமச் சுவை'யை ரசித்தேன். மனம் நிறைந்த பாராட்டுக்கள் என் வாய் நிறைய வந்தாலும், உண்மையான கிராமத்துக்காரனாகிய என் படைப்புகள் எதுவும் வெளியாகவில்லையே.... என்ற வருத்தம் ஒரு ஓரத்தில் இருக்கத்தான் செய்தது!

சங்கரன்கோயில், கோ.ரா. சந்திரன்.

◆ சுந்தரபாண்டியபுரம் கிராமத்தைப் பற்றிய செய்தியைப் படித்து ஆச்சரியப்பட்டேன்!

லால்குடி, மு. கிருஷ்ணா.

◆ கல்கியின் கிராமச் சிறப்பிதழ் படித்தேன். கவர் ஸ்டோரி மிகவும் சூப்பர். காகிதப் பூவை நுகர்ந்து பார்த்தேன். நன்றாக மணம் வீசியது! வீராபுரம் கிராமத்திற்குச் சென்ற திருப்தி!

திருத்தங்கல், சி.எஸ். சேகர்.

◆ கனவு மெய்ப்படும் என்று உறுதி அளித்து, தன்னம்பிக்கையை அஸ்திவாரமாக்கியிருக்கும் சுகிசிவத்திற்குப் பாராட்டுக்கள்!

பள்ளிபாளையம், ரஞ்சனி ப்ரியன்.

◆ பொய்யின்றி மெய்யோடு நெய் கொண்டு போய் ஐய்யப்பனைக் காணும் போது வரும் பதினெட்டு படிகளும் பதினெட்டு வாழ்க்கை தத்துவங்கள் என, படி விளக்கம் தருவார் எங்கள் குரு சாமி. அதுபோல் பதினெட்டு வாரங்கள் வாழ்வியலோடு சம்பந்தப்பட்ட வளமான கருத்துக்கள் அடங்கிய தொடர்தான் கனவு மெய்ப்படும் தொடர். இந்த இயந்திர வாழ்க்கையில் எனக்கு ஏற்பட்ட எத்தனையோ மன ரணங்களைப் போக்கும் மருந்தாக அமைந்திருந்தது.

அரக்கோணம், ப. சத்தியநாராயணன்.

◆ ''சென்னைக்குப்பம் 2000'' - அகிலா கார்த்திகேயனின் ஐடியா ஒவ்வொன்றும் அசத்தல்!

காவேரிப்பட்டணம், கே. சோமசேகர்.

◆ கிராமச் சிறப்பிதழ் வெயிட்டாக இருப்பது போலவே, அதன் தரமும், வெயிட்டாகவே உள்ளது. ஏழு ரூபாய் மதிப்புள்ள புத்தகத்தினை மூன்று ரூபாய்க்கு அளித்த கல்கிக்கு நன்றி!

சிதம்பரம், ஸ்ரீவித்யா காளிதாஸ்.

◆ தரிமுகம் - மிக அழகாகச் சொல்லப்பட்டு இருக்கிறது. இவ்வளவு முன்னேறிய பிறகும் மனைவிக்குச் சமமான அந்தஸ்து கொடுக்கப்படுவதில்லை என்று புரிகிறது.

சென்னை - 4, சாந்து உஸ்மானி.

◆ வருடப் பிறப்பு அன்று கணவன் பூஜையறை தாம்பாளத் தட்டில் விழிக்க வேண்டும் என்று நினைத்த மனைவியின் கண்ணுக்கு, கணவன் சாப்பிட்ட எச்சில் தட்டுதான் வருடப் பிறப்பன்று முதன் முதலில் தென்படுகிறது என்றாலும் வருடம் முழுவதும் கணவர் வீட்டில்தான் சாப்பிடுவார் என்ற நம்பிக்கையில் விளையும் சந்தோஷத்தை அழகாகச் சித்திரித்து உள்ளார் ஆசிரியர்.

இலால்குடி, ஆங்கரை பைரவி.

◆ கொன்னுபுட்ட வாத்யாரே! அர்ஜுன்சிங் ராஜினாமா பற்றிய தலையங்கத்தைத்தான் சொல்றேன்.

ஒட்டநத்தம், உ.ர. சங்கர்.

◆ கல்கி 1.1.95 ''சிரிக்க வைக்கும் பிரதமர்'' தலையங்கத்தில் டி-பிரமோஷன் என்ற சொல் வந்துள்ளது. Promotionக்கு எதிர்மறை demotion என்பதே.

நாகர்கோயில், தெ.ந. மகாலிங்கம்.

◆ கிராமங்களில் நாற்பது லட்சம் எருமைகள் உள்ளன என்று எஸ். பொன்னுசாமி அளித்த தகவலை வெளியிட்டிருக்கிறீர்கள். ஹாரன் அடித்தும் நகராமல் இருக்கும் சுமார் இருபது லட்சம் எருமைகளாவது நகரங்களில் இருக்காதா! எருமைகள் என்றால் எருமைகள் மட்டுந்தானா!

திருச்சி - 20, ஜி. விசுவநாதன். (காவல் துறை டி.எஸ்.பி. - ஓய்வு)

◆ 'தெளிவு' சிறுகதையைப் படித்தவுடன் நான் தெளிவு பெற்றேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஆம், என் தந்தையும் காலில் அடிபட்டு இப்பொழுது குணமாகி வீட்டில் இருக்கிறார். இனிமேல் அவர் நடக்கும் போது/நடக்க முயற்சி செய்யும் போது, கண்டிப்பாகப் பொறுமையுடன் இருப்பேன் எனக் கூறிக் கொள்கிறேன்.

பாண்டிச்சேரி, பி. கிருஷ்ணமூர்த்தி.

வட்டமேஜை

Kalki Shopping Page

ஸ்ரீ மஹா குருக்களான ஸ்ரீ முத்தண்ணாவாளுடைய 102-வது வருஷத்திய ஆராதனை மஹோத்ஸவப்பத்திரிகை

எங்கள் பெரியவாள் சேங்காலிபுரம் ப்ரும்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர்களும் ப்ரும்மஸ்ரீ நாராயண தீக்ஷிதர்களும் ப்ரும்மஸ்ரீ ஆஞ்ஜநேய தீக்ஷிதர்வாளும் நடத்தி வந்த மஹாகுருக்களான ஸ்ரீ முத்தண்ணாவாளின் 102-வது வருஷ ஆராதனை மஹோத்ஸவத்தை பவ வருஷம் தை மாதம் 11-ஆம் தேதி புதன் கிழமை முதல் 13-ஆம் தேதி வெள்ளிக் கிழமை வரை 1995 ஜனவரி 25, 26, 27 ஆகிய மூன்று தினங்கள் வழக்கம் போல் 4 வேத பாராயணம் ப்ரதி தினம் பால் காவடி எடுத்து வாத்ய கோஷங்களுடன் ஸ்ரீ அதிஷ்டானத்தில் மஹன்யாஸ ருத்ராபிஷேகத்துடனும் பாகவத ஸம்ப்ரதாயப்படி பஜனை உஞ்ச வ்ருத்தி ராதா கல்யாணத்துடனும் ஸ்ரீ சுந்தர காண்டத்தை விதிவத்தாய் கலசஸ்தாபனம் செய்து ஸ்ரீ சுந்தரகாண்ட பாராயணத்துடனும் தினமும் மாலை இரவு இரண்டு காலம் ப்ரவசனத்துடனும் வெள்ளிக்கிழமை த்வாதசி அன்று 16 வேத வித்வான்களுக்கு வஸ்திரம் தக்ஷிணை முதலிய உபசாரம் செய்து ஆராதனை தீர்த்த நாராயண பூஜைகளும் நடக்கிறபடியால் ஆஸ்திக பக்தர்கள் பூர்ணமாய் வஸ்திரம் அன்னதானம் தக்ஷிணைதானம் முதலியவைகளுக்கு நன்கு உபசரித்து ஸ்ரீ முத்தண்ணாவாளின் அனுக்ரஹத்தை அடைய வேணுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

ஸ்ரீமுத்தண்ணாவாளின் அனுக்ரஹத்தால் பல பக்தர்களுக்கு வயிற்றுவலி, ஹ்ருதய நோய் மனோ விகாரம் சத்ருபாதை ருணபாதை முதலியவைகள் நீங்கி விவாஹம் புத்ரலாபம் உத்யோகலாபம் வியாபார லாபம் சத்ரு ஜயம் முதலிய க்ஷேமங்கள் ஏற்பட்டுள்ளது.

ஸ்ரீ முத்தண்ணாவாள் அதிஷ்டானத்தில் ப்ரதிதினம் அபிஷேகம் ஆராதனம் நடந்து வருகிறது. ஒருநாள் நித்ய பூஜைக்கு ரூ 50 என்று வைத்துள்ளது.

பக்தர்கள் நாம நக்ஷத்திரம் ராசிகளை எழுதி உபகாரம் செய்து ப்ரஸாதத்தை அடையக் கேட்டுக் கொள்கிறோம்.

உபகாரம் அனுப்ப வேண்டிய விலாஸம் :-
A. லக்ஷ்மீபதி தீக்ஷிதர்
சேங்காலிபுரம் S.O.
Pin-612604
(VIA) மயிலாடுதுறை R.M.S.
நாகை காயிதே மில்லத் மாவட்டம்.

இப்படிக்கு
ச. பாபு தீக்ஷிதர்

குறிப்பு : சேங்காலிபுரம், கும்பகோணம், திருவாரூர் பஸ் மார்க்கத்தில் புதுக்குடி என்ற பஸ் ஸ்டாப்பில் இருந்து வடக்கே ஒரு மைல் தூரம் உள்ளது. கும்பகோணத்திலிருந்து சேங்காலிபுரத்திற்கு No. 3, 60 டவுன் பஸ்கள் உள்ளது.

டிராஸ்ட் பிளாஸ் மூலம்

நிறைப்பலனைக் கொடுக்கும் சேவை



INVITES DEPOSITS

Fixed Deposits will be accepted at the following rates of interest and subject to the terms and conditions as indicated in the form of application of deposit available at the administrative Office and other branch offices of the Company.

DEPOSIT SCHEMES

CUMULATIVE DEPOSIT SCHEME			FIXED DEPOSIT SCHEME		
Period in Months	For Rs. 1000 Deposit Amount Payable on Maturity	Effective Annual Yield	Period in Months	Rate of Interest per annum Monthly	Quarterly
12 Months & 1 Day	Rs. 1150/-	15.00%	12 Months & 1 Day		
24 Months & 1 Day	Rs. 1321/-	16.05%	24Months & 1 Day		
36 Months	Rs. 1518/-	17.27%	36 Months		
48 Months	Rs. 1743/-	18.61%	48 Months	14%	14.16%
60 Months	Rs. 2006/-	20.12%	60 Months		

RECURRING DEPOSIT SCHEME (Minimum Rs. 500/-)			
Period in Months	Rate of Interest Per Annum	Maturity Value (for Rs. 500)	For Every Additional Rs. 100
12 Months & 1 Day	14%	Rs. 6480/	Rs. 1296/
24 Months & 1 Day		Rs. 13915/	Rs. 2783/
36 Months		Rs. 22470/	Rs. 4494/

1. Interest warrants payable at par at all branches of SBI.

Information required to be specified as per Non-Banking Financial Companies (Reserve Bank) Direction, 1977 and Non-Banking Financial Companies and Miscellaneous Non-Banking Financial Companies (Advertisement) Rules, 1977, are given below.

A. Name of the Company : The Investment Trust of India Ltd.

B. Date of Incorporation : 2nd August 1946

C. Business carried on by the Company and its subsidiaries with details of branches or units, if any :
Business: Hire Purchase Financing, Investments, Leasing, Industrial Financing, Mortgage Financing etc.
Subsidiary : I.T.I. Pioneer AMC Ltd. And I.T.I. Capital Markets Ltd.
Branches : Madras, Coimbatore, Dindigul, Erode, Kallakurichi, Madurai, Nagercoil, Salem, Thanjavur, Trichy, Tirunelveli, Tirupur, Tuticorin, Vellore, Karaikal, Pondicherry, Calicut, Cochin, Kottayam, Trichur, Trivandrum, Hubli, Bangalore, Mysore, Hyderabad, Anantapur, Nellore, Proddatur, Rajahmundry, Visakhapatnam, Vijayawada, Bombay, Calcutta, New Delhi, Rajkot, Surat. Regd. Office: 117, Nungambakkam High Road, Madras 600 034.

D. Brief Particulars of the Management of the Company.
The Company is managed by the Managing Director under the supervision, direction and control of the Board of Directors.

E. Name, address & occupation of the Directors.
Mr. B.H. KOTHARI, Chairman & Managing Director, "Kothari Bagh", 11, Nungambakkam High Road, Madras-600 034, Industrialist. Mr. A.L. MUDALIAR, "Avanti", 858, Poonamallee High Road, Kilpauk, Madras - 600 010, Business Executive & Management Consultant. Mr. G.K. SUNDARAM, "Rasakondalu" Circuit House Road, Coimbatore 641 018, Industrialist. Mr. G. CHIDAMBAR, 101-A, Tenalipuri, 2nd St. Off : Velachery Road, Madras 600 032, Former Managing Director-UB". Mr. N. SRINIVASAN, T-18, Sixth Avenue, Besant Nagar, Madras 600 090, Chartered Accountant. Mr. RAM GANAPATHI, No. 27, "Ashok Crescent", D.L.F. Kudap Enclave, Phase 1, Gurgaon, Haryana - 122 001, Former Chairman of IRFR. Mr. C.R. RAMAKRISHNAN, "Meenakshi", No.4, Sir P.S. Sivasamy Road, Mylapore, Madras 600 004, Former Joint Managing Director of Larsen & Toubro Ltd. Mr. M.R.SHAH, A-23/24, Woodlands Apartments, Peddar Road, Bombay 400 026, Business.

ICRA RATING
MAA+
HIGH SAFETY

24 மணிநேரமும் உங்களுக்குக் கிடைக்கும் எல்லாமே மகிழ்ச்சி தரும் என்பதில்லை.

➢ ரிமோட் கண்ட்ரோல் பட்டன்களை அழுத்துவதற்குத் தேவைப்படும் முயற்சியை விட சிறிது அதிகமான முயற்சி எடுத்துக்கொண்டால், நீங்கள் இப்போது இரவு பகலின்றி எந்த நேரமும் ITI -யுடன் தொடர்பு கொள்ளலாம். ஒரே ஒரு டெலிபோன் செய்யுங்கள்.* மறுகணமே நாங்கள் உங்கள் வீட்டுக்கு வந்துவிடுவோம். ➢ உங்கள் பணத்தை ஆண்டுக்கணக்கில் எங்களிடம் நம்பிக்கையுடன் வைக்க விரும்புவதற்கு, எங்களது 24 மணிநேர சேவை மட்டுமே போதுமா? எல்லா வகையிலும் உங்களுக்கு உதவ ITI எப்பொழுதும் காத்திருக்கிறது. எடுத்துக்காட்டாக, உங்களுக்கு இலவச வரி ஆலோசனை** அளிப்பது. ➢ அவசரமாகத் தேவைப்படும்போது உங்கள் டெபாசிட்டை முதிர்வு காலத்துக்கு முன்பே வழங்க உதவுவது. உங்கள் வீட்டுக்கே வந்து உதவி செய்வது. நீங்கள் டெபாசிட் செய்ய எங்களிடம் வரவேண்டிய சிரமத்தைத் தவிர்ப்பது. ➢ எங்களது 36 கிளை அலுவலகங்களின் மூலம் எங்களுடன் எளிதில் தொடர்புகொள்ளும் வசதி அளிப்பது. இக்காரணங்களால்தான் தென்னிந்தியாவிலுள்ள பெரும்பாலான குடும்பங்கள் ITI -யில் முதலீடு செய்வதில் முனைந்துள்ளன. இது நம்பிக்கையின் அடிப்படையில் உருவான மரபு. இன்னும் இப்படி எத்தனையோ. இந்த உதவிகள்தான் ITI-யை சிறப்பாக இயங்கச் செய்கின்றன. ITI எனில் கூடுதலான நன்மைகள்.

A TRADITION OF TRUST
SINCE 1946

தி இன்வெஸ்ட்மென்ட் டிரஸ்ட் ஆஃப் இந்தியா லிமிடெட்.

ஒரு H.C. கோத்தாரி குரூப் கம்பெனி

''மஷ்கூர் பில்டிங்ஸ், 1, கிருஷ்ணமாசாரி சாலை, நுங்கம்பாக்கம், சென்னை-600 034.
தொ.பே: 8276297, 8274885, 8271691, 8274871.*

* *இந்த சேவை சென்னைக்கு மட்டுமே விஸ்தரிக்கப்பட்டுள்ளது. இந்த சேவையால் ஏற்படும் பொறுப்புகளுக்கு ITI பொறுப்பாளி அல்ல.

(F) Profits of the Company before and after making provisions for tax for the three financial years immediately preceding the date of advertisement. (G) Dividend declared by the Company in respect of the said year. (Rupees in lakhs percentage).

	Profit before Depreciation & taxation	Profit before taxation	Profit after taxation	Amount (Rs. in lakhs)	Percentage
	(Rupees in lakhs)				
31-3-94	752.74	434.91	411.91	76.27	35
31-3-93	474.37	307.08	291.08	76.27	35
31-3-92	312.81	187.44	183.19	56.10	28

(H) Summarised financial position of the Company as appearing in the two latest Audited Balance Sheets:

LIABILITIES	31-3-94 (Rs. in lakhs)	31-3-93 (Rs. in lakhs)	ASSETS	31-3-94 (Rs. in lakhs)	31-3-93 (Rs. in lakhs)
Share Capital	217.88	217.67	Fixed Assets	3239.01	2438.88
Reserves & Surplus	1233.51	897.35	Investments	741.13	215.66
Secured Loans	3229.69	2766.40	Current Assets, Loans & Advances	8671.19	6066.06
Unsecured Loans	5290.77	2802.41	Miscellaneous Expenditure	14.79	16.22
Current Liabilities	2535.08	1916.60			
Provisions	159.39	136.39			
	12666.12	8736.82		12666.12	8736.82

Note : Contingent Liabilities not provided for
(i) On partly paid Shares and Debentures Rs. 3.08 lakhs
(ii) Sales tax on lease contracts under writ petitions Rs. 22.35 lakhs

I. The amount which the company can raise by way of deposit under Reserve Bank of India directions Rs. 143.64 crores.
Aggregate of deposits actually held on the last day of the immediately preceding financial year, viz 31-3-94 Rs. 37.88 crores.

J. The Company has no over due deposits other than unclaimed deposits.


K. It is hereby declared that :-
(i) The company has complied with the applicable provisions of the directions.
(ii) The compliance with the directions does not imply that the repayment of deposits is guaranteed by the Reserve Bank of India.
(iii) The deposits accepted by the Company are unsecured and rank pari passu with other unsecured liabilities.

The above text of this advertisement has been approved by the Board of Directors on 27-5-94

(By order of the Board)
For The Investment Trust of India Limited

P.S. Balasubramanian
Chief Executive and Secretary.

Note : A copy of this text duly signed by a majority of the Directors of the Company has been filed with the Reserve Bank of India, Bangalore.



எங்க தலைவருக்கு உடம்பு பத்தாதுன்னு பார்த்தாயா... இந்த ராவுக்கு... உன் இடத்-ச்சாப்பிடுவதற்கு பதிலடிதான் இது....
ராவ்
அப்பாடா! ஒரு வழியா கிழ விட்டு கிடப்பவன் தான் பண்ணிட்டான்... இரட்டைத் தலைவலியில் ஒருபக்கத் தலைவலி சரியாச்சு...!
இந்த ஏரியாவுல கடை விரிக்க அனுமதி கிடையாது... கிளம்பு... கிளம்பு...
தேர்தல் களம்



கல்கி

1995
ஜனவரி 22
பவ
தை 8
மலர் : 53
இதழ் : 25



தமிழ்த்திரு நாடு
தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - பாரதியார்.

தலைவர்களின் பணமா கொள்ளை போகிறது?

கர்நாடகா, ஆந்திரா தேர்தல் தோல்விகள், அர்ஜுன்சிங்கின் அச்சுறுத்தல் போன்றவற்றால் கலங்கிப் போன பிரதமர், "புதிய பொருளாதாரக் கொள்கையில் மாற்றமில்லை" என்று கூறிக் கொண்டே மாற்றங்களைப் பற்றியும் பேசி வருகிறார்! "அயல்நாட்டு முதலீடுகளில் எச்சரிக்கை வேண்டும்"; "மனிதாபிமானத்துடன் கூடிய பொருளாதாரக் கொள்கை தேவை" என்றெல்லாம் தடம் மாறுகிறார். இதை நாம் எதிர்க்கவில்லை, வரவேற்கவே செய்கிறோம். ஆனால் மாறுகிற பாதை, பழையபடி "கட்டுக்கடங்காத ஊதாரித்தனம்" என்ற ஊருக்கு நம்மை அழைத்துச் சென்று விடக் கூடாதே என்ற கவலையும் நம்மை ஆட்கொள்கிறது.

"இருபது அம்சத் திட்டம்" என்றும் "ஏழைமையை ஒழிப்போம்" என்றும் கூறிக் கொண்டு வங்கிகளிலிருந்த மக்களின் பணத்தையெல்லாம் மாட்டுக் கடன் என்றும் கிணற்றுக் கடன் என்றும் மந்திரிகளின் ஆசியோடு அதிகாரிகள் வாரி விட்ட நாட்களை நாம் மறக்கவில்லை. கடன் தருவதைத் திருவிழாவாகக் கொண்டாடிய உலகமகா அதிசயம் இங்கேதான் நடந்தது. அதுவும், "அன்னை இந்திரா கொடுக்கிறார், திருப்பித் தர அவசியமில்லை" என்று சொல்லியே, வோட்டு அறுவடை கருதி கொடுத்த 'கடன்'! ஏழைமை ஒழிந்ததோ?

புதிய பொருளாதாரக் கொள்கையைக் குறைகூறுகிறவர்கள், அது அமுலுக்கு வந்த பிறகு நாளிதழ்களில் சராசரியில் தினம் நாலு தொழிலகங்களுக்கும் இரு விரிவாக்கங்களுக்கும் மக்களிடம் முதலீடு கோரி விளம்பரங்கள் வந்தவண்ணம் இருப்பதைக் கவனிக்க வேண்டும். நான்கைந்து ஆண்டுகளுக்கு முன் இத்தகைய அதிசயத்தை யாரேனும் கண்டதுண்டா? இதற்கு என்ன அர்த்தம்? தனியார் துறையில் அந்த அளவுக்கு வேலை வாய்ப்புக்கள் பெருகுகின்றன என்பதுதான்! நாட்டின் மெய்யான முன்னேற்றமும் இதுதான். அரசிடம் கையேந்தி நிற்காமல் மக்கள் உழைத்து சம்பாதித்து உண்டு உடுப்பதுதான்.

நாடாளுமன்றத்தில் சமீபத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பொருளாதார அறிக்கையும் தொழில் உற்பத்தி பற்றிய அறிக்கையும் முன்னெப்போதும் இந்நாடு கண்டிராத அளவில் துரிதமான முன்னேற்றத்தை உறுதிசெய்கின்றன. இதனால்தான் கர்நாடகத்தின் ஜனதாதள முதல்வர் தேவேகௌடா கூட, "புதிய பொருளாதாரக் கொள்கையை ஏற்கிறோம்" என்கிறார்.

சில குறைகள் இருக்கத்தான் செய்கின்றன. முக்கியமாக விலைவாசி உயர்வு –அதிலும் அத்தியாவசியப் பண்டங்களில். எத்தனையோ முன்னேறிய - சுதந்திரப் பொருளாதாரத்துக்கு முதலிடம் தருகிற - அமெரிக்காவில் கூட, ஒப்புநோக்க உணவுப் பண்டங்களின் விலை மிகக் குறைவாக இருக்குமாறு அரசு கவனித்துக் கொள்கிறது. ஓர் ஓட்டலில் அறை எடுப்பது ரொம்பச் செலவாகலாம்; ஆனால் ரொட்டி ரொம்ப மலிவு, அவ்வாறே பால், வெண்ணெய், ஆப்பிள் போன்றவை. இதை யோசித்து, இங்கேயும் சில எளிதான சீர்திருத்தங்களைச் செய்தால் மக்கள் வயிற்றில் பால்! கஷ்டமேயில்லை.

என்னதான் தனியார் துறைக்கு ஊக்கம் என்றாலும் மிக அதிக வேலை வாய்ப்புக்களை அரசுதான் உருவாக்க முடியும். உற்பத்திப் பொருள்களைத் தனியார்வசம் விட்டு விட்டு அரசு, அடிப்படை வசதிகளைப் (மின் உற்பத்தி, சாலைகள், கல்வி, நீர்ப்பாசனம் போன்றவை) பெருக்கும் போதுதான் கணக்கற்ற வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்துகிறது. இவையெல்லாம் நாளைய லாபத்துக்காக இன்று செய்யப்படும் முதலீடு என்ற கருத்தில் அரசு, சிக்கனமாக மக்களின் வரிப் பணத்தைக் கையாண்டு சின்சியராகச் செயல்பட வேண்டும்.

ஆனால் நடப்பது என்ன? தமிழ் மாநாடு என்ற பெயரால் கோடிக் கணக்கான ரூபாய்கள் விரயமாகிறது; சுருட்டப்படுகிறது. இதைத் தட்டிக் கேட்க வேண்டிய பிரதமரோ, தனி விமானத்தில் பறந்து வந்து திரும்பி, செலவுக்கு மேல் செலவு வைக்கிறார்! இப்படி எத்தனையோ விதங்களில் நடக்கும் ஊதாரித்தனம், பணவீக்கத்தையும் விலைவாசி உயர்வையுமே உண்டாக்கும். இது மக்களுக்குப் புரியக் கூடாது என்று தானே அவர்களை எழுத்தறிவு கூட இல்லாதவர்களாக வைத்திருக்கிறார்கள்!



உப்புப் பெறாத விஷயமில்லீங்க!

அயோடின் கலந்த உப்பை மட்டுமே விற்க வேண்டும் என்கிற தமிழக அரசின் உத்தரவு, பெரிய சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

"காலங் காலமாக, சாதாரண உப்பைத்தான் பயன்படுத்தி வருகிறோம். எங்களுக்கு எந்த குறைபாடுகளும் இல்லை. எதற்காக எங்கள் மீது அயோடின் உப்பைத் திணிக்கிறீர்கள்" என்று பொது மக்கள் பத்திரிகைகளில் கடிதம் எழுதிக் கொண்டிருக்கிறார்கள்.

"அயோடின் உப்பு மட்டுமே விற்க வேண்டுமென்றால் எங்கள் தொழிலே நசித்து விடும்" என்று சிறு உப்பள உரிமையாளர்கள், உப்பு உற்பத்தி மையமான தூத்துக்குடியில் உண்ணாவிரதம், தர்ணா, மறியல் என்று களத்தில் இறங்கியிருக்கிறார்கள்.



• சிறு உப்பள உரிமையாளர்கள் என்ன செய்வார்கள்...?



• ஐயோடின் சத்து இல்லாததால் மூளை வளர்ச்சி குன்றிய சோகம்...!

சில மருத்துவர்களோ, "உடலில் ஏற்கெனவே அயோடின் சத்து உள்ளவர்கள் அயோடின் உப்பைப் பயன்படுத்தத் துவங்கினால், மோசமான விளைவுகள் ஏற்படும்" என்று கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள்.

என்னதான் விஷயம்?

" 'அயோடின்' என்பது மனிதனுக்கு மிகக் குறைந்த அளவில் தேவையான ஒரு சத்து (micro nutrient) இந்தச் சத்து உடலில் இருந்தால்தான் கழுத்துப் பகுதியில் உள்ள தைராய்டு சுரப்பி வேலை செய்யும். இதிலிருந்து சுரக்கும் தைராக்ஸின் என்ற திரவம், உடலின் முக்கியச் செயல்பாடுகளுக்கு அவசியத் தேவை. உடலில் அயோடின் குறையும்பட்சத்தில், தைராக்ஸின் சுரப்பதும் குறையும். விளைவு: கழுத்தில் வீக்கம் (கழலை) ஏற்படும்.

"இந்த வீக்கம் அயோடின் இல்லாததால் ஏற்படும் கண்ணுக்குத் தெரிந்த குறைபாடு மட்டுமே. தவிர, உடல் முழு வளர்ச்சியடையாமை, மந்தபுத்தி, காது கேளாமை, மாறு கண், கருவிலேயே சிசு இறப்பது போன்ற குறைபாடுகளும், உடலில் அயோடின் சத்து இல்லாததால் ஏற்படக்கூடும்" என்று சொல்கிறார் புதுடெல்லி அகில இந்திய விஞ்ஞானக் கழகத்தின் மருத்துவ விஞ்ஞானி டாக்டர் சி. எஸ். பாண்டவ்.

நம்முடைய உடலின் செயல்பாடுகளுக்கு, தினசரி நமக்குத் தேவை 150 மைக்ரோ கிராம் (ஊசி முனை அளவு) அயோடின் சத்துதான். மிஞ்சிப் போனால் ஒரு மனிதனின் ஆயுட் காலத்தில் அவனுக்கு ஒரு டீஸ்பூன் அளவு அயோடின் போதும்.

"இந்தச் சிறிய அளவு அயோடின் சத்து உடலுக்குக் கிடைக்க வேண்டுமென்பதற்காக அயோடின் உப்பை ஏன் சாப்பிட வேண்டும்? நாம் சாப்பிடும் உணவு, காய்கறிகள், தண்ணீர்

மூலம் அந்தச் சத்து நமக்குக் கிடைக்காதா?" என்ற நியாயமான கேள்வி எழுப்பப்படுகிறது.

"முன்பெல்லாம் இமய மலைப்பகுதிகளில் மட்டுமே மண்ணில் அயோடின் சத்து இல்லாத நிலை இருந்தது. ஆனால் இப்போது சமவெளிப் பகுதிகளும் மண்ணில் அயோடின் சத்தை இழந்து கொண்டிருக்கின்றன. அதிகப்படியான ரசாயன உரங்கள் பயன்படுத்தியது, வெள்ளத்தால் ஏற்பட்ட மண் அரிமானம், காடுகள் அழிக்கப்பட்டது போன்றவை தாம் இதற்குக் காரணம். இப்படிப்பட்ட நிலையில் இந்த மண்ணிலிருந்து விளையும் உணவு, காய்கறிகளில் அயோடின் சத்து இருப்பதில்லை. முன்பு மலைப்பகுதி மக்களை மட்டுமே தாக்கி வந்த அயோடின் குறைபாடுகள், சமவெளி மனிதர்களையும் தாக்கத் துவங்கி விட்டன. சமீபத்தில் நடத்தப்பட்ட ஒரு ஆய்வின்படி இந்தியாவில் கிட்டத்தட்ட எல்லா பகுதிகளுமே அயோடின் பற்றாக்குறைப் பகுதிகளாக இருப்பது தெரிய வந்தது. இதன் காரணமாகத்தான் அயோடின் உப்பு விநியோகத்தைக் கட்டாயமாக்குகிறோம். ஏழை, பணக்காரன், என்ற எந்தவித வித்தியாசமுமின்றி மக்களைச் சென்றடைவது உப்பு ஒன்றுதான். அதனால்தான் அதன் மூலம் அயோடின் மக்களுக்குப் போய்ச் சேர வழிவகை செய்கிறோம்" என்று விளக்குகிறார், இந்திய அரசின் உப்புத் துறை ஆணையாளர் ஆர். பிரகாஷ்.

"அரசு வேகமாச் செயல்பட வேண்டிய அவசியம் இருக்கிறது. நமது நாட்டில் சுமார் 70 லட்சம் குழந்தைகள் அயோடின் சத்து இல்லாததால் மூளை வளர்ச்சி குன்றி இருக்கிறார்கள்" என்கிறார்.

ஆனால் சிறு உப்பள அதிபர்களும், வியாபாரிகளும், "அயோடின் கலந்த உப்பு தயாரிக்க கலவை இயந்திரங்கள் (Iodisation Plants) வாங்க வேண்டும். குறைந்தபட்சம் லட்ச ரூபாய் ஆகும். அதற்கு நாங்கள் எங்கே போவது?" என்கிறார்கள். "இது திடீரென்று அமுல்படுத்தும் திட்டம் அல்ல. குறைந்தபட்சம் எங்களுக்கு மூன்றாண்டு அவகாசம் கொடுங்கள்" என்று கேட்கிறார் தூத்துக்குடி தன்பாடு உப்பு ஏற்றுமதி வியாபாரிகள் சங்கத் தலைவர் எஸ். கைலாசம்.

இதற்கிடையில், "ஏற்கெனவே உடலில் அயோடின் சத்து உள்ளவர்கள் அயோடின் உப்பைச் சாப்பிட்டால் கூடுதல் அயோடினால் விபரீத விளைவுகள் ஏற்படும்" என்ற கருத்தை சூரத் மருத்துவக் கல்லூரி பேராசிரியை திருமதி விகாஸ்தேசாயும், சென்னை மருத்துவக் கல்லூரி பேராசிரியை திருமதி விஜயா கணபதியும், மறுத்து அறிக்கை விட்டிருக்கிறார்கள். "நமது நாட்டில் உப்பில் அயோடின் கலக்கும் அளவு 30 பி.பி.எம். தான் (அதாவது பத்து லட்சத்தில் முப்பது பங்கு) மக்களிடம் உப்பு போய்ச் சேரும் போது அதுவே 15 பி.பி.எம்.மாகக் குறைந்து விடும். இந்த நிலையில் நாம் அன்றாடம் சமையலுக்குப் பயன்படுத்தும் சொற்ப அளவு உப்பினால் எந்த ஆபத்தும் வராது. அப்படியே கூடுதல் அயோடின் நமது உடலில் சேர்ந்தாலும், உடல் தனக்குத் தேவையானதை எடுத்துக் கொண்டு மீதியை கழிவாக வெளியே அனுப்பிவிடும்" என்கிறார்கள் அவர்கள்.

இந்த சர்ச்சைகள், ஒரு பக்கம் இருந்தாலும், 'டாக்டரைக் கலந்தாலோசித்து மக்கள் தாங்கள் விரும்பியதைத் தேர்ந்தெடுக்க சுதந்திர உரிமை வேண்டாமா?' என்ற கேள்விக்கு திருப்திகரமான பதில் இல்லை. அயோடின் உப்புக்கு அரசு பிரசாரம் செய்யட்டும்; ஆனால் கட்டாயமாக்க அவசியம் என்ன?

— கௌசல்யா

அடுத்த இதழில்....



●● பெண்கள் சம உரிமை — பேச்சோடு சரிதானா?

— பிரபலங்கள் அலசுகிறார்கள்

●● ஃபைவ் ஸ்டார் சிறைச் சாலை!

அபாயம்!



அறை எண்-10

புஷ்பா தங்கதுரை

1

மணிக்கு என்பது கொடுப்பதை முள் காட்டியது. அந்த இரவில் இருட்டு அடர்த்தியில் கார் வியூகமிட்டு ஓடியது. நாற்பது நிமிடங்கள் சென்ற பிறகு கார் இஞ்சின் துண்டிக்கப்பட்டது.

புற நகரிலுள்ள 'மோகன் வில்லா' பங்களாவில் கார் ஓசையில்லாமல் நுழைந்தது.

கார்ஷெட் கதவுகளை மெள்ள மூடி பிருதிவி வெளிப் பரப்பில் நின்றான்.

மூச்சு இன்னும் இரைத்தது. பரந்த ஆகாய வெளி அவன் மீது குளிர் காற்றைப் பூசியது.

முகப்பை அடைந்தான். பதற்றம் நீங்கவில்லை. துவாரத்தில் சாவியைச் சரியாகப் பொறுத்த முடியவில்லை. இரண்டு மூன்று முறையில் கதவைத் திறந்தான்.

உள்ளே போனதும் ஏதாவது சப்தம் கேட்கிறதா என்று பார்த்தான்.

கப்சிப் நிசப்தம்.

ஹாலின் வலது ஓரம் இரண்டு மடிப்புடன் மாடிப்படி. மூச்சை மெல்லிதாக்கி ஏறினான். மேலே பெட்ரூம் கதவு சில டிகிரிகள் திறந்திருக்க, தரையில் ஒரு கீறல் வெளிச்சம் வெள்ளிக் கம்பி போல கிடந்தது. புத்தகம் படித்தவாறே ரமா தூங்கி இருப்பாள், என்று நினைத்தான். கதவை கவனமாகத் திறந்தான். அவன் உள்ளே போகவும், அவள் எதேச்சையாகப் புரண்டு கண் விழிக்கவும் சரியாக இருந்தது.

அவளது ஆராய்ச்சி பார்வை, அவனுருவத்தையும் சுற்றுப்புரத்தையும் பார்த்தது. அவளது இளம் கண்களில் இருந்த தூக்க மயக்கம் மெள்ள விலகியது. நீண்ட நெளிகளுடன் கூந்தல் தலையணை ஓரம் வழிய, சின்னப் புன்னகை விரிய, பார்ட்டி ரொம்ப சாதாரணம் போல! குடிச்ச மாதிரி தெரியலையே! என்றாள்! லேசாக அதில் அவள் கேலி தொனித்தது. அவன் அதைப் பொருட்படுத்தவில்லை. டையைத் தளர்த்தினான். சட்டையை நெகிழ்த்தினான். விரல்களின் பதற்றம் இன்னும் தீரவில்லை. அதை மறைக்க விரும்பினான்.

-பிருதிவி! இதென்ன? 'டை பின்', எங்கே? அழகான ப்ரூச் ஆச்சே! தொலைச்சாச்சா? என்றாள் அவள்.

கலவரத்துடன் விருட்டென்று டையைப் புரட்டினான். கண்கள் அங்கிங்கும் சுழன்றன.

-போச்சா! உங்க பர்த்டேக்கு ஆசையா கொடுத்தேன். பி.ஆர். என்கிற இனிஷியல் ரொம்ப அழகா பதிஞ்சிருந்தது!

அவள் சொல்லிக் கொண்டே போக, அவன் அதைக் கேட்டதாகத் தெரியவில்லை. கோட் பையில் கையைச் செலுத்தினான். பாண்ட் பையை இழுத்துப் பார்த்தான். சட்டை பாக்கெட்டைக் குடைந்தான். 'அட கடவுளே!' என்று சொல்லி, கட்டில் முனையில் உட்கார்ந்து தலையில் கை வைத்தான்.

-ஏன் என்னாச்சு? என்றாள் ரமா திடுக்கிட்டு.

பிருதிவியின் முகம் அப்படி மாறிவிட்டது.





அவன் ஒன்றும் பேச வில்லை! தன் முகத்தைக் கைகளால் மூடினான்! தாங்காதது போல் தலையை ஆட்டினான்.

அவள் படபடத்தாள். – என்ன விஷயம்? பிருதிவி! சொல்லுங்க!

பிருதிவி முகத்தைத் தூக்கினான்.

–ரமா! இப்போது நான் ஒரு சிக்கல்லே மாட்டிக் கிட்டேன்.

–என்னவாம்?

–உண்மையைச் சொல்றேன். நீ கோபிச்சுக்காதே! இன்னிக்கு ஜே.வி. மீட்டிங்னு சொன்னேன். அது பொய்.

–ஓ! அப்படியா? அப்போ என்ன விஷயம்?– அவன் தொனியில் சந்தேகம் பிரதிபலித்தது.

–அருணாவைப் பார்க்கப்போனேன்!

நிமிர்ந்து அவனை ஒரு முறை பார்த்தாள்.

–'ஓ' என்று ஒரு இழுப்பு இழுத்தாள்.– அவளை இன் னும் மறக்கலையா?....

எரிச்சலோடு திரும்பினான். –இந்தப் பாரு, ரமா! நம்ப கல்யாணத்துக்கு அப்புறம் அவளைப் பார்த்தது கூடக் கிடையாது! நீ வேறே குழப்பாதே!

–இந்தப் பாருங்க! நீங்க கத்திப் பேசினா அது உண்மை ஆயிடாது! பெங்களூரில் இருந்து இங்கே வந்து நாலுநாளா ஸ்ரீபெரும்புதூர் மோட்டல்லே தங்கி இருக்கான்னு தெரி யும்! விச்ராந்தி மோட்டல் தானே?

–எப்படித் தெரியும்?

–அங்கே தங்கினவா யாரோ சொன்னாங்க! உங்களை யாரும் உளவு பார்க்கலை

சட்டென்று திரும்பினான்– நாலு நாளா இருக்கிறாளா? எனக்கு அது கூடத் தெரியாது! இன்னிக்குத்தான் போன் செஞ்சா! 'நான் ரொம்ப இக்கட்டிலே இருக்கேன்; அவசி யம் வந்து பாருங்க'ன்னு சொன்னா! எனக்குப் போக விருப்பமில்லை. ஆனா அவசியம்னு அவ வற்புறுத்தினா. அதனாலே போனேன். நீ சொன்னபடி அருணா மூணு நாளைக்கு முன்னாடியே வந்தாச்சுன்னு வச்சுக்க, நான் அவளைப் பார்க்கப்போனேனா பார்த்தியா!...

–நானும் கவனிச்சேன்! மூணு நாளா கரெக்டா வீட் டுக்கு வந்துட்டீங்க! மகிழ்ச்சிதானே! ஆனா இன்னிக்கு ஏன் அந்தச் சபலம்?

–கேளு! ஏதோ இக்கட்டுன்னு சொல்லிக் கூப்பிட்ட தினாலே போனேன்.

–எல்லாரையும் விட்டுட்டு உங்களை ஏன் கூப்பிடணும்?

–என்னைத்தானே தெரிஞ்சிருக்கு!... அஞ்சு வருஷமா என்கிட்டே தானே வேலை பார்த்தா... நானும் போகாம இருக்க முடியுமா? சந்தேகப் படாதே! இப்போ பெரிய சிக்கல்! தவிக்கிறேன்.

–என்ன சொல்லுங்க?

–ஏழு மணிக்குத்தான் அங்கே போனேன். நல்லா குடிச்சிருந்தா!

–குடிப்பாளா?

–எனக்கும் ஆச்சரியந்தான்! முன்னாடி குடிச்சதில்லை. அவ ளுக்கு என்ன சங்கடம்னு சீக் கிரம் தெரிஞ்சுக்க நினைச்சேன். ஆனால் அவள் சரியான நினைப்பிலே இல்லை. ஹிஸ்டீ ரியா! கத்தினா! அரற்றினா! சரியா பேச முடியலை. படுக்கை யிலே சாஞ்சிட்டா! அரைமணி, ஒரு மணியிலே சரியாயிடும், அப் புறம் பேசலாம்னு நினைச்சேன். சோபாவிலே சாய்ஞ்சேன்.

புழுக்கமா இருந்திச்சு. கோட் டையும், சட்டையையும் அவிழ்த் தேன். அப்படியே தூங்கிப் போயிட்டேன்.



"இந்த 'பில்'லை பாஸ் பண்ணித்தர எவ்வளவு சார் எதிர்பார்க்கிறீங்க?"

"ஒரு 10/- ரூபா கொடுங்க யோசிச்சி சொல்றேன்!".

— சீர்காழி வி.ரேவதி



மெய்மறந்து தூங்கி இருக்கேன்.

கண்ணைத் திறந்தபோது மணி ஒண்ணைத் தாண்டியாச்சு! ஒரே தலைவலி. 'திக்'குன்னு ஆயிடுச்சு! அவள் கீழே விழுந்து கிடக்கிறா! அந்தச் சத்தந்தான் என்னை எழுப்பியிருக்கு! தரைக்கு நேரே முகம் அறைஞ்சிருக்கு. மூக்கில் அடிபட்டு கொஞ்சம் ரத்தம் வந்திருக்கு! எழுப்பிப் பார்த்தேன். முடியலை. அவளைத் தூக்கி படுக்கையிலே போட்டேன்.

அவள் முகத்தைப் பார்த்தேன். நிறம் மாறி இருந்திச்சு! நீலம் பாரிச்சிருந்திச்சு! மூச்சு ரொம்பக் கொஞ்சமா வந்திச்சு! கடைசி மூச்சு மாதிரி. எனக்கு ஒரே பயம்! அடுத்த அறை சின்ன அறை! எட்டிப் பார்த்தேன். அதிலே ஒரு மண்ணெண்ணெய் விளக்கு திகு திகுன்னு எரிஞ்சிட்டிருந்திச்சு! கரெண்ட் இல்லைனா, உபயோகத்துக்காக அது இருந்தது! ஒரே புகையாக் கக்கி எரிஞ்சிட்டிருக்கு. விளக்கை அணைச்சேன். புகையை ரொம்ப நேரம் சுவாசிச்சதிலே ஆபத்து வந்திருக்கணுமின்னு நினைச்சேன். இந்தச் சமயத்திலே அங்கே நான் இருக்க விரும்பலை.

கதவு, சன்னல் எல்லாத்தையும் திறந்துவச்சேன். அப்படியே அந்த பத்தாம் நம்பர் காட்டேஜை விட்டு வெளியே வந்துட்டேன்.

காரை எடுத்தேன். யாரும் பார்க்கலை! சாலைக்கு வந்து வேகமாகப்போக ஆரம்பிச்சேன்.

ஆனா மனசிலே யோசனை! அவள் பிழைச்சாலும் பிழைச்சுடுவா! அவளுக்கு உதவி தேவை! அதைச் செய்யாமல் போகிறோமேன்னு நினைச்சேன். வழியிலே ஒரு பப்ளிக் டெலிபோன் இருந்திச்சு. அதிலே போய் போலீசைக் கூப்பிட்டு விச்ராந்தி மோட்டல்லே 10-ஆம் நம்பரைக் பாருங்கன்னு சொன்னேன்! நான் யாருன்னு சொல்லலை! நேரே இங்கே வந்தாச்சு...



பிருதிவி எழுந்து அருகிலிருந்த நீரை எடுத்துக் குடித்தான்.

-ரமா! என்னை நம்பறியா!... என்று கேட்டான் அவன்.

அதில் ஆதங்கமும் தாபமும் தொனிப்பது அவளுக்கு நன்றாகத் தெரிந்தது. அவன் மீது அனுதாபமே ஏற்பட்டது.

-பிருதிவி! உங்களை நான் பூரணமா நம்பறேன். இப்போ அந்த 'பின்' அங்கே விழுந்துட்டதா?

-அதான் என் கவலை ரமா! அது அங்கே கிடந்து, அவளும் இறந்து கிடந்தாள்னா வேறே வினை வேண்டாம். என் பெயர் சந்தியிலே வந்துடும்.

அவள் யோசித்தாள்.

-சரி! இதுக்குள்ளே அந்த காட்டேஜுக்கு யாரும் வந்திருக்க மாட்டாங்களே!

-மாட்டாங்க!

-நீங்க உடனே போய், போன சுவடு தெரியாம எடுத்திட்டு வந்துடுங்க!

-போகட்டுமா?

குழப்பத்தில் நிமிர்ந்து பார்த்தான்.

-உடனே போங்க!

வெளியே இன்னும் குளிர் ஏறி இருந்தது. காரை எடுத்து மெதுவாகச் சாலைக்குக் கொணர்ந்தான். சிறிது தூரம் கடந்த பிறகு வேகத்தை அழுத்தினான். கார் விரைந்தது.

ரமா இப்படி 'புரிந்து கொள்ளும்' நிலையில் இருப்பாள்

என்று அவன் நினைக்க வில்லை. அருணா அவனது கம்பெனியில் அவனுக்கு பி.ஏ. ஆக வேலை செய்தவள். அவள் மீது அவனுக்குப் பெரிய ஆர்வம் இருந்தது. அதை ஒரு சமயம் வெளியிடப் போய்..

ஸார்! நான் ஏற்கெனவே இன்னொருத் தரை லவ் பண்றேன் ஸார்! என் கல்லூரி காலத் தோழன் ஸார்! சாதாரணக் குடும்பம்! வசதி வந்தப்புறம் திருமணம் பண்ணிக் கிறேன்னு அவன் சொன்னான். அதுக்காகக் காத்திட்டிருக்கிறேன்! அவரை என்னாலே பிரிய முடியாது! மன்னிச்சுடுங்க! என்று சொல்லி விட்டாள்.

உண்மையில் ஒரு வருஷம் கழித்து வேலையை ராஜினாமா செய்து காதலனைத் தேடி பெங்களூர் போய் விட்டாள்.

பிருதிவியும் அவள் நினைப்பை விட வேண்டி வந்தது. பிறகு ரமாவைத் தேர்ந் தெடுத்துத் திருமணம் செய்து கொண்டான். அருணாவைப் பின்னர் நினைத்தது கூட இல்லை.

மெயின் சாலையில் போக்குவரத்து நிறைய இல்லை. இரு பக்கமும் மரங்கள் ஆடிக்கொண்டு அவன் முன்னே வந்தன. 30 நிமிடங்களுக்குப் பிறகு மோட்டலின் பரந்த ஒளி, விசிறி போல வானத்தில் தெரிந்தது.

அதைப் பார்த்தவுடனே மனசில் குபுக் என்று ஒரு கொத்து துயரம் மேகம் போல் படர்ந்தது.

அருணா உயிரோடு இருப்பாளா?

அந்தக் கேள்விதான் பூதமாக எழுந்தது!

ஒரு வேளை உயிர் போயிருந்தால்....

பெரிய பிரச்னை ஆகி விடுமே!... அவளை யார் யார் பார்க்க வந்தார்கள்? யார் யாருக்கு அவள் போன் செய்தாள்?

பிருதிவியை யாராவது அடையாளம் காட்டி விட்டால்.... எல்லாமே போயிற்று. அல்லது அவனது காரையாவது அடையா ளம் சொல்லி விட்டால்... போச்சு!

எப்படியும் பிரச்னை அவன் மீது விழ சந்தர்ப்பம் உண்டு!

அவனது பழைய 'காதலி' அவள் என்று சிலர் சொல்லிவிட வாய்ப்பும் உண்டு.

கார் மோட்டலை நெருங்கியது.

யாருமில்லாத பெரிய கேட்!

மோட்டலின் விஸ்தாரமும் அதிகம். அங்கங்கே காட்டேஜ்கள் மரங்களிடையே சிதறிக் கிடந்தன.

ஒரு மையத்தில் மோட்டலின் ஆபீஸ்!

உள்ளே தைரியமாக நுழைந்தான். இடது பக்கம் ஒடித்து, மரங்களிடையே மிருதுவாக நழுவிப் போனான்.

ஒரு பெரிய மரத்தின் அடியில் நின்றான். இறங்கினான்.

'சில்' என்று இரைச்சல்.

மரங்களிடையே ஏகமாக இருட்டு. மெள்ள நடந்து சற்று தூரத்தில் நின்றான்.

பத்தாம் நம்பர் காட்டேஜ் தெரிந்தது.

அதிசயம்! அதன் அருகே யாருமில்லை!

சொல்லப்போனால் அவன் எதிர்பார்த் தபடி அங்கே சந்தடிகள் எதுவுமில்லை. இங்கே அருணா பற்றிய விஷயம் யாருக்கும் தெரிந்ததாகத் தெரியவில்லை. போலீசுக்குப் போன் செய்தானே! அவர்களும் எதுவும் செய்ததாகத் தெரியவில்லை. அவ்வளவு சீக்கிரம் நடவடிக்கை எடுப்பார்களா, என்ன?

ஆபீஸ் பக்கம் தான் எப்போதும் போல வெளிச்சம் குவிந்திருந்தது.

காட்டேஜ் நோக்கி நடந்தான்.

நெருங்க நெருங்க மனம் திக் அடித்தது.

காட்டேஜ் நிசப்தமாக நின்றது.

அதன் வாசல் பக்கம் வந்தான்.

கதவு அவன் திறந்து விட்டபடி அப் படியே கிடந்தது. விளக்கு தான் இல்லை. உள்ளே சப்தமே இல்லை. அடி அடியாகப் போனான்.

விளக்கு ஸ்விட்சைப் போட விரும்பி னான். நடு அறையில் சுவர் பக்கம் போவ தற்கு முன்,

பளிச்சென்று வெளிச்சம் எதிர்பாராமல் கொட்டியது.

திடுக்கென்று திரும்பினான்.

அங்கே திடகாத்திரமாக நிற்கும் அந்தக் காக்கிச் சட்டையை அவன் புரிந்து கொண் டதும், உடம்பில் ஒரு நடுக்க அலை ஓடியது.

- நீங்க யாரு? என்றான் பிருதிவி, குழறிக் கொண்டு.

-போலீஸ்! நீங்க யாரு? ஏன் இங்கே வந் தீங்க? என்று அந்த ஆசாமி அதட்டலாகக் கேட்டான்.

-இந்த ரூம்லே ஒரு பெண் இருந்தாங்க! அவளைப் பார்க்க வந்திருக்கேன் என்றான் அவன்.

குரலில் படபடப்பு வந்து விட்டது.

-அவ இல்லை! நீங்க வாங்க என்னோடு.

-எங்கே?

-மோட்டல் ஆபீசுக்கு! அங்கே இன்ஸ் பெக்டர் இருக்காரு!

(தொடரும்)



"இதோ போறானே அவன் எதை இலவசமாக் கொடுத் தாலும் வாங்கிப்பான்."


"எப்படிச் சொல்றே?"

"ஸ்கூட்டர்ல நேரே போக வேண்டியவன் Free Left turn ன்னு போர்டை பார்த்ததும் உடனே திரும்பிட்டான்..."

– ராதா வாசுதேவன்



மோட்டார் சைக்கிள் பரிசுப் போட்டி - 20



தை பிறந்தால் வழி பிறக்கும்! 'படத்தைப் பார்த்தால் தெரிகிறதே!' என்பீர்கள். ஆனால் படத்தில் வழி தவறி நுழைந்து விட்ட பத்து விஷயங்கள் உள்ளன. கல்யாண வீட்டுக்கு அன்னியமான அந்த பத்து விஷயங்களையும் தேடிப் பிடித்து கூப்பனில் உள்ள இடத்தில் எழுதுங்கள். கூப்பனைத் தனியே கத்தரித்து வைத்துக் கொள்ளவும். 26 போட்டிகளும் முடிந்த பின் அனைத்து கூப்பன்களையும் அனுப்புங்கள். அதிகப் போட்டிகளில் கலந்து கொண்டு அதிகச் சரியான விடைகள் எழுதும் ஒருவருக்கு மோட்டார் சைக்கிள் பரிசு. ஆறுதல் பரிசுகளும் உண்டு. ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

வழி தவறி வந்தவை : 1........................ 2........................ 3........................
4........................ 5........................ 6........................ 7........................
8........................ 9........................ 10........................

என் பெயர் : ....
விலாசம் : ....
....
....

TV '95

சின்னத் திரையில் ஓர் அரிய சங்கமம்!

ரொம்பவும் மும்முரமாக நடந்து கொண்டிருக்கும் சாட்டிலைட் டெலிவிஷன் போட்டியில் இப்போது சோவும் குதிக்கிறார். தனியாக அல்ல; கங்கை அமரனையும் சேர்த்துக் கொண்டு! குதிக்க வைத்திருப்பவர்கள் பின்னி குரூப் நிறுவனத்தினர்.

ஏற்கெனவே தமிழ் நிகழ்ச்சிகளை வழங்கிக் கொண்டிருக்கும் மற்ற சாட்டிலைட் டெலிவிஷன்களிலிருந்து இது எந்த வகையில் மாறுபட்டிருக்கப் போகிறது?

"எங்கள் நிகழ்ச்சிகளில் செய்திகளும் இருக்கும்!" என்று ஆரம்பிக் கிறார் சோ. "அரசியல் விமர் சனம், பிரச்னைகள் பற்றிய விவாதங்கள், நகைச்சுவைக்கு சத்தசபை (சட்டசபை நினைவுக்கு வந்தால் அதற்கு சோ பொறுப்பல்லவாம்!) நிகழ்ச்சிகள் என்று ஏராளமான அம்சங்கள் இருக்கின்றன" என்கிறார்.

"அப்படியானால் சினிமா நிகழ்ச்சிகள் இருக்காதா?"

"அதற்குத்தானே கங்கை அமரன்!" என்கிறார் சோ.

"சினிமா நிகழ்ச்சிகளில் அப்படியென்ன புதுமை செய்யப் போகிறீர்கள் அமரன்?"

"'கதைவிடும் நேரம்', 'ட்ரெண்ட் மாறிப் போச்சு', 'நான் கெடுத்த பாடல்...' என்று நிறைய நிகழ்ச்சிகள்!"

"உதாரணத்திற்குச் சிறிது விளக்குங்களேன்..."


"பல்வேறு சினிமாக்களின் காட்சிகளை ஒன்றாகத் தொகுத்து, அதுவே ஒரு புது கதை சொல்கிற ஒரு புது சினிமா மாதிரி அமைக்கப் போகிறோம். ஏற்கெனவே இருக்கும் பாடல் காட்சியை எடுத்துக் கொண்டு, பாடலின் இசையை மட்டும் சிறிதளவு மாற்றி, பழைய காட்சி - பழைய பாடலைப் புதிய இசையில் தரப் போகிறோம். இதுபோல் இன்னும் ஏராள விஷயங்கள்!" என்கிறார் கங்கை அமரன்.

நாட்டு நடப்புகள், அரசியல், நகைச்சுவை போன்ற விஷயங்களுக்கான பொறுப்பு முழுக்க முழுக்க சோவுடையது. சினிமா சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிப் பொறுப்புகள் முழுவதும் கங்கை அமரனுடையது.

"ஒருவருக்கொருவர் ஆலோசனை வழங்கிக் கொள்வோமே தவிர, டாமினேட் செய்து கொள்ளமாட்டோம்!" என்கிறார்கள்.

துக்ளக் ஆசிரியர் சோவுக்கும் டெலிவிஷன் நிகழ்ச்சிகளை வழங்கப் போகும் சோவுக்கும் என்ன வித்தியாசம்?

"துக்ளக்கில் நான் வாசகர்களை நேருக்கு நேர் சந்திக்க முடியாது. டெலிவிஷன் நிகழ்ச்சிகளில் நேருக்கு நேர் சந்திக்கப் போகிறேன். துக்ளக்கில் எப்படி மாற்றுக் கருத்துக்களுக்கும் இடமுண்டோ, அதே போல் எனது டெலிவிஷன் நிகழ்ச்சிகளிலும் நிறைய இடமுண்டு ஆயினும் இது விஷுவல் துக்ளக்காக இருக்காது!" என்கிறார் சோ.



'**கோ**ல்டன் ஈகிள் கம்யூனிகேஷன்ஸ்' (G.E.C.) என்கிற இந்த டெலிவிஷன் நிகழ்ச்சிகள், ரிம்சாட் ஜி$_2$ (Rimsat G_2) என்னும் அமெரிக்க சாட்டிலைட் மூலம், வரும் பிப்ரவரி 27-ம் தேதியிலிருந்து ஒளி பரப்பாகப் போகின்றன. நிகழ்ச்சிகளை இங்கே தயாரித்தாலும் ஒளிபரப்பப்படும் இடம் சிங்கப்பூர்.

சபாஷ், சரியான போட்டி!

- பிரின்ஸ்

படம் : கேமரா திருஞானம்

கனவு தேசத்து ராஜகுமாரன்

பா. ராகவன்

தரையிலிருந்து இரண்டரை இன்ச் உயரத்தில் கிருஷ்ணமூர்த்தி மிதந்து கொண்டிருந்தான். வழக்கத்துக்கு மாறாக 'இன்' பண்ணியிருந்த சட்டையை அடிக்கடி குனிந்து பார்த்துக் கொண்டான். புது வாட்ச் கனத்த கையில் இரவு மணி ஏழு. தொடுகிற தூரத்தில் புது மனைவி. யதேச்சையாகக் கூடத் தொட முடியாதபடிக்குச் சுற்றமும் நட்பும் கையைக் குலுக்கிக் குலுக்கிக் குலுக்கிக் கொண்டிருந்தார்கள். வண்ணக் காகிதங்கள் சுற்றிய சின்னப் பரிசுப் பொருட்கள் ஒன்றன்மேல் ஒன்றாய் அருகே சோபாவில் உயர்ந்து கொண்டிருந்தன.

மினிமம் பட்ஜெட் திருமணத்தை எடுத்துச் சொல்லும் அடர்த்தி குறைந்த மாலையை கிருஷ்ணமூர்த்தி சரி செய்து கொண்டான். லோக்கல் மெல்லிசைக் கலைஞர்கள் முக்காபுலாவில் முஸ்தீபாயிருக்க, பட்டுப் புடைவைகள், குறுக்கும் நெடுக்கும் அலைபாய்ந்தன.

கடவுளுக்கு நன்றி சொல்ல வேண்டும். கலியுகத்தில் தனக்கும் கல்யாணம் என்கிற வைபவம் கைகூடும் என்கிற கற்பனையையே அவன் விட்டு வெகு நாட்கள் ஆயிற்று. முப்பத்திரண்டு வயதுக்குக் கூடுதலாகவே முடி உதிர்ந்ததில், முன் நெற்றி வழுக்கையை 'புத்தி விசாலம்' என்று அம்மா சமாதானப் படுத்தினாள். சமீப நாட்களில் மீசையிலும் ஓரிரு நரை எட்டிப் பார்க்க ஆரம்பித்திருக்கிறது. ஓவர்-டைம், வாழ்வின் ஓர் அங்கமாகிப் போக, கண்ணாடியின் பவர் ஏறியிருக்கிறது. முதல் தங்கையின் திருமணத்தோடு அவன் டிரெஸ் பண்ணிக் கொள்கிற வழக்கத்தை விட்டிருந்தான். கண்ணாடி முன் நிற்கும் நேரத்தையும் காசாக்க முடிகிறது. அடுத்தவள் தயாராயிருந்தாள். ஒரு சௌகர்யம். வரன் பார்க்கும் வேலையை அவள் வைக்கவில்லை. வாரேவா! சுப்பிரமணிய ஐயருக்குப் பத்மனாப முதலியார் சம்பந்தியா? தூள்! அந்தப் புரட்சித் திருமணத்தை நடத்தியதுடன் தனக்கு ரிடையராகிற வயசாகிவிட்டது போல் உணர்ந்தான்.

வாழ்க்கையில், பொறுப்புகள் மிக்க முதல் பிள்ளையாய்ப் பிறப்பதைவிட வேறு சோகம் இருக்க முடியாது என்று தோன்றியது அவனுக்கு. கனவு காண்பது கூடத் தவறு என்று முகத்துக்கு நேராய் விரல் நீட்டிப் பேசும் யதார்த்த பூதத்தை சுலபத்தில் புறங்கையால் ஒதுக்கிவிட முடியாது என்று தோன்றியது.

கல்லூரி நாட்களில் எல்லோரைப் போலவும் தனக்கு வரப் போகிறவளைப் பற்றிய கனவு அவனுக்கும் இருந்தது. மங்கலான ஓர் உருவம். சற்றே குள்ளமாக, வெளுத்த தாவணியும் இரட்டைப் பின்னலும். படபடக்கும் விழிகள். உதிரும் புன்னகைப்பூ. வெட்கச் சிவப்பு. நொடிக்கொரு சிலிர்ப்பு.

கனவுகள் எத்தனை அழகானவை? புனிதமானவை? நிஜம் மட்டும் ஏன் முற்றிலும் மாறுபட்ட தோற்றம் தருகிறது?

கிருஷ்ணமூர்த்தி நிமிர்ந்து, அருகிலிருந்த விஜயலட்சுமியைப் பார்த்தான். மூக்கு, கண், காது, வாய் எல்லாம் அந்தந்த இடத்தில் செவ்வனே இருந்தன. குறை சொல்ல முடியாதுதான். ஆனால் அந்த ரெட்டைப் பின்னல் தேவதையுடன் ஒப்பிடுவது சாத்தியமில்லை. ஆனால் கடவுளுக்கு நன்றி சொல்லித்தானாக வேண்டும். தேவதை இல்லாவிட்டாலும் அவனுக்கென்று ஒரு பெண் கிடைத்திருக்கிறாள். முழுசாக, பிரத்தியேகமாக. இது எவ்வளவு பெரிய விஷயம்!

கிருஷ்ணமூர்த்தி மாலையைக் கழற்றி வைத்தான். சுற்றமும் நட்பும் டைனிங் ரூமில் சப்தம் பண்ணிக் கொண்டிருந்தார்கள். மெல்லிசைக்காரர்கள் நாற்காலிகளுக்குப் பாடிக் கொண்டிருந்தார்கள். ஹால் ஓரளவுக்குக் காலி ஆகவும், கிருஷ்ணமூர்த்தி விஜயலட்சுமியுடன் கொஞ்சம்போல் பேசிப் பார்ப்பது என்று முடிவு செய்தான்.

"ரொம்ப டயர்டா இருக்கு இல்லை?"

"உம்."

"பொம்மை மாதிரி இப்படி நிக்கறது

என்னவோ மாதிரி இருக்கு எனக்கு."

"......"

"டோன்ட் யூ ஃபீல் லைக் தட்?"

சட்டென்று வந்த ஆங்கிலத்தில் அவள் மிரண்டு போனாள்.

"நான் எஸெஸ்ஸி ஃபெயில்."

"ஸாரி, ஸாரி - சே, மன்னிச்சிக்கோ."

"ஐயோ, பரவாயில்லை."

மேலும் என்ன பேசுவதென்று அவனுக்குப் புரியவில்லை. ஆனால் நிறையப் பேச ஆசைப்பட்டான். பிடித்தது, பிடிக்காதது, தெரிந்தது, தெரியாதது, புரிந்தது, புரியாதது.

நெஞ்சு வரை விஷயங்கள் அலைமோதினாலும் மொழி சிக்க மாட்டேனென்கிறது. முழுசாக ஒரு பெண். எனக்காக! எனக்கே எனக்காக! ஆயிரம் பொன் மட்டும் கிடைத்திருந்தால் ஒருவேளை தருமி இப்படியான உணர்ச்சியில்தான் இருந்திருப்பானாயிருக்கும்.

கிருஷ்ணமூர்த்தி அறிந்தவரை பெண்கள் மூவகைப்படுவர். ஒன்று அம்மா இனம். வேளைக்குச் சோறு போட்டு அறிவுரைகளால் குளிப்பாட்டுபவர். இரண்டு, தங்கை இனம். செலவுகளுக்காக நூதன வழிகளைச் சிருஷ்டிப்பவர்கள். மூன்று, டைப்பிஸ்ட் இனம். தொடர்கதைகளுக்கிடையே அவ்வப்போது வேலையும் பார்ப்பவர்கள்.

இதில் எந்த வகையிலும் சேராத ஒரு புதிய இனம் இன்று அவனுக்குப் புலனாகி இருக்கிறது. அதிகாரபூர்வமாக அவனும் ஒரு குடும்பத் தலைவனாகி இருக்கிறான்.

"என்னடா, மாப்ளே ரெடியா?"

அலுவலக நண்பன் ரங்கராஜன். கூடவே மணிவண்ணன், ஸ்டீஃபன், சாமியார் சுந்தர்ராஜன், சுப்புடு.

"இன்னும் எவ்ளோ நேரம் நிக்கப் போறே? நெக்ஸ்ட் ஷோவுக்கு ரெடியாக வேணாம்?"

விஜயலட்சுமி நாணத்தால் சாம்புதலுற்றுத் திரும்பி நிற்க, "சும்மார்றா!" என்றான்



கிருஷ்ணமூர்த்தி.

"தின்னது போதும், வா."

"எங்கடா?"

"மொட்டை மாடிக்கு."

"எதுக்கு?"

"சிஸ்டர் முன்னாடி சொல்ல முடியாது. வான்னா வந்துடு."

மேலும் அவர்களைப் பேசவிடாமல் விஜய லட்சுமியை, வெளியே வந்த ஒரு மாமியுடன் அவர்கள் பகுதிக்கு அனுப்பிவிட்டு கிருஷ்ண மூர்த்தி கிளம்பினான்.

கிளாஸ் எடுப்பார்கள். அனுபவஸ்தர்கள். தெரியும். குறுகுறுப்பு இருப்பினும் சந்தோஷ மாகத்தானிருக்கிறது.

முதலிரவு. அது எப்படி இருக்கும்? பால் தம்ளருடன் உள்ளே வரும் பெண். ஓர் ஓரத்தில் அதை வைத்துவிட்டு, கால் தொட ஒரு சின்ன பிரயத்தனம். ஆணாகப்பட்ட வன் தடுத்து, தூக்கி மெள்ள அணைப்பான். உடன், கேமரா இரண்டு பறவைகள் அல்லது கேலண்டர் பொம்மையில் போய் நிற்கும் ஸோ கால்டு சினிமா முதலிரவுகள். கிருஷ்ண மூர்த்திக்குத் தெரியாததில்லை. நிஜம் எப் போதும் வேறு முகம்தான் அணிந்திருக்கும்.

"தபார் கிருஷ்ணமூர்த்தி. உனக்கோ ரொம்ப நாள் கழிச்சி கல்யாணமாகியிருக்கு. சிஸ்டரைப் பார்த்தா பயந்த சுபாவமாத் தெரி யுது. பார்த்து நடந்துக்க, சொல்லிட்டேன்."

"சும்மா பயமுறுத்தாத சுப்பு. பாரு மூர்த்தி, மொதல்ல பேசு. நல்லா பேசு. புரிஞ் சிக்க ட்ரை பண்ணு. அன்பா பேசு. உங்க வீட்டு நிலவரம் பத்திப் பேசாத. அவங்க மனுஷாளப் பத்திக் கேளு. சிஸ்டருக்கு என்ன பிடிக்கும், என்ன பிடிக்காதுன்னு தெரிஞ்சிக்க முதல்ல. கம்பீரமா இரு. வழிஞ்சி டாத. அது ரொம்ப முக்கியம்."

கிருஷ்ணமூர்த்தி, வாழ்க்கையில் முதல் முறையாக வெட்கப்பட்டான். இது ஓர் அனு பவம். அதிகம் வெளிக்காட்டிக் கொள்ள முடியாத சந்தோஷங்கள் கொப்பளிக்கும் அனுபவம். கடவுளே, இத்தனை நாள் கழித் தாவது இதைச் சாத்தியமாக்கியமைக்கு நூறு வந்தனங்கள்.

"சம உரிமை வேணாம் வாத்யாரே! ஒரு ஸ்டெப் கீழயே வெச்சிக்க. அதான் பெட்டர். இல்லாட்டா என்னை மாதிரி கஷ்டப் படுவே" என்றான் ஸ்டீஃபன்.

"அவன் சொல்றதைக் கேக்காத மாமு. அவன் பூட்ட கேஸ். பொண்ணுங்களை புஷ்பம் மாதிரி வெச்சிக்கணும். ஐ மீன், தலைமேல. அப்பத்தான் பூவுக்கும் மரியாதை. தலைக்கும் அழகு."

வார்த்தைகள். வெறும் வார்த்தைகள் செவியில் மோத, கிருஷ்ணமூர்த்தி வேறு லயிப்பில் இருந்தான். எப்படிப் பேச ஆரம் பிப்பது? எதிலிருந்து ஆரம்பிப்பது? உட் கார்ந்தபடியா? நின்றபடியா? தொடலாமா? உடனே வேண்டாம். மிரண்டுவிடக் கூடும். அருகில் அமர வைத்து, ஆதரவாய் ஒரு பார்வை. அங்கே ஆரம்பிக்க வேண்டும்.

ஒரு கிருஷ்ண கானம்

வானத்தில் —
வண்ணம் தோய்த்த
தூரிகையை உதறியது
எந்தக் கை.

பட்டாம் பூச்சி சிறகுகளில்
கம்ப்யூட்டர் கிராஃபிக்ஸ்
போட்ட விரல்கள்
எந்த விரல்கள்.

ஆடுகள் மாடுகள்
குதிரைகள் யானைகள்
என்று மேகங்களால்
அந்தி வானத்தை
மந்தை வெளியாய்
ஆக்கியது யார்.

பல்லவனில்
பல்லைக்கடித்துக்



தவறியும் ஆங்கிலம் கலக்கக் கூடாது. பீத்தல் எம்காம். அழுக்கு லெட்ஜர்களைக் கட்டிக் கொண்டு அழுதது தவிர வேறென்ன சாதிக்க முடிந்திருக்கிறது அதனால்? விஜயலட்சுமி, எஸ்.எஸ்.எல்.ஸி. ஃபெயில். அதனாலென்ன? பெண்ணுக்குப் படிப்பா முக்கியம்? பெண்மை முக்கியம். மென்மை முக்கியம்.

யாரோ வந்து கூப்பிட்டார்கள். அரட்டையிலும் களவிலும் நேரம் போனது தெரியவில்லை. மாமனார் போட்ட கடிகாரம், மணி பதினொன்று என்றது. கிருஷ்ணமூர்த்திக்கு அலுப்பாயிருந்தது. நண்பர்களிடம் சொல்லிக் கொண்டு, சத்திரத்தின் முதல் மாடிக்கு வந்தான். முன்னதாக அறை வாசலில் மாமிகள் கூட்டம். அதிசயமாய் சந்தோஷப் பார்வையில் ஒதுங்கி நிற்கும் தங்கைகள் மற்றும் அம்மா. அசட்டுச் சிரிப்புடன் தோள் தட்டிப் போகும் அப்பா. அர்த்தமில்லாமல் சிரித்துக் குசுகுசுக்கும் மாதரசிகள். கடவுளே, இதென்ன இக்கட்டான கட்டம்? இப்போது நான் என்ன செய்ய வேண்டும்?

விஜயலட்சுமியை நான்கு பேர் கைப்பிடித்துக் கூட்டி வந்தார்கள். வெட்கத்தில் அவள் கூடுதல் அழகாய்த் தெரிந்தாள். கிருஷ்ணமூர்த்திக்குச் சட்டென்று வயிற்றில் இனம் புரியாத பயச்சுருள் எழுந்து நின்றது. மாமிகள் கிடைத்த வாய்ப்பை நழுவ விடாமல் கோரஸாகப் பாட ஆரம்பித்தார்கள். கீழ்த்தளத்திலிருந்து தலைகள் அண்ணாந்து பார்த்தன.

கடவுளே, எப்போது உள்ளே அல்லது வெளியே ஓட அனுமதிப்பார்கள்?

விஜயலட்சுமி கெட்டிக்காரி. சட்டென்று அவன் கைப்பிடித்து உள்ளே நுழைந்து, கதவை அடைத்தாள்.

கிருஷ்ணமூர்த்திக்கு நிம்மதியாய் இருந்தது. வெளியே இன்னும் பாட்டுச் சப்தம் கேட்டுக் கொண்டிருந்தது. அவன் மெல்ல நடந்து கட்டிலில் அமர்ந்தான்.

“உட்கார்.”

என்ன பேசுவது?

பாட்டு ஓய்ந்தபாடில்லை. விஜயலட்சுமி கொட்டாவி விட்டாள்.

“தூக்கம் வர்றதா?”

“ம்ஹூம்.” அவசரமாய் மறுத்தாள்.

“டயர்டா இருக்கா?”

“உம்.”

“ஹோமப்புகை ஒத்துக்கலை. ஃபேனை பெரிசா வைக்கட்டுமா?”

“உம்!”

அவள் நகர்ந்து, கட்டிலின் மையத்துக்கு வந்து சாய்ந்து உட்கார்ந்தாள்.


“தப்பில்லை. கொஞ்சம் படுத்து ரெஸ்ட் எடுத்துக்கோ. வெளியிலே கச்சேரி முடியட்டும்.”

அவள் சிரித்தாள். கொஞ்சம் தயங்கி, பின் படுத்துக் கொண்டாள்.

கிருஷ்ணமூர்த்தி எழுந்து நாற்காலிக்கு வந்து உட்கார்ந்தான். மாமிகளின் பாடலின் உக்கிரம் குறைந்தபாடில்லை. ஏன் இப்படி இம்சிக்கிறார்கள். ஒரு புனிதமான விஷயத்தை ஏன் கேலியில் கொச்சைப்படுத்துகிறார்கள்? உணர்வு பூர்வமான அணுகுமுறைக்கு அமைதி முக்கியம். இப்படி அலறினால் தலைதெறிக்க ஓடத் தோன்றாதோ?

கிருஷ்ணமூர்த்தி கண்ணை மூடிப் பல்லைக் கடித்தான். ஒருவழியாகத் தொண்டை வறண்டு மாமிகள் கலைந்து செல்ல, நிம்மதியாய் எழுந்து தாழ்ப்பாள் சரி பார்த்தான். விளக்கை அணைத்து, பின் வந்து கட்டிலில் மென்மையாய் அமர்ந்து அவளைப் பார்த்தான்.

களைப்பு, முகத்தில் பளிச்சென்று தெரிய விஜயலட்சுமி தூங்கிப் போயிருந்தாள். அவனுக்கு எழுப்ப மனம் வரவில்லை. புடைவையை ஒதுக்கிவிட்டு, போர்வையை இழுத்துப் போர்த்தினான். சற்று இடைவெளி விட்டு, தானும் படுத்துக் கொண்டான். சின்ன விளக்கின் மெல்லிய வெளிச்சத்தில் அவள் தூங்குவதை வெகுநேரம் பார்த்துக் கொண்டே இருந்தான்.



கடித்துக் கொண்டு
தயிர் சாத டப்பாவில்
தன்னைச் சுருட்டிக் கொண்டு
தினம் தினம்
பயணம் போகும்
நிழல் உருவங்களின்
‘கார்ட்டூன்களை’
நகர்த்துவது யார்?

அவசரம்
அசுரவேகம்
என்ற கசாப்புக்
கத்தியின் கீழ்
நகர்ந்து கொண்டிருக்கும்
இந்த எறும்பு வரிசைகளுக்கு
சுவடு பதிப்பது யார்?

— மின்னற் பீலியன்

ஆரோக்கியத்தோடு நீண்ட காலம் வாழவேண்டுமா ?



அப்படியானால் ...

அஸ்வினி ஹோமியோ ஹேர் ஆயில்

பாட்டிலுடன் இலவசமாக கிடைக்கும் பாக்கெட் டெசிபோன் இன்டெக்ஸிலுள்ள சுகாதார முறைகளை படித்து, பின்பற்றி ஆரோக்கியத்துடன் வாழுங்கள்.

உங்கள் அபிப்பிராயங்களை எங்களுக்கு எழுதி தெரியப் படுத்துங்கள்.

தலை தைலங்களில் சிறந்தது அஸ்வினி ஹோமியோ ஹேர் ஆயில்



- லட்சக் கணக்கான மக்களின் தலைமுடி பிரச்சனை களைத் தீர்த்து, தலைவலியை அகற்றி, ஆந்திரப் பிரதேசத்தில் முதன்மை இடத்தை அடைந்துள்ளது.
- தமிழ்நாடு, புதுவை, கர்நாடகா மாநிலங்களில் வெற்றிச் சங்கை முழங்குகிறது.
- தூய தேங்காய் எண்ணெய் மற்றும் பாரம்பரிய மான ஹோமியோ மருந்துகளோடு தயாரிக்கப் பட்டது.
- தலைமுடி உதிராமலும், வெள்ளையாக மாறாமலும் தடுக்கிறது.
- அடர்த்தியான, மிருதுவான, ஆரோக்கியமான கூந்தல் வளர உதவுகிறது.
- பிசுக்கற்றது. மூளைக்கு குளிர்ச்சியை தருகிறது.
- உச்சந்தலைவலியை போக்கிவிடுகிறது.

விற்பனைக்கு விடுவோர் :

அஸ்வினி ஹோமியோ & ஆயுர்வேதிக் பிராடக்ட்ஸ் லிமிடெட்

மூஸாபேட், ஐதராபாத் 600 018

அமரர் கல்கி

பார்த்திபன் கனவு

16. செண்பகத் தீவு

விக்கிரமன் கரையை நெருங்க நெருங்க, கடல் அலைகளின் ஓசையையும் அடக்கிக் கொண்டு பலவித வாத்தியங்களின் ஒலி முழங்குவதைக் கேட்டான். சங்கு, தாரை, எக்காளம், மத்தளம், பேரிகை ஆகியவை ஏக காலத்தில் முழங்கி வான முகடு வரையில் பரவி எதிரொலி செய்தன. இவ்வளவு சப்தங்களுக்கிடையில், மாந்தர்களின் குரலில் கிளம்பிய கோஷம் ஒன்று விக்கிரமனுக்கு மயிர்க் கூச்சல் உண்டாக்கிற்று. "வீரவேல்! வெற்றிவேல்!" என்னும் கோஷம்தான் அது.

அந்தத் தீவில் வாழும் மனிதர்கள் என்ன ஜாதி, யாரோ, எப்படிப்பட்டவர்களோ, என்ன பாஷை பேசுபவர்களோ, ஒருவேளை நரமாமிச பட்சணிகளாய்க் கூட இருக்கலாமல்லவா? - என்று இவ்விதமெல்லாம் எண்ணமிட்டுக் கொண்டிருந்த விக்கிரமனுக்கு, அங்கு எழுந்த, ''வீரவேல், வெற்றிவேல்!'' என்னும் சோழ நாட்டின் வீரத் தமிழ் முழக்கமானது அளவிலாத வியப்பையும் மகிழ்ச்சியையும் ஊட்டிற்று.

"இது என்ன அதிசயத் தீவு? இங்கே சோழ நாட்டுத் தமிழரின் முழக்கம் கேட்கும் காரணம் என்ன? எதற்காக இவ்வளவு ஜனக்கூட்டம் இங்கே கூடியிருக்கிறது?" - இம்மாதிரி எண்ணங்கள் முன்னைக் காட்டிலும் அதிவிரைவாக விக்கிரமனுடைய உள்ளத்தை அலைத்தன. அவனுடைய நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது. திடீரென்று உடம்பில் வெலவெலப்பு உண்டாயிற்று. மரக்கட்டை பிடியினின்று நழுவிற்று. தலை சுழலத் தொடங்கியது. கண்பார்வை குன்றியது. அதே சமயத்தில் ஒரு பிரம்மாண்டமான அலை வந்து விக்கிரமன் மீது பலமாக மோதியது. விக்கிரமனுக்கு அந்த நடுப்பழுந்துப கடலிலுள்ள நீர் அவ்வளவும் புரண்டு வந்து தன் மீது மோதுவதாகத் தோன்றிற்று. ஒரு கணம் மூச்சுத் திணறிற்று. "நமது வாழ்நாள் முடிந்து விட்டது'' என்று நினைத்தான் விக்கிரமன். பார்த்திப மகாராஜாவுக்கு அவன் அளித்த வாக்குறுதி நினைவுக்கு வந்தது. அன்னை அருள் மொழித்தேவியின் கருணை முகமும், சிவனடியாரின் கம்பீரத் தோற்றமும், கடைசியாக விரிந்து படர்ந்த கண்களுடன் கூடிய அந்தப் பெண்ணின் மதிவதனமும் ஒன்றன்பின் ஒன்றாகவும் மின்னலைக் காட்டிலும் விரைவாகவும் தோன்றி மறைந்தன. பிறகு, அவனுடைய அறிவை ஒரு மகா அந்தகாரம் வந்து மூடிவிட்டது.

விக்கிரமனுக்கு மறுபடியும் பிரக்ஞை வந்தபோது, தான் மணல் தரையில் கிடப்பதாக அவனுக்கு உணர்ச்சி உண்டாயிற்று. கண்கள் மூடியபடி இருந்தன. கடல் அலைகளின் 'ஓ' என்ற ஓசை காதில் கேட்டுக் கொண்டிருந்தது. நெற்றியில் யாரோ திருநீறு இடுவது போல் தோன்றியது. மெதுவாகக் கண்ணை விழித்துப் பார்த்தான். சுற்றிலும் ஜனக் கூட்டம் நெருங்கி நிற்பது தெரிந்தது. ஒரு நொடிப் போதில் எல்லாம் ஞாபகத்துக்கு வந்தன. அவன் கரையை நெருங்கிய போது அந்த ஜனக் கூட்டத்திலிருந்து கிளம்பிய வாத்திய முழக்கங்களும் வாழ்த்தொலிகளும் இப்போது கேட்கவில்லை. இதற்கு மாறாக அசாதாரணமான நிசப்தம் குடிகொண்டிருப்பதை அவன் உணர்ந்தான். கொஞ்ச தூரத்தில் எங்கேயோ மாஞ்சோலையில் குயில் ஒன்று 'குக்கூ' 'குக்கூ' என்று கூவிற்று. அந்தக் குயிலின் இனிய குரல் அங்கே குடிகொண்டிருந்த நிசப்தத்தை அதிகமாய் எடுத்துக் காட்டிற்று. கரையை நெருங்கிய போது தனக்கு நேர்ந்த விபத்தின் காரணமாகவே

அங்கே கூடியிருந்த ஜனங்கள் அவ்வளவு கவலையுடன் நிசப்தமாயிருக்கிறார்கள் என்பதை அறிந்து கொண்டான். ஒரு பெரும் பிரயத்தனம் செய்து உடம்பை உதறிக் கொண்டு ஒரு குதிகுதித்து எழுந்து நின்றான். அவ்வளவுதான். அந்த ஜனக் கூட்டத்திலிருந்து ஒரு மகத்தான ஆனந்த கோஷம் கிளம்பிற்று. வாத்திய முழக்கங்களுடன் கூட, மனிதர்களின் கண்டங்களிலிருந்து எழுந்த வாழ்த்தொலிகள் போட்டியிட்டு ஆகாயத்தை அளாவின.

இவ்வளவு சப்தங்களுக்கும் மத்தியில் விக்கிரமனுக்கு அருகில் கவலை தோய்ந்த முகத்துடன் நின்ற ஒரு பெரிய மனிதர், "விலகுங்கள்! விலகுங்கள்! கஜராஜனுக்கு வழி விடுங்கள்!" என்று கூவினார். கொஞ்சம் கூர்ந்து கவனித்தோமானால் இந்த மனிதரை நாம் முன்னமே பார்த்திருக்கிறோம் என்பது நினைவு வரும். ஆமாம்; மாமல்லபுரத்தில் நடந்த கலைத் திருநாளின் போது நரசிம்ம சக்கரவர்த்தியின் சமூகத்தில் செண்பகத் தீவு வாசிகளின் விண்ணப்பத்தைச் சமர்ப்பித்த தூதர்தான் இவர்!

"விலகுங்கள்" என்ற அவருடைய குரலைக் கேட்டுச் சுற்றிலும் நின்ற ஜனங்கள் விரைவாக விலகிக் கொண்டார்கள். சற்றுத் தூரத்தில் பட்டத்து யானையைப் போல் அலங்கரித்த ஒரு யானை நின்றது. அதை யானைப் பாகன் நடத்திக் கொண்டு விக்கிரமன் நின்ற இடத்தை நோக்கி வந்தான். பட்டணப் பிரவேசத்துக்காக அலங்கரிக்கப் பட்டது போலக் காணப்பட்ட அந்த கஜராஜனுடைய தூக்கிய துதிக்கையில் ஓர் அழகான புஷ்பஹாரம் இருந்தது. விக்கிரமன் மந்திர சக்தியினால் கட்டுண்டவனைப் போல் யானையைப் பார்த்தபடி கையைக் கட்டிக் கொண்டு அசையாமல் நின்றான். யானை மிகவும் சமீபத்தில் நெருங்கி வந்த போது விக்கிரமனுடைய சிரம் அவனை அறியாமலே சிறிது வணங்கிற்று. யானை தன் துதிக்கையில் ஏந்தி வந்த மாலையை அவனுடைய கழுத்தில் சூட்டிற்று.

அப்போது அந்த ஜனக்கூட்டத்தில் ஏற்பட்ட ஆரவாரத்தையும் முழக்கங்களையும் வர்ணித்தல் அசாத்தியமான காரியம். "வீரவேல்!" "வெற்றிவேல்!" என்னும் கோஷங்களுடன், "விக்கிரம சோழ மகாராஜா வாழ்க!" "செண்பக நாட்டு மன்னர்பிரான் வாழ்க!" என்னும் கோஷங்களையும் கேட்டு, விக்கிரமனுடைய உள்ளம் பெருங்கிளர்ச்சியடைந்தது. மகா ஆச்சரியம் விளைவித்த இந்தச் சம்பவங்களைப் பற்றி யாரிடமாவது கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டுமென்று அவனுக்குத் துடிப்பாயிருந்தது. ஆனால் அருகில் நின்றவர்களிடம் பேசுவதற்குக் கூட அச்சமயம் அவனுக்கு அவகாசம் கிடைக்கவில்லை.

ஏக ஆரவாரங்களுக்கிடையில், விக்கிரமனை அந்த யானையின் மீது அமைந்திருந்த அம்பாரியில் ஏற்றினார்கள். யானை கடற்கரையிலிருந்து உள்நாட்டை நோக்கிக் கம்பீரமாக நடந்து செல்ல, ஜனக்கூட்டமும் ஆரவாரத்துடன் அதைப் பின்தொடர்ந்து சென்றது. அம்பாரியின் மீது வீற்றிருந்த விக்கிரமனோ, "இல்லை; இதெல்லாம் நிச்சயமாக உண்மை இல்லை, கனவுதான் காண்கிறோம்; அல்லது இந்திரஜாலம், மகேந்திரஜாலம் என்று சொல்லுகிறார்களே அப்படி ஏதாவது இருக்க வேண்டும்" என்று அடிக்கடி எண்ணிக் கொண்டான்.

சுற்றுமுற்றும் அவன் கண்ணில் பட்ட தென்னந் தோப்புகள், மாஞ்சோலைகள், கழனிகள், கால்வாய்கள் எல்லாம் அவனுக்குச் சோழநாட்டுக் காட்சிகளாகவே புலப்பட்டன.

சிறிது தூரம் போன பிறகு ஒரு கிராமம்

அருள்வாக்கு

பிரம்மச்சாரி, தான் மட்டில் தன் ஆச்ரம தர்மத்தைப் பண்ணுகிறான்; ஸந்நியாஸியும் அப்படியே. இல்லறம் நடத்துகிற க்ருஹஸ்தாச்ரமி மட்டும் தனியாளாக இல்லாமல் பத்னியுடன் சேர்ந்தே தன் தர்மத்தை, கர்மங்களைப் பண்ண வேண்டும் என்று சாஸ்திரம் வைத்திருக்கிறது. புருஷன் - மனைவி இருவருக்கும் இது பொதுச் சொத்து. பத்னி இருக்கிற க்ருஹஸ்தனுக்கு மட்டுமே யாக யக்ஞாதிகளை சாஸ்திரத்தில் வைத்திருக்கிறதே தவிர, பிரம்மசாரிக்கும் ஸந்நியாஸிக்கும் இவை இல்லை. இந்திரிய ஸௌக்யத்துக்காக மட்டுமே பத்னி என்றால், பத்னி இறந்துவிட்டால் ஒருத்தன் யக்ஞம் பண்ணக் கூடாது என்று வைத்திருக்குமா? அவள் பக்கத்தில் நின்றால்தான் இவன் யக்ஞம் பண்ணலாம். கர்த்தாவாக அவளே நேரே யக்ஞம் பண்ண 'ரைட்' இல்லை என்பதை மட்டும் கவனிக்கும் பெண்-விடுதலைக்காரர்கள், அவள் இல்லாவிட்டால் இவனுக்கும் அந்த 'ரைட்' போய்விடுகிறது என்பதையும் கவனிக்க வேண்டும். வேதத்திலேயே இப்படி விதித்திருக்கிறது. ("பத்நீவதஸ்ய

தென்பட்டது. அதுவும் தமிழ்நாட்டுக் கிராமமாகவே தோன்றியது. ஊருக்குப் புறத்திலிருந்த கிராம தேவதையின் கோவிலும் அப்படியே தமிழர் கோவிலாகக் காட்சி தந்தது.

இன்னும் சிறிது தூரம் போனதும் ஒரு பட்டணம் காணப்பட்டது. அதன் வீடுகள், வீதிகள், சதுக்கங்கள் எல்லாம் உறையூரின் மாதிரியிலேயே அமைந்திருந்தன. ஆனால் அவ்வளவு பெரிய பட்டணமில்லை. அவ்வளவு ஜனநெருக்கமும் கிடையாது. அத்தனை மாட மாளிகைகள், கூட கோபுரங்களும் இல்லை. அப் பட்டணத்தின் வீதிகளில் அவரவர் வீட்டு வாசல்களில் நின்ற ஸ்திரீகள், புருஷர்கள், குழந்தைகள் எல்லாரும் சிறந்த ஆடை ஆபரணங்களை அணிந்து மலர்ந்த முகத்துடன் நின்றார்கள். அவர்கள் எல்லாரும் தமிழ்நாட்டு மக்களாகவே காணப்பட்டார்கள். அளவிலாத ஆர்வம் பொங்கிய கண்களுடன் அவர்கள் விக்கிரமனைப் பார்த்துப் பலவித வாழ்த்துக்களினால் தங்களுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

விக்கிரமனுக்குத் திடீரென்று ஒரு சந்தேகம் உதித்தது. ஒருவேளை இதெல்லாம் அந்தப் பல்லவ சக்கரவர்த்தியின் கபட நாடகமாயிருக்குமோ? தன்னை ஏற்றி வந்த கப்பல் பல நாள் கடலில் பிரயாணம் செய்வதாகப் பாசாங்கு செய்து விட்டுக் கடைசியில் சோழ நாட்டின் கடற்கரையிலேயே தன்னை இறக்கி விட்டிருக்குமோ? இந்த ஆரவார ஊர்வலமெல்லாம் தன்னை ஏமாற்றிப் பல்லவ சக்கரவர்த்தியின் ஆதிக்கத்தை ஒப்புக் கொள்ளும்படி செய்வதற்கு ஒரு சூழ்ச்சியோ! இவ்விதமாக எண்ணிய போது விக்கிரமனுக்குக் கோபம் பொங்கிக் கொண்டு வந்தது.

இதற்குள் யானையானது அந்தப் பட்டணத்துக்குள்ளேயே பெரிய மாளிகையாகத் தோன்றிய ஒரு கட்டடத்துக்கு வெளியே வந்து நின்றது. விக்கிரமனை யானை மீதிருந்து கீழே இறக்கினார்கள். ஜனக் கூட்டமெல்லாம் வெளியில் நிற்க, முன்னமே நமது கவனத்துக்காளான பெரியவர் மட்டும் விக்கிரமனை அழைத்துக் கொண்டு மாளிகைக்குள் சென்றார்.

"மகாராஜா! இதுதான் இந்தச் செண்பக நாட்டின் மன்னர்கள் பரம்பரையாக வாழ்ந்து வந்த அரண்மனை. தாங்களும் இந்த அரண்மனையில் வசிக்க வேண்டுமென்பது இந் நாட்டுப் பிரஜைகளின் விண்ணப்பம்" என்றார் அப் பெரியவர்.

"இந் நாட்டின் பெயர் என்னவென்று நீங்கள் சொன்னீர்?"

"செண்பக நாடு மகாராஜா!"

"இந்தப் பட்டணத்தின் பெயர் என்னவோ?"

"செண்பக நாட்டின் தலைநகரம் இது. இதன் பெயர் குமாரபுரி."

"குமாரபுரிதானே? மாயாபுரி அல்லவே?"

"இல்லை, அரசே! குமாரபுரிதான்."

"நீர் யார் என்று கொஞ்சம் சொன்னால் நன்றாயிருக்கும்."

"அடியேன் பெயர் சித்தார்த்தன். காலஞ்சென்ற விஷ்ணு வர்த்தன மகாராஜாவுக்கு நான் முதல் மந்திரி. தங்களுக்கு விருப்பம் இருந்தால்...."

"என்ன சொன்னீர், மந்திரி என்றீரா? மந்திரவாதி என்றீரா?"

"மந்திரிதான், மகாராஜா!"

"ஒருவேளை, மந்திரவாதியோ என்று நினைத்தேன். ஆமாம். நீர் மந்திரவாதியில்லாவிட்டால், நான் யார் என்பதும், என்னை இன்று காலை இந்தத் தீவுக்கருகில்

அக்னி ஹோத்ரம் பவதி.") ஒரு பெரியவர் தன் பத்தினி செத்துப் போனபோது, "என் யக்ஞ கர்மாநுஷ்டானங்களையெல்லாம் கொண்டுபோய் விட்டாயே!" என்று அழுதாராம்.

தர்மத்துக்கும், கர்மத்துக்கும் கை கொடுப்பவளாக அப்படிப்பட்ட ஒரு உயர்ந்த ஸ்தானம் நம்முடைய சாஸ்திரங்களில் ஸ்திரீக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.



— ஜகத்குரு காஞ்சி காமகோடி

ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

கொண்டு வந்து இறக்கி விடுவார்களென் பதும் எப்படித் தெரிந்தது?"

"அது பெரிய கதை, மகாராஜா! சாவ காசமாக எல்லாம் சொல்கிறேன். இப்போ தைக்கு..."

"இப்போதைக்கு, இது உண்மையாகவே அரண்மனைதானா, அல்லது சிறைச்சாலையா என்று மட்டும் சொன்னால் போதும்."

"என்ன வார்த்தை சொன்னீர்கள்? சிறைச்சாலையா? இந்த நாட்டில் சிறைச் சாலையென்பதே கிடையாது! சிறைச்சாலை, இராஜத் துரோகம், தண்டனை என்பதெல் லாம் பரத கண்டத்திலேதான், மகாராஜா!"

"அப்படியா? பரத கண்டத்துக்கும் இந்த நாட்டுக்கும் எவ்வளவு தூரமோ?"

"சாதாரணமாய்ப் பன்னிரண்டு நாள் கடல் பிரயாணம். புயல், மழை, முதலியவை குறுக்கிட்டால் இன்னும் அதிக நாளாகும்."

"உண்மைதானே சொல்கிறீர்?"

"அடியேன் உண்மையைத் தவிர வேறு பேசுவதில்லை."


"அப்படியானால், தமிழகத்திலிருந்து பன்னிரண்டு நாள் பிரயாணத்திலுள்ள நீங்கள், தமிழ் மொழி பேசுகிறீர்களே, எப்படி?"

"மகாராஜா! இந்தச் செண்பகத் தீவிலே மட்டுமல்ல - இன்னும் கிழக்கே தூரத்தி லுள்ள தீவுகளிலும் தமிழ் மக்கள் வசிக் கிறார்கள்; தமிழ் மொழி பேசுகிறார்கள். தங்களுடைய மூதாதை கரிகாலச் சோழரின் காலத்தில் சோழ நாட்டுத் தமிழர்கள் வளம் மிக்க இந்தத் தீவுகளில் வந்து குடியேறி னார்கள். கரிகாலச் சோழரின் குமாரர்தான் இந்தப் பட்டணத்தை ஸ்தாபித்தார். அத னாலேயே குமாரபுரி என்று இதற்குப் பெயர் ஏற்பட்டது. அந்த நாளில் சோழ சேனாதிபதி ஒருவர், சக்கரவர்த்தியின் ஆக்ஞையின் பேரில் இந்நாட்டை ஆட்சி புரியலானார். அவருடைய சந்ததியார் பத்து வருஷத்துக்கு முன்பு வரையில் இந்நாட்டின் அரசர்களாயிருந்து செங்கோல் செலுத்தி வந்தார்கள். அந்த வம்சத்தின் கடைசி அரச ரான விஷ்ணுவர்த்தனர் சந்ததியில்லாமல் காலமானார். பிறகு, இந்த நாடு இன்று வரையில் அரசர் இல்லாத நாடாயிருந்து வந்தது. அடிக்கடி பக்கத்துத் தீவுகளில் உள்ளவர்கள் வந்து இந்நாட்டின் பட்டணங் களையும் கிராமங்களையும் சூறையாட ஆரம்பித்தார்கள்... ...வெவ்வேறு பாஷை பேசுவோரும், அநாகரிகர்களும், தட்டை மூஞ்சிக்காரருமான பற்பல சாதியார் இந்தத் தீவைச் சுற்றியுள்ள தேசங்களில் வசிக்கிறார் கள். அவர்களை எதிர்த்து நின்று வெற்றி பெறுவதற்கு அரசர் இல்லாக் குடிகளாகிய எங்களால் முடியவில்லை. இப்படிப்பட்ட சமயத்தில் முருகக் கடவுளே அனுப்பி வைத்தது போல், சோழர் குலக்கொழுந்தான தாங்கள் எங்களைத் தேடி வந்திருக்கிறீர்கள்... எங்களுடைய பாக்கியந்தான்."

கரிகாலச் சோழனைப் பற்றி அந்தப் பெரியவர் பிரஸ்தாபித்தவுடனே விக்கிரமன் மிகவும் சிரத்தையுடன் கேட்கத் தொடங்கி னான். அவனுக்கிருந்த சந்தேகம், அவநம் பிக்கை எல்லாம் போய் விட்டது. சித்தார்த்த ரின் குரல், முகத் தோற்றம் ஆகியவற்றி லிருந்து, அவர் சொல்வதெல்லாம் சத்தியம் என்னும் நம்பிக்கையும் விக்கிரமனுக்கு உண்டாயிற்று. 'நமது தந்தை பார்த்திப மகா ராஜா எந்தக் கரிகால் வளவனைப் பற்றி அடிக்கடி பெருமையுடன் பேசி வந்தாரோ, அந்தச் சோழர் குல முதல்வன் காலத்திலே தமிழர்கள் வந்து குடியேறிய நாடு இது. என்ன ஆச்சரியமான விதிவசத்தினாலோ அப்படிப்பட்ட நாட்டுக்கு நாம் வந்து சேர்ந் திருக்கிறோம்!' என்பதை நினைத்த போது விக்கிரமனுக்கு மயிர்க்கூச்செறிந்தது, கண் ணில் நீர் துளிர்த்தது.

"ஐயா! உம்மை நான் பரிபூரணமாக நம்புகிறேன். எல்லா விஷயங்களையும் விவர மாக அப்புறம் கேட்டுக் கொள்கிறேன். இப் போதைக்கு ஒன்று மட்டும் சொல்லி விடு கிறேன். என்னை நீங்கள் உங்களுடைய அரசனாய்க் கொள்வதாயிருந்தால், இன் னொரு ராஜாவுக்கோ, சக்கரவர்த் திக்கோ கப்பம் செலுத்த முடியாது. சுதந்திர நாட்டுக்குத்தான் நான் அரசனாயிருப்பேன், இல்லாவிட் டால் உயிரை விடுவேன். நீங்களும் இந்நாட்டின் சுதந்திரத்தைக் காப் பதற்காக உயிரைக் கொடுக்கச் சித்த மாயிருக்க வேண்டும். எதிரிகள் துஷ் டர்களாயிருந்தாலும், நல்லவர் களாக இருந்தாலும், யாராயிருந்தா லும் பணிந்து போகிறது என்ற பேச்சே உதவாது. இதற்குச் சம்மத மாயிருந்தால் சொல்லுங்கள்" என் றான் விக்கிரமன்.

"மகாராஜா, தங்களுடைய தந்தை பார்த்திப மகாராஜா போர்க்களத் தில் அடைந்த வீர மரணத்தின் புகழ் எங்கள் காதுக்கும் எட்டியிருக்கிறது. எங்களுடைய உடம்பில் ஓடுவதும் சோழ நாட்டின் வீர இரத்தந்தான். இந்நாட்டில் வாழும் தமிழ் மக்கள் உடல், பொருள், ஆவியைக் கொடுத்துத் தங்கள் சுதந்திரத்தைக் காப்பாற்றிக் கொள்ள ஆயத்தமாயிருக்கிறார்கள். வீரத் தலைவன் ஒருவன்தான் எங்க ளுக்கு வேண்டியிருந்தது. தாங்கள் வந்து விட்டீர்கள். இனி என்ன குறை...?"



அச்சமயம் கோயில் சேமக்கலசத்தின் ஓசை கேட்டது.

சித்தார்த்தர், "மகாராஜா! தாங்கள் ஸ்நான பானங்களை முடித்துக் கொண்டு சிறிது இளைப்பாறுங்கள். சாயங்காலம் முருகவேள் ஆலயத்துக்குப் போய்த் தரிசனம் செய்ய வேண்டும். கூடிய சீக்கிரத்தில் முடிசூட்டு விழா நடத்துவது பற்றியும் யோசனை செய்ய வேண்டும்" என்றார்.

17. குந்தவியின் சபதம்

காஞ்சி நகர் அரண்மனையின் உப்பரிகை நிலா மாடத்தில் சக்கரவர்த்தியும் குந்தவி தேவியும் அமர்ந்திருந்தார்கள். கிருஷ்ண பட்சத்து முன்னிரவு. வானத்தில் விண்மீன்




'தடா' கைதிகளின் எண்ணிக்கை!

குஜராத்	19,263	பஞ்சாப்	15,175
அசாம்	11,684	ஆந்திரா	8,692
காஷ்மீர்	2,557	மகாராஷ்டிரா	2,219
ஹரியானா	1,740	மணிப்பூர்	1,480
டெல்லி	1,192	உ.பி.	1,098
மேற்குவங்கம்	531	ராஜஸ்தான்	468
மத்தியபிரதேசம்	355	தமிழ்நாடு	235
கர்நாடகம்	215	பீஹார்	93

என்ன சார், தமிழகம் எவ்வளவோ தேவலாம்தானே...?

ஆதாரம் : காம்படிஷன் ஸக்ஸஸ்

- ப. கணேஷ் ராகவன்



கள் கடர் விட்டு ஒளிர்ந்தன. கிழக்கே வெகு தூரத்தில் மாமல்லபுரத்துக் கலங்கரை விளக்கம் நட்சத்திரங்களுடன் போட்டி யிட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்தது.

காஞ்சி நகரின் பற்பல சிவாலயங்கள், விஷ்ணு ஆலயங்களிலிருந்தும் பேரிகைச் சப்தம், ஆலாட்ச மணி ஓசை, யாழின் இன்னிசையுடன் கலந்து பாடும் பக்தர்களின் குரலொலி - எல்லாம் கலந்து வந்து கொண்டிருந்தன. அரண்மனைப் பூந்தோட்டத்திலிருந்து செண்பகம், பன்னீர், பாரிஜாதம் ஆகிய மலர்களின் சுகந்தம் குளிர்காற்றுடன் கலந்து இலேசாக வந்து கொண்டிருந்தது.

"குழந்தாய்! ஏன் இப்படி ஒரு மாதிரியிருக்கிறாய்? உடம்பு நன்றாகயில்லையா?" என்று சக்கரவர்த்தி கேட்டார்.

"எனக்கு உடம்பு ஒன்றுமில்லை, அப்பா! மனந்தான் நன்றாயில்லை."

"மனம் இருக்கிறதே, அம்மா! ரொம்பப் பொல்லாதது 'மத்தகஜத்தைப் போன்றது' என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதைப் புத்தி என்கிற அங்குசத்தால் அடக்கி ஆள வேண்டும்...."

"அப்பா...!"

"ஏன் குழந்தாய்!"

"நான் சமண முனிவரைப் பார்த்துவிட்டு வந்தது தங்களுக்கு எப்படித் தெரிந்தது?"

"என் மகள் என்ன செய்கிறாள் என்பது எனக்குத் தெரியாமல் போனால் இந்தப் பெரிய பல்லவ சாம்ராஜ்யத்தை நான் எப்படி அம்மா கட்டி ஆள முடியும்?"

"அப்பா! நான் சமண சமயத்தையோ, பௌத்த சமயத்தையோ சார்ந்து விடப் போகிறேன்."

"ஏன் அம்மா, அப்படி? நமது சைவ வைஷ்ணவ சமயங்கள் என்ன அவ்வளவு துர்ப்பாக்கியத்தைச் செய்து விட்டன?"

"வாழ்க்கையில் எனக்கு வெறுப்பு உண்டாகி விட்டது. இந்த உலகத்தில் ஏன் பிறந்தோமென்று இருக்கிறது!"

"அடடா! அவ்வளவுக்கு வந்து விட்டதா? அப்பர் பெருமானைப் போய்ப் பார்த்து விட்டு வந்தாயே? அவர் மனிதப் பிறவியின் மகிமையைப் பற்றி உனக்கு ஒன்றும் சொல்லவில்லையா? தில்லை அம்பலத்தில் ஆனந்த நடனமிடும் பெருமானைத் தரிசிப்பதற்காகவே..."

"நிறுத்துங்கள், அப்பா! வயதாக ஆக அந்தப் பெரியவர் ஒரே பக்திப் பைத்தியமாகி விட்டார். ஆனந்தமாம்! நடனமாம்! இந்த அழகான உலகத்தைப் படைத்த கடவுளுக்கு ஆனந்தம் வேறு, நடனம் வேறு வேண்டிக் கிடந்ததாக்கும்?"

இதைக் கேட்ட சக்கரவர்த்தி கலகலவென்று சிரித்தார். குந்தவி வெறுப்புடன் வேறு பக்கம் திரும்பிக் கொண்டாள்.

"நான் ஏன் சிரித்தேன் என்று தெரியுமா, குந்தவி?"

"அதுதான் நானும் யோசித்துக் கொண்டிருந்தேன். தங்களுக்கு ஒருவேளை பைத்தியம், கியித்தியம்..."

"இல்லை, குழந்தாய்! இல்லை; பைத்தியம் எனக்குப் பிடிக்கவில்லை! நான் சிரித்த காரணம் வேறு. உன் மாதிரியே எனக்கும் ஒரு காலத்தில் இந்த உலகம் பிடிக்காமலிருந்தது. வாழ்க்கை வேப்பங்காயாகி விட்டது! அதன் காரணம் என்ன தெரியுமா?"

"நான் உங்களுக்குப் பெண்ணாய்ப் பிறந்ததுதானோ என்னவோ?"

சக்கரவர்த்தி புன்சிரிப்புடன், "இல்லை அம்மா, இல்லை! நீ பிறந்த பிறகு எனக்கு மறுபடியும் உலகம் பிடிக்க ஆரம்பித்து விட்டது. அதற்கு முன்னாலேதான் சில காலம் எனக்கு உலக வாழ்க்கையின் மேல் ரொம்பவும் வெறுப்பாயிருந்தது. அதற்குக் காரணம்... என் தந்தையின் மீது எனக்கு ரொம்பக் கோபமாயிருந்ததுதான்!" என்றார்.

குந்தவியின் முகத்தில் அவளை அறியாமலே புன்னகை தோன்றியது. இதைப் பார்த்த நரசிம்மவர்மர், "உனக்கு இப்போது வாழ்க்கையில் வெறுப்பு உண்டாகியிருப்பதற்கும் அதுதானே காரணம்? என் மேல் உனக்கு இப்போது சொல்ல முடியாத கோபம்; இல்லையா?" என்றார்.

குந்தவி கண்களில் துளித்த நீர்த் துளியைத் துடைத்துக் கொண்டாள். தலை குனிந்தபடி, "அப்பா! உங்கள் பேரில் எனக்கு என்ன கோபம்? உங்களுடைய தர்ம ராஜ்யத்தில் இப்படிப்பட்ட அநீதி நடந்து விட்டதே

காசி பில்டர்ஸ்
வழங்கும்
பரிசு மழை

We accept Fixed Deposits at the rate of 24% with 3% incentives.

ஒரு சதுரடிக்கு 5% முதல் 10% வரை சிறப்பு தள்ளுபடி

"காசி குருப் ஹவுசிங் பெனிபிட் ஸ்கீம்" திட்டத்தில் 01-01-95 முதல் 10-02-95 வரை ரூ. 1,250/- முதல் ரூ. 5,000/- வரை மாதத் தவணைகளாகச் செலுத்தி குலுக்கல் மூலம் 277 சதுர அடிகள் முதல் 1111 சதுரடிகள் வரையிலுள்ள வீட்டினைப் பதிவு செய்யும் உறுப்பினர்களுக்கு ரூ. 600/- முதல் ரூ. 2,500/- வரையிலான சிறப்புப் பரிசுப் பொருட்கள் வழங்கப்படும். மற்றும் "சுபமங்களா" திட்டத்தில் ரூ. 10,000- மட்டுமே செலுத்தி சொந்த வீடு பெறலாம். மீதமுள்ள தொகைக்கு நாங்களே கடனுதவி ஏற்பாடு செய்து தருகிறோம். இத்திட்டத்தில் வீடு பதிவு செய்பவர்களுக்கு ரூ. 1000/- மதிப்புள்ள கவர்ச்சிகரமான பரிசுப் பொருட்கள் வழங்கப்படும். இது தவிர மேலும் எங்களது காசி திரையரங்கில் திரையிடப்படும் "எங்கிருந்தோ வந்தான்" திரைப்படத்திற்கு மேற்கண்ட தேதிகளில் வீடு பதிவு செய்பவர்களுக்கு இலவச அனுமதி சீட்டு வழங்குவதுடன் திருப்பதி திருத்தணி நெடுஞ்சாலையில் அமைந்துள்ள எங்களது ஹோட்டல் காசி இன்டர்நேஷனலில் அனைத்து வசதிகளுடன் ஒருநாள் தங்குவதற்கும் அனுமதி அளிக்கிறோம்.

வீடு கிடைக்கும் இடங்கள் :

கே. கே. நகர் (மேற்கு), விருகம்பாக்கம், போரூர், வளசரவாக்கம், சாலிகிராமம், கில்நகர், வடபழநி ஆகிய இடங்களில் வீடுகள் கட்டித் தருகிறோம்.

வைப்பு நிதி :

இத் திட்டத்தில் முதலீடு செய்பவர்களுக்கு 24% கூட்டு வட்டியுடன் 3% ஊக்கத் தொகையும் வழங்கப்படும்.

மேலும் விவரங்களுக்கு :

காசி ஹவுசிங் &
டெவலப்மெண்ட் லிமிடெட்

மற்றும்

காசி பில்டர்ஸ்

காசி தியேட்டர் காம்ப்ளக்ஸ்,

91, 92 ஜவாஹர்லால் நேரு சாலை, அசோக் நகர், சென்னை - 600 095.
போன் : 4821969, 4822206 ஞாயிறு முழு நேரம் அலுவலகம் உண்டு.
FAX : 044-4821897

குறிப்பு: 11-02-95 முதல் ஒரு சதுரடியின் விலை ரூ. 450/-லிருந்து 500/- ஆக உயர்த்தப்படும்.

என்றுதான் வருத்தமாயிருக்கிறது" என்றான்.

"இதுதானா பிரமாதம், குந்தவி? இதற்கு ஏன் இவ்வளவு கவலை? அநியாயத்தைச் செய்வதற்கு எனக்குச் சக்தி உண்டு என்றால் அதை நிவர்த்திப்பதற்கும் சக்தி உண்டல்லவா? உண்மையில் அநீதி நடந்து விட்டதாக எனக்குத் தெரிந்தால் உடனே அதற்குப் பரிகாரம் செய்துவிட்டு மறுகாரியம் பார்க்கிறேன்" என்றார் சக்கரவர்த்தி.

"நிஜந்தானே, அப்பா!- சோழ ராஜகுமாரனுடைய செயலுக்கு அவன் பொறுப்பாளி இல்லையென்று தெரிந்தால் தண்டனையை மாற்றி விடுவீர்கள் அல்லவா?"

"நிச்சயமாய், அம்மா!"

அப்போது குந்தவி தன் மனத்திற்குள், 'அந்த வேஷதாரிச் சிவனடியாரை எப்படியாவது கண்டுபிடித்து, அவருடைய தாடியைப் பற்றி இழுத்துக் கொண்டு வந்து சக்கரவர்த்தியின் முன்னிலையில் நிறுத்தாவிட்டால் என் பெயர் குந்தவி அல்ல!' என்று சபதம் செய்து கொண்டாள்.

"குந்தவி! என்ன யோசனையில் ஆழ்ந்து விட்டாய்? இன்னும் இரண்டு நாளில் நான் உறையூருக்குப் போகப் போகிறேன். நீயும் வருவாயல்லவா?" என்று சக்கரவர்த்தி கேட்டார்:

"வருகிறேன், அப்பா! அங்கே எனக்கும் ஒரு காரியம் இருக்கிறது; அதற்கு நீங்கள் குறுக்கே ஒன்றும் சொல்லக் கூடாது."

"என்ன காரியம் என்று எனக்குச் சொல்லலாமோ, அதுவும் இரகசியமோ?"

"இரகசியம் ஒன்றுமில்லை, அப்பா! அருள்மொழி ராணியை நான் பார்க்கப் போகிறேன்."

"சரிதான்; ஆனால் அருள்மொழி ராணி உன்னைப் பார்க்கச் சம்மதிக்க வேண்டுமே!"

"அவர் என்னைப் பார்ப்பதற்கு என்ன தடை? எதற்காக மறுக்கிறார்?"

"அவளுடைய பிள்ளையைத் தேசப் பிரஷ்டம் செய்தவன் மகள் ஆயிற்றே, நீ? உன் மேல் கோபம் இல்லாமல் இருக்குமா?"

"என் மேல் எதற்காகக் கோபிக்க வேண்டும்? ரொம்ப அழகுதான்! நானா இவருடைய பிள்ளைக்குத் துர்ப்போதனை செய்து சக்கரவர்த்திக்கு விரோதமாய்க் கலகம் செய்யும்படி தூண்டினேன்? என் மேல் கோபித்துக் கொண்டு என்ன பிரயோஜனம்?" என்றாள் குந்தவி.

இதைக் கேட்ட சக்கரவர்த்தி தம் மனத்திற்குள், 'பெண்ணாய்ப் பிறந்தவர்களிடம் தர்க்க ரீதியை எதிர்பார்ப்பதிலேயும் பிரயோஜனமில்லைதான்!' என்று எண்ணிக் கொண்டார்.

(தொடரும்)



உடைபடும் முத்தாலம்மன் சிலை!

ஒவ்வொரு தை மாதமும் எங்கள் கிராமத்தில் முத்தாலம்மன் திருவிழா நடைபெறும். ஒவ்வோர் ஆண்டும் சிங்கத்தை வாகனமாகக் கொண்ட முத்தாலம்மன் சிலையை மண்ணால் செய்வார்கள். ஊரே புத்தாடை அணிந்து மகிழ்ச்சியில் திளைக்கும். விழா முடிந்த மறுநாள் மாலை ஊருக்கு வெளியிலுள்ள ஒரு மேடையில் சிலையை வைத்து, இளைஞர்கள் அதைக் கம்பால் அடித்து உடைப்பார்கள். உடைபட்ட சிதறல்களை எடுத்துக் கொண்டு போய்த் தங்கள் நிலங்களில் இட்டால் விளைச்சல் பெருகுமென்று ஒரு நம்பிக்கை!

- மம்சாபுரம், பி. ராமமூர்த்தி.

இன்று நினைத்தாலும் சிரிப்பு!

கண்ணந்தங்குடி. தஞ்சை மாவட்டத்திலுள்ள ஒரு சிறிய கிராமம். இருபதாண்டுகளுக்கு முன், அந்தக் கிராமத்தைச் சேர்ந்த உயர் காவல்துறை அதிகாரியொருவர், தமது தம்பி-தங்கை இருவரின் திருமணத்தையும் தஞ்சையில் நடத்தினார். மறுநாள், தமது கிராமத்தில் உற்றார் உறவினர்களுக்கும் ஒரு விருந்துக்கு ஏற்பாடு செய்தார். அவரிடம் பணியாற்றிய எங்களை முன்கூட்டியே கிராமத்திற்குச் சென்று விருந்துக்கான ஏற்பாடுகளைக் கவனிக்கச் சொன்னார். நாங்களும் சென்று விருந்தாளிகளுக்காக எலுமிச்சை ஜூஸ் தயார் செய்து பெரிய அண்டாவில் நிரப்பி, பந்தலின் ஓர் ஓரத்தில் வைத்திருந்தோம். வந்த விருந்தாளிகள், தங்கள் கிராம வழக்கப்படி அண்டாவிலிருப்பது தண்ணீர் என்று நினைத்துக் குவளைகளில் மொண்டு கைகால் அலம்ப ஆரம்பித்தார்களே பார்க்கலாம்! இன்று நினைத்தாலும் சிரிப்பை அடக்க முடியவில்லை.

- திருச்சி - 20, ஜி. விசுவநாதன்.



25 HE CAME WITH 28 DOLLARS A BOX CAMERA AND AN OLD LION. HE BUILT A MONUMENT TO HIMSELF - THE BANK OF AMERICA.

- (MGM) MEYER பற்றி BOB HOPE

நினைவ

சென்னைக்கு வந்த அவன் பையில் 28 ரூபாய்; முகத்தில் ஒரு தீப்பொறி; உடம்பிற்குள் ஒரு வைர நெஞ்சம்; அந்த நெஞ்சத்திற்குள் கனலாக எரியும் சினிமா என்கிற ஒரு இலட்சிய தாகம். படுத்துறங்க கைகள் தான் தலையணை. பின்னர்:

தனக்கென்று ஒரு மாபெரும் உலகத்தைப் படைத்துக் கொண்டான். தமிழர் நெஞ்சங்களிலெல்லாம் ஒரு வீட்டைக் கட்டிக் கொண்டான்; நிரந்தரமாகக் குடியேறி விட்டான்.

இதுதான் ரஜினிகாந்த்.

HE CAME ; HE SAW ; HE CONQUERED என்று சொல்வார்கள்; இந்த மேற்கோளுக்கு ரஜினிகாந்த் தவிர வேறு யார் உதாரண புருஷராக இருக்க முடியும்?

'மூன்று முடிச்சு' கால கட்டத்திற்கு மீண்டும் செல்கிறேன். படப்பிடிப்பின் போது குறிப்பிட்ட ஒரு 'ஷாட்'டில் ரஜினியின் ரியாக்ஷன் நடிகர் திலகம் சிவாஜி அவர்களை நினைவு படுத்தியது. "ஏற்கெனவே தமிழ்த் திரையில் சரித்திரம் படைத்து விட்ட சிவாஜியின் சாயல் எந்த இடத்திலும் வரக் கூடாது; அப்பொழுதுதான் ரஜினி என்கிற entity யின் தனித்தன்மை மக்களின் மத்தியில் அங்கீகாரம் பெறும்; அதற்காகவேதான் சிவாஜிராவ் என்கிற உனது பெயரையும் 'ரஜினிகாந்த்' என்று மாற்றியிருக்கிறேன்" என்று நான் சொன்னேன்.

ரத்தத்தில் ஊறிப் போய்விட்ட சில சிவாஜி சாயல்களை மிகுந்த பிரயாசைப்பட்டு 'மூன்று முடிச்சு' படத்திலேயே ரஜினி மாற்றிக் கொண்டார். அதன் பின் வந்த எந்தப் படத்திலும் ரஜினியிடம் நான் சிவாஜியின் சாயலைப் பார்க்கவில்லை.

படப்பிடிப்பு இல்லாத நேரம்: ஒரு நாள் ரஜினி என்னைப் பார்க்க எனது வீட்டிற்கு வந்தார். என் கால்களில் விழுந்து வணங்கியவரை தூக்கிப்பிடித்து 'என்ன விசேஷம்' என்று கேட்டேன். "போன வருடம் இதே நாளில்தான் எனக்கு ரஜினிகாந்த் என்று பெயர் வைத்தீர்கள்! அதன் நினைவாக உங்களிடம் ஆசி வாங்க வந்தேன்" என்று சொன்னார்.

அன்று 'ஹோலி' பண்டிகை தினம்.

அன்றிலிருந்து இன்றுவரை அவர் எந்த நாட்டில் எந்த ஊரில் இருந்தாலும் ஹோலி பண்டிகை தினத்தன்று என்னிடம் தொலைபேசியில் தொடர்பு கொள்வார்- எனது ஆசிகளைப் பெற.

இவரைத் தெலுங்குப்பட உலகிற்கும் அறிமுகப்படுத்த வேண்டுமென்கிற என் எண்ணம் 'அந்து லேனி கதா' படத்தின் மூலம் நிறைவேறியது. 'அவள் ஒரு தொடர்கதை' படத்தில் 'ஜெய்கணேஷ் அறிமுகப்படுத்தப்பட்ட அதே வேடத்தில்தான் தெலுங்கில் ரஜினிகாந்த் அறிமுகப் படுத்தப்பட்டார்.

'அவர்கள்' படத்திற்குப் பிறகு ரஜினிகாந்த் அடுத்த நட்சத்திர அந்தஸ்தை அடைந்து விட்டார். எஸ்.பி. முத்துராமன் அவர்களின் 'புவனா ஒரு கேள்வி குறி' மூலம் கதாநாயகன் அந்தஸ்தைப் பெற்றார்.

ஒரு இடைவெளிக்குப் பிறகு 'தப்புத் தாளங்கள்' படத்தில் எனது இயக்கத்தில் நடிக்கவிருந்த முதல் நாள் ரஜினி என்னிடம் சொன்னார்:

"இடையில் வேறு படங்களில் நிறைய நடித்து முடித்து விட்டேன். இந்தப் பள்ளியிலிருந்து போனதினாலேயே நான் நடிப்பதையும் பேசுவதையும் வேறு எந்த இயக்குனரும் திருத்துவதோ அல்லது குற்றம் குறைகளைச் சுட்டிக் காட்டுவதோ இல்லை; நான் என்ன செய்தாலும் அதைப் புகழ்கிறார்கள்; ஏதாவது சந்தேகம் கேட்டால் கூட "என்ன ஸார்! உங்களுக்கா தெரியாது?" என்று மழுப்பி விடுகிறார்கள். ஆகவே மீண்டும் நான் உங்களிடம் வந்திருப்பது மீண்டும் பாடங்களைக் கற்றுக் கொள்ளத் தான்."

ஆனால் எனக்கு ஒரு complex வந்தது. என்னதான் நான் அறிமுகப் படுத்தியவன், ஆரம்பகாலங்களில் நடிப்புச் சொல்லிக் கொடுத்தவன் என்றாலும் இன்றைக்கு ரஜினியுடன் பணி புரியும் போது சற்று ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் எனக்குள் தோன்றியது; ஆம்! 'மூன்று முடிச்சு', 'அவர்கள்' படப்பிடிப்புகளின்போது நான் உரிமை எடுத்துக்

லைகள்

கொண்டு எல்லோருக்கும் மத்தியில் அவரைத் திட்டிய வார்த்தைகளும் அந்தச் சம்பவங்களும் எனது நினைவுக்கு வந்தன.

'அவர்கள்' படப்பிடிப்பு; ஏவி.எம். ஸ்டுடியோ; கையில் எடுத்துக் கொண்ட குழந்தை தன்மீது சிறுநீர் கழித்து விட்ட மாதிரி பாவித்து குழந்தையையும், தாய் சுஜாதாவையும் தாறுமாறாகப் பேசுகின்ற ஒரு 'ஷாட்'. நிறைய ஒத்திகைக்குப் பிறகு 'ஷாட்' எடுக்க ஆரம்பித்தேன்... எட்டு, பத்து டேக்குகள் ஆகியும் சரியான effect எனக்குக் கிடைக்கவில்லை.

நான் பொறுமை இழந்து கத்தினேன். என்னவெல்லாம் சொல்லி பாவம், அவரைத் திட்டினேன் என்பதை இங்கே சொல்வதற்கு எனக்கே கூச்சமாகவும் தயக்கமாகவும் இருக்கிறது. புரொடக்ஷன் மேனேஜரைக் கூப்பிட்டு, "இந்த வேடத்தில் ஜெய்கணேஷைப் போட்டுக் கொள்கிறேன்; உடனே சென்று அழைத்துவா" என்று கூட கத்தினேன். ஆனாலும் அடுத்த விநாடியே கோபம் குறைந்து, "கடைசியா ஒரு டேக் எடுத்துப் பார்ப்போம்; அப்புறம் முடிவு பண்ணிக் கொள்ளலாம்" என்று சொல்லி எடுக்க, அந்த டேக் அற்புதமாக அமைந்து விட்டது.

'தப்புத்தாளங்கள்' படப்பிடிப்பில் இந்த நிகழ்ச்சி எனக்கு நினைவுக்கு வர, ரஜினிகாந்த்தை அருகில் வரும்படி அழைத்தேன். காதோடு காதாகக் கேட்டேன்: "உன்னை எப்படி அழைப்பது? மற்றவர்கள் மத்தியில் 'நீ, வா, போ', என்று சொல்லலாமா; இல்லை, 'வாங்க, போங்க' என்று சொல்லட்டுமா? ஷாட்டிலே தவறேதும் செய்தால் எல்லோருக்கும் மத்தியிலே சொல்வதா? அல்லது தனியாக அழைத்துச் சென்று உன் காதோடு மட்டும் சொல்லவா?"

ஏதோ பிரமாத ஜோக்கைக் கேட்டுவிட்டு சிரிப்பது போல், இடைவெளியே விடாமல் அவர் சிரித்தது தான் எனக்குக் கிடைத்த பதில்! எனது ஐயப்பாட்டிற்கெல்லாம் ரஜினியின் சிரிப்பு முற்றுப் புள்ளி வைத்து விட்டது.

பெரிய 'ஸ்டார்' அந்தஸ்தைப் பெற்று விட்ட ரஜினி 'சூப்பர் ஸ்டார்' என்கிற இடத்தைப் பெற புகழின் உச்சாணிக்கு ஏறிக் கொண்டிருந்த நேரம்.

இடையிலே அவரைப் பற்றி எனது செவியில் விழுந்த செய்திகள் என்னைச் சற்றுக் கவலையில் ஆழ்த்தின. அவருக்கு ஆணவம் தலைக்கேறி விட்டதாகவும் இன்னும் எத்தனை நாள் வாழ்வு பார்க்கலாம் என்றும் வேறு பல விதமாகவும் திரைப் படத்துறையினர் அவர் மீது புழுதியை வாரித் தூற்றிக் கொண்டிருந்தனர். இவை அத்தனையும், பொறாமையின் வெளிப்பாடு. சக கலைஞர்களில் சிலரும் திரைத்துறையில் வேறு சில முக்கியப் புள்ளிகளும் இவரது வீழ்ச்சிக்காக ஒரு நெகடிவ் பிரச்சாரம் நடத்தினார்கள்.

எனது 'நினைத்தாலே இனிக்கும்' படம் நடந்து கொண்டிருந்த நேரம். இதன் படப்பிடிப்பு முடியும் தறுவாயில் சின்னச் சின்ன மாற்றங்களை நான் ரஜினியிடம் காண நேர்ந்தது.

அவர் முதல் முதலாகக் கட்டியிருந்த புதிய வீட்டில் நடு ஹாலில் எனது ஃபிரேம் போட்ட ஒரு புகைப்படத்தை, பெரிய அளவில் மாட்டியிருந்தார். 'அந்தப்படத்தை எல்லோருக்கும் மத்தியில் சுக்கு நூறாகப் போட்டு உடைத்து விட்டார்' என்றும், 'உங்களையே இப்படி அவமரியாதைக்குள்ளாக்கி விட்டாரே' என்றும் என்னிடம் பலர் வந்து சொல்லி, என்னை வேண்டுமென்றே உசுப்பிவிட்டு, என்மீது பரிதாபப் படுவதாகவும் காட்டிக் கொண்டார்கள்.

நான் நம்பவில்லை; இந்தப் பிரச்சாரத்திற்குச் செவி சாய்க்கவும் இல்லை.

ஆனால் அடுத்த நாளே ரஜினிகாந்த் என்னை நேரில் வந்து சந்தித்தார்.

"ஸார்! உங்க படத்தை இந்தக் கையாலேயே உடைத்தேன்! ஏன் ஸார் ஒரு சாதாரண சிவாஜிராவை, ரஜினிகாந்த் என்று பெயர் சூட்டி, பெரிய ஆளாக்கினீர்கள்? என்னுடன் இருப்பவர்களை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை; என்னையும் யாரும் புரிந்து கொள்ளவில்லை; புகழ் போதையைத் தாங்கிக் கொள்ளக் கூடிய சக்தி எனக்கில்லை" என்று சொல்லிய படியே தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்து விட்டார். இந்த நிலையில் ரஜினியைப் பார்த்தபோது எனது கண்கள் கலங்கின.

அடுத்த நாளே ரஜினிகாந்தின் சகோதரரைக் கூப்பிட்டனுப்பினேன்.

கே.பாலசந்தர்



• தப்புத்தாளங்கள்

"வீட்டில் ஏதாவது பிரச்னையா?" என்று விவரம் கேட்டேன்.

"எல்லோர் மீதும் காரணமேயில்லாமல் கோபப்படுகிறார்; ஏன் என்றுதான் புரியவில்லை" என்று அவர் சொன்னார்.

நான் அவரிடம் "நீங்கள் ரஜினியுடன் கொஞ்ச நாட்கள் சென்னையிலேயே தங்கி இருங்கள்; உங்களில் ஒருவர் எப்போதும் அவருடன் இருப்பது நல்லது" என்று சொல்லி அனுப்பினேன். ஆனால் அவர் அடுத்த நாளே பெங்களூருக்குப் போய் விட்டார்.

இந்தச் சூழ்நிலையில்தான் என் உதவியாளர் அனந்துவிற்கும், ரஜினிக்குமிடையே நடந்த ஒரு வாக்குவாதம் பெரிதுபடுத்திப் பேசப்பட்டது.

'நினைத்தாலே இனிக்கும்' படத்தின் 'டப்பிங்' APN தியேட்டரில் நடந்து கொண்டிருந்தது.

என் உதவியாளர் கண்மணி சுப்புவிடம் 'டப்பிங்' பொறுப்பை கவனித்துக் கொள்ளும்படி கூறிவிட்டு நான் 'எடிட்டிங்' சென்று விட்டேன்.

'டப்பிங்' பேச வந்த ரஜினி, தான் பேசவேண்டிய பகுதிகளை ஒருமுறை பார்த்துவிட்டு "என்னால் இன்றைக்குப் பேச முடியாது" என்று கூறிவிட, கண்மணி சுப்பு எனக்குத் தொலைபேசியில் தகவல் தெரிவித்தார். நான் APN தியேட்டருக்குச் சென்றேன்.

ரஜினியைத் தனிமையில் அழைத்து, 'ஏன் டப்பிங் பேச மாட்டேன் என்கிறாய்? "What is troubling you?" என்று நான் கேட்டதுதான் தாமதம், பச்சைக் குழந்தையைப் போல் அழுதபடி சொன்னார்: "ஸார்! என்னாலே concentrate பண்ண முடியலே! தலையில் சம்மட்டியால் அடிப்பதைப் போன்ற ஒரு வலி!"

எனக்கு என் மீதே கோபம் வந்தது. 'என் படத்தின் வேலைகள் முடிய வேண்டுமேயென்பதற்காக, உடல் நலம் குன்றியிருக்கும் ஒரு கலைஞனிடம் வேலை செய்யச் சொல்லி கட்டாயப் படுத்துவது என்ன நியாயம்?' என்று பட்டது.

உடனே 'டப்பிங்'கை கான்சல் செய்தேன். நானே நேராக டாக்டர் ஆர்.எஸ்.ராஜகோபால் அவர்களிடம் ரஜினியை அழைத்துச் சென்றேன். அவரை நன்கு பரிசோதித்த டாக்டர், இடைவிடாத உழைப்பால் அதிக அளவில் இரத்த அழுத்தம் இருப்பதாகக் கூறி, "உடனே ஓய்வு எடுத்துக் கொண்டால் தான் நல்லது" என்றார்.

அவரது ஆலோசனைப்படி வெல்லிங்டன் மருத்துவ மனையில் ஒருவார காலம் ரஜினி ஓய்வு எடுத்துக் கொண்டார். காலையிலும் மாலையிலும் அவரைச் சென்று பார்த்து வந்தேன். அவர் அங்கே தங்கியிருந்தது, சில நாட்கள் வரை யாருக்குமே தெரியாமல் இருந்தது.

ஒரு கலைஞன் உடல் நலம் குன்றியிருக்கிறான் என்று எத்தனை உள்ளங்கள் கவலைப்பட்டனவோ எனக்குத் தெரியாது. ஒரு நோயாளியின் மீது கருணை மழை பொழியாவிட்டாலும் கூரிய கத்தியால் காயப்படுத்தாமலிருப்பதே பெரும் உதவியாகத் தோன்றியது.

ஒரு சிலரின் கைகளிலே பளபளக்கும் கத்திகள். அதன் முனைகளிலே ஆலகால விஷங்கள். அடேயப்பா! "ரஜினிகாந்த் சரித்திரம் முடிந்து விட்டது" என்று முன்னுரை எழுதியவர்கள் எத்தனை பேர்! நடந்து முடிந்த சிற்சில நிகழ்ச்சிகளைக் கோர்வையாக்கி இரண்டு ரீல், மூன்று ரீல் என்று 'ரீல்' விட்டவர்கள் எத்தனை பேர்!

நான் ரஜினியிடம் சொன்னேன்: "சர்வர் சுந்தரத்தில் ஒரு வசனம் வருகிறது. அதில் நாகேஷ் சொல்வார், 'கஷ்டம் என்பது ஒரு சின்னக் கல் மாதிரி; அதைக் கண்ணுக்கு அருகில் பிடித்துப் கொண்டு பார்த்தால் அது உலகத்தையே மறைத்து விடுகிறது. சற்றுத் தள்ளிப் பிடித்துப் பார்த்தால் அது என்னவென்று நமக்குப் புரிகிறது. அதைத் தூக்கி எறிந்து, காலடியிலே போட்டு விட்டால் அப்படி ஒன்று இருப்பதாகவே நமக்குத் தெரிவதில்லை.' இதை நினைவில் கொள்.

"நீ யாருக்குச் சொந்தம் தெரியுமா? இன்னும் பிறக்காத ஆயிரமாயிரம் நாட்களுக்கு நீ சொந்தமானவன். இதையும் நினைவில் கொள்.


"Worry often gives a small thing a big shadow."

இது ஒரு ஸ்வீடிஷ் பழமொழி.


(-தொடரும்)

படம் உதவி: **பிலிம்நியூஸ் ஆனந்தன்**

"HE PROMISED HE HAD SOMETHING THAT COULD CHANGE OUR LIVES... WE WERE AMAZED WHEN HE SHOWED US HOW!"



The friendly man from Eureka Forbes presented his card. "I would like to demonstrate our Euroclean 2000, a cleaning system you could conveniently use everyday," he said. He began to show us how – patiently and thoroughly. From carpets to sofas, from curtains to ceilings, he made everything spotlessly clean. He even showed us how effectively the Euroclean 2000 could clean delicate audio equipment , spray paint our refrigerator or be used for watering our plants. He offered to drop by at home as often as we liked, to train us on how to use the product.



The friendly man from Eureka Forbes : Part of a successful sales organisation.

"We've helped over one and a half million families discover an easier way to a cleaner home," he said with pride. "Families prefer us because they can contact us directly – with just a phone call ! We have a country-wide service network and offer after-sales service at your doorstep. That's what makes us different from the others".

We were impressed, we bought the Euroclean 2000. And our home has never been cleaner, thanks to the friendly Eureka Forbes man.

EUREKA FORBES LTD.

Friends for life

***For a visit from the friendly Eureka Forbes man, call or write to:** Bhupesh Gupta Bhuvan, 1st Floor, 85 Sayani Road, Prabhadevi, Bombay 400 025. Tel: 022-4301725/1718.

மணிக்கொடி

43

ஜோதிர்லதா கிரிஜா

அந்தமானின் சிறைச் சாலையில் நரேந்திரநாத் பானர்ஜியும் அவனுடைய நண்பர்களும் அடைக்கப்பட்ட அன்றே முன்னாள் கைதி விநாயக் தாமோதர் சாவர்க்கர் இருந்த சிறையறைக்குரிய ஜமேதாரின் அறிமுகம் அவர்களுக்குக் கிடைத்தது. அவருடன் பேச்சுக் கொடுத்து அவரைப் பற்றி விசாரிக்க வேண்டும் எனும் ஆவல் அவர்கள் யாவருக்குமே ஏற்பட்டது. சாவர்க்கர் அடைக்கப்படிருந்த சிறையறையின் கதவு இலக்கம் ஏழு என்பதை அவரிடமிருந்து தெரிந்து கொண்ட அவர்கள் தங்கள் அறைகளிலிருந்து அழைத்துச் செல்லப்பட்டபோது அவ்வறையை ஒருவகை பக்தியுடன் கடந்தார்கள்.

“ஜமேதார்! நீங்கள் அன்பானவராய்த் தெரிகிறீர்கள்,” எனும் பாராட்டு மொழியுடன் ஒரு வாய்ப்பான கணத்தில் பேசத் தொடங்கிய நரேந்திரநாத் பானர்ஜி, “விநாயக் தாமோதர் சாவர்க்கர் இங்கு சிறைப்பட்டிருந்த போது நடந்த சம்பவங்களைச் சொல்லுவீர்களா? அவரை நாங்கள் பெரிதும் போற்றுகிறவர்கள்” என்று பீடிகை போட்டுவிட்டு ஆவலுடன் அவரது முகத்தைப் பார்த்தான்.

நடுத்தர வயதில் இருந்த அந்த ஜமேதார் உண்மையில் அன்புள்ளம் கொண்டவராகத்தான் இருந்தார். “விநாயக் தாமோதர் சாவர்க்கர் மட்டுமின்றி அவருடைய மூத்த சகோதரர் கணேஷ்ராவ் சாவர்க்கரும் இங்கேதான் சிறைப்பட்டிருந்தார். அந்தச் செய்தி உங்





ஏமாந்தோம்; எச்சரிக்கிறோம்!

சமீபத்தில் தாதர் எக்ஸ்பிரஸ் ஏஸி பெட்டியில் என் கணவரும் நானும் பயணம் செய்தோம். ரயில் புறப்பட சில நிமிஷங்கள் இருந்தபோது சீருடை அணிந்த ஒருவர் "பெட் ரோல் வேணுமா?" என்று அனைவரிடமும் விசாரித்தார். படுக்கை தேவைப் பட்டவர்கள் எல்லோரும் ஆளுக்குப்பத்து ரூபாய் தந்தோம். வண்டி புறப்பட்ட பிறகு கண்டக்டரிடம் பெட்ரோல் கேட்டால், "நான் இன்னும் ரவுண்ட் வந்து பணமே வாங்கலையே" என்றார். பிறகுதான் சீருடையில் யாரோ வந்து ஏமாற்றி விட்டது தெரிய வந்தது. மறுபடி ஆளுக்குப் பத்து ரூபாய் அழுதோம்!

– ரா. லக்ஷ்மி

களுக்குத் தெரியுந்தானே? நான்தான் ரோல் காலின் போது ஒருவரை ஒருவர் மிக அருகில் பார்த்து ஓரிரு வார்த்தைப் பரிமாற்றம் செய்து கொள்ள அவர்களுக்கு உதவினேன். இதில் வேடிக்கை என்ன தெரியுமா? தம்பி விநாயக் தாமோதர் சாவர்க்கர் அங்கேயே மற்றொரு சிறையறையில் அடைபட்டிருந்த விஷயம் அண்ணன் கணேஷ்ராவ் சாவர்க்கருக்கு அதுவரையில் தெரிந்திருக்கவில்லை. தம்பியைப் பார்த்து அண்ணன் வியப்பும் அதிர்ச்சியும் – ஏன்? வேதனையும்தான் – அடைந்தார். "அண்ணா!" எனும் ஒரு சொல்லை மட்டுமே அந்தச் சந்திப்பின் போது விநாயக் தாமோதர் சாவர்க்கரால் உச்சரிக்க முடிந்தது. ரோல் காலின் போது யாரும் பேசக்கூடாதாகையால் நான் அதற்கு மேல் அவர்கள் பேசிக்கொள்ள அனுமதிக்க முடியாது போயிற்று."

அந்த ஜமேதாரைக் கட்டித் தழுவ வேண்டும்போல் நரேந்திரநாத் பானர்ஜிக்கு இருந்தது.

"உண்மையில் நீங்கள் மிக நல்லவர், ஜமேதார்."

"ஒரு மனிதாபிமானம்தான். வேறொன்றும் பெரிதாக இல்லை. நண்பனே... அதுசரி, விநாயக் தாமோதர் சாவர்க்கர்தான் 1921லேயே இங்கிருந்து விடுதலையாகி இந்தியாவுக்குக் கொண்டு செல்லப் பட்டு விட்டாரே. அங்கு நீங்கள் அவரைச் சந்தித்துப் பேசவே இல்லையா?"

"ரத்தினகிரி ஜில்லாவில் அவரை வைத்திருக்கிறார்கள். அதாவது சிறை என்றில்லாமல் அந்த ஜில்லாவை விட்டு அவர் வெளியே எங்கும் போகக் கூடாது என்று கட்டுப்படுத்தி வைத்திருக்கிறார்கள். ரத்தினகிரியில் அவரை எங்களால் சந்திக்க முடியவில்லை. எங்கு சென்றாலும் போலீசார் தொடர்ந்தார்கள். நாங்கள் அனைவருமே தேடப்பட்டு வந்தவர்களாயிற்றே?"

"இங்கே அண்ணனும் தம்பியும் பேசிக் கொள்ள முடியாது; ரகசிய கடிதப் பரிமாற்றம் செய்துகொள்ள நான் உதவினேன். ஆனால் அக்கடிதங்களைப் படித்துவிட்டுத்தான் அவர்கள் கையில் கொடுப்பேன். ஏனெனில், ஆபத்தான கடிதப் போக்குவரத்தாக இருப்பின், நான் மாட்டிக் கொண்டு விடக் கூடாதல்லவா? அதற்காகத்தான்."

"இரண்டு சகோதரர்களும் இங்கே கடுமையாக வேலைவாங்கப்பட்டார்களா?..."

"பின்? தென்னைமரப் பட்டைகளை உளியாலும் மரச்சுத்தியாலும் அவர்கள் துண்டுகளாக்க வேண்டும். கொஞ்ச நாட்கள் கழித்து இருவருக்கும் செக்கு இழுக்கும் வேலை தரப்பட்டது. ஒரு நாள் அவ்வாறு எண்ணெய் செக்கை இழுக்கும் போது விநாயக் தாமோதர் சாவர்க்கருக்கு ரொம்பவும் தாகம் ஏற்பட்டு விட்டது. வேர்த்து விறுவிறுத்த நிலையில் குடிக்கத் தண்ணீர் கேட்டார். கைதிகளின் மேற்பார்வையாளர், 'ஒரு கைதிக்கு நாள் ஒன்றுக்கு இரண்டு தம்ளர் தண்ணீர்தான் தரப்படவேண்டும். நீயோ இன்று மூன்று தம்ளர் குடித்தாகிவிட்டது. இனியும் கேட்டால் எப்படி?' என்று இரக்கமற்று மறுத்துவிட, சாவர்க்கர் அரை மயக்கத்துடன் சாய்ந்தார். அவரை மறுபடியும் கிளப்பி அந்த அதிகாரி செக்கிழுக்க வைத்தார். இவற்றையெல்லாம் பார்க்கும் போது கஷ்டமாகத்தான் இருக்கிறது. ஆனால் கூலிக்கு வேலை செய்யும் நாங்கள் செய்யக் கூடியது என்ன?"

நரேந்திரநாத் பானர்ஜியின் கண்களில் நீர் நிறைந்து போயிற்று.

"ஒரு முறை விநாயக் தாமோதர் சாவர்க்கருக்குத் தற்கொலை செய்துகொள்ளும் எண்ணம் கூட வந்ததாம். 'வெட்டியாகச் சிறையில் காலம் முழுவதும் கழித்தபடி இருப்பதால் நாட்டுக்கு என்ன லாபம்!' என்ற எண்ணத்தால் வந்த சோர்வு. ஆனால் முடிவில் எப்படியோ அந்த மனப்பான்மையை அவர் ஜெயித்து விட்டார்... ஆனால், அவர் மாதிரி எல்லாராலும் உறுதியுடன் இருக்க முடியவில்லை. நிறைய இந்திய அரசியல் கைதிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளார்கள். நிறையப் பேருக்குப் பைத்தியம் பிடித்துள்ளது.

நரேந்திரநாத் பானர்ஜியின் விழிகளில் விளிம்பு கட்டி நின்ற கண்ணீர், திவலைகளாய் அவன் கன்னங்களில் உருண்டு விழுந்து சிதறிற்று.

"அப்புறம் உங்கள் விநாயக் தாமோதர் சாவர்க்கர் சிறையின் சுவர்களில் அரசியல் பாடங்களை எழுதிச் சக கைதிகளுக்குப் போதித்தார். அதற்கான அடையாளங்கள் அச்சுவர்களில் இன்னமும் இருக்கின்றன. ஒரு வாய்ப்பான நேரத்தில் நான் உங்களுக்குக் காட்டுகிறேன்."

"ஆச்சரியமாயிருக்கிறதே! என்ன பாடம் நடத்தினார்?"

"அரசியல், பொருளாதாரம் போன்றவற்றில். 'இந்தியா நிச்சயம் ஒருநாள் அன்னிய ஆதிக்கத்திலிருந்து விடுதலையடையவே செய்யும். அப்போது நாட்டை ஆளவேண்டிய பொறுப்புக்கு நாம் ஆளாகும்போது இந்தப் பாடங்கள் நமக்கு உதவியாக இருக்கும்...' என்று அவர் சொல்லுவதுண்டு."

அப்போது காலடிச் சத்தம் கேட்க, "ஜெயிலர் வருகிறார். நீங்கள் வேலை செய்யுங்கள்," என்றார் ஜமேதார். கைதிகள் அனைவரும் மும்முரமாய்த் தங்கள் மரம் வெட்டுதல், செக்கிழுத்தல், கல்லுடைத்தல் போன்ற வேலைகளில் ஈடுபடத் தொடங்கினார்கள்.

44

சாப்பாட்டுக்கான மணியடிக்க, அனைவரும் முகத்து வேர்வையை வழித்துத் துடைத்துக் கொண்டே எழுந்து நடக்கலானார்கள். ஜமேதார் கைதட்டியதும் சில சிறைக்காவல் ஊழியர்கள் அங்கு தோன்றி, கைதிகளுக்கு முன்னும் பின்னும் துப்பாக்கி ஏந்தியவாறு நடந்தார்கள்.

வேலையில் ஈடுபடாத தருணங்களிலும் பேசமுடியாத சமயங்களிலும் நரேந்திரநாத் பானர்ஜியின் சிந்தனை பவித்ராவையும் அமராவதியையும் பற்றியதாகவே இருந்தது. பவித்ராவைச் சந்தித்த பின்னர் தான் ஒரு பொறுப்பான தகப்பன் என்ற உணர்வு தன்னிடம் மேலோங்கிவிட்டதாய் அவனுள் ஒரு சிலிர்ப்புப் பரவியது. 'நான் ஒரு தந்தை... நான் ஒரு தந்தை.. அதிலும் திருமண வயதை நெருங்கிக் கொண்டிருக்கும் அழகான, தேசபக்தி நிறைந்த, படித்த பெண்ணின் தந்தை....'- நரேந்திரநாத்துக்கு உடனே சென்னைக்கு எப்படியாவது பறந்து போய்விட முடியாதா என்றிருந்தது. 'என் அன்பு மகளைப் பார்த்துக் கொண்டே இருக்க... அவள் செயல்களைக் கவனித்துக் கொண்டே இருக்க... நிழலாய் அவளைத் தொடர்ந்து அவளுக்கு

ஒரு பாதுகாப்பாய் இருக்க... இன்னும் அவள் தேவைகள் இன்னின்ன வென்பதை அறிந்து அவற்றையெல்லாம் கூடுமான வரையில் செயல்படுத்த...'- நரேந்திரநாத்தின் விழிகளில் ஈரம் படர்ந்தது.

மகளைச் சந்தித்ததும் அமராவதி பற்றிய நினைவுகள் சற்றே பின்னுக்குத் தள்ளப்பட்டு விட்டனவோ என்று அடுத்த கணத்தில் அவன் ஒரு குற்ற உணர்வுடன் நினைத்து வெட்கமுற்றான். 'இல்லை, இல்லை. அமராவதி எப்போதும் எனது நினைவில் தோன்றியவாறாக இருந்து எனது நெஞ்சத்தோடு நெஞ்சமாக அப்படியே உறைந்து விட்டவள். தனியாக அவளை நினைப்பது என்பதே அபத்தமானது என்கிற அளவுக்கு என்னில் கரைந்து விட்டவள்' என்று எண்ணிய நரேந்திரநாத், விழிகள் நனைய உணர்ச்சி வசப்பட்டபடி நடந்தான்.

சாப்பாட்டுக் கூடத்துக்குச் செல்லும் பாதையில் ஓர் அறை தென்பட்டது. அங்கு சுவரில் தொங்கவிடப்பட்டிருந்த இரும்பு விலங்குகள் சன்னல்வழியாக நரேந்திரநாத்தின் பார்வையில் பட்டன. சற்றே தயங்கி நின்று இனுக இனுசான அந்த விலங்குகளைப் பார்த்த பின் நகர்ந்தான்.

"என்ன பார்க்கிறீர்கள்? உமக்கு மாட்டப்படும் விலங்குகளிலிருந்து அவை மாறுபட்டவை. இவற்றில் ஒரு வகை விலங்கினைக் கைதிக்குப் பூட்டினால், அவனால் கொஞ்சங்கூடக் குனிய முடியாது. எப்போதும் விறைப்பான நிலையில் நிற்கத்தான் வேண்டி இருக்கும். க்ராஸ் பார் ஃபெட்டர்ஸ் என்று ஒரு வகை. அவை கால்கள் இரண்டையும் பிணைப்பவை. அந்த நிலையில் கால்களைத் தேய்த்துத் தேய்த்து அங்குலம் அங்குலமாகத்தான் நகர்ந்தாக வேண்டும். அடி எடுத்து வைத்தல் என்பதே முடியாத காரியம். இப்படிப்பட்ட விலங்குகளே மாற்றி மாற்றி விநாயக் தாமோதர் சாவர்க்கருக்கு மாட்டப்பட்டன."

நரேந்திரநாத் பானர்ஜிக்கு இரத்தம் சூடு கொண்டது. கண்கள் சினத்தில் விரிந்து சிவந்தன. "அட பாவிகளா!" என்று முணு முணுத்தான்.

ஜமேதார் அவனது சிந்தனையில் குறுக்கிட்டார். "இன்னொரு வகை விலங்கு கூட உண்டு. சுவரில் பதிந்துள்ள வளையங்களில் சாவர்க்கரின் கைகளைக் கோத்துப் பூட்டி விடுவார்கள். ஆக, சுவரோடு கைகள் பதிந்திருக்கும் நிலையில் அவரால் சுவரையே பார்த்தபடி நின்று கொண்டிருக்கத்தான் முடியும்."

தன் மனத்துள் விளைந்த அதிர்ச்சியில் நரேந்திரநாத் பேசாதிருந்தான். இதற்குள் சாப்பாட்டுக் கூடம் வந்துவிட எல்லாரும்

அதனுள் புகுந்தபின் கூடத்தின் கதவு பூட்டப்பட்டது. தரையில் வரிசையாகப் போட்டு வைக்கப் பட்டிருந்த – துப்புரவாய்த் துலக்கப்படாத – கறை படிந்த அலுமினியத் தட்டுக்களையும், தூசு படிந்த தரையையும், அதில் தத்தித் தத்திப் பறந்த ஈக்களையும் பார்த்ததும் நரேந்திரநாத்துக்கும் அவனுடைய தோழர்களுக்கும் குமட்டிக் கொண்டு வந்தது.

"பசி வயிற்றைக் குடைகிறது. வெறும் இலைகளைக்கூட நான் தின்னத் தயாராகத் தான் இருக்கிறேன்." என்று மல்ஹோத்ரா சிரித்தான்.

அலுமினியத் தட்டுகளில் களியும் பச்சை வெங்காயமும் பரிமாறிக் கொண்டிருந்த ஊழியனை அணுகிய நரேந்திரநாத், "கை கழுவிக்கொள்ள வேண்டுமே? தண்ணீர்த் தொட்டி இருக்கிறதல்லவா?..." என்றான். பக்கத்தில் இருந்த பழைய கைதிகள் சிரித்தார்கள்.

"குடிப்பதற்கே இங்கு தண்ணீரை ஆளுக்கு இத்தனை கோப்பை என்று அளந்து தான் தருகிறார்கள். கையாவது கழுவுவதாவது?"

எல்லாவற்றுக்கும் ஒரே கையைப் பயன்படுத்துவதால் தனது வலக்கை மற்றவர்களுடையதை விட அதிக அசுத்தமாக இருக்கும் என்று எண்ணி, அதை துப்புரவாக்க சோப்புக் கேட்டுப் பார்க்க வேண்டுமென்று நினைத்திருந்த நரேந்திரநாத்துக்கு இந்தப் பேச்சு வலுவான அறைமாதிரி வந்து விழுந்தது.

"மண்ணிலும் மரத்திலும் இரும்பு ஆயுதங்கள் பிடித்து வேலை செய்து விட்டுக் கைகழுவாமல் சாப்பிடுவதா? இதென்ன அக்கிரமம்?"

"அங்கே என்ன பேச்சு? என்ன வாக்கு வாதம்?" என்று அதிகாரமாக வினவியபடி மேற்பார்வையாளன் அங்கு வந்தான்.

"இவருக்குக் கை கழுவத் தண்ணீர் வேண்டுமாம்."

"பாத்ரூமுக்குப் போய்க் கழுவிக் கொள்."

"அங்கே குழாயில் தண்ணீர் வரலையே!"

"உன் மூத்திரத்தில் கைகழுவிக் கொள் என்றேன்..."– இவ்வாறு சொல்லி விட்டு அந்த வெள்ளைக்காரன் சிரிக்க, நரேந்திரநாத்தின் உடம்பு முழுவதும் அதிர்வு கண்டது. புலிபோல் உக்கிரத்துடன் பாய்ந்து அவனது முகத்தில் ஒரு குத்துவிட்டான். தாக்கப்படுவோம் என்பதை எதிர்பாராது அசட்டையாக இருந்ததால் நிலைகுலைந்து மல்லாந்து விழுந்த அவன், துப்பாக்கிக்காக இடுப்புப் பட்டியில் தனது கையை ஆவேசத்துடன் வைத்தான்.

(தொடரும்)

தமது 32-வது பிறந்த நாளை ரசிகர்களுடன் கொண்டாடி வித்தியாசப் படுத்தினார் நெப்போலியன். அன்றைய தினத்தை முழுக்க முழுக்க ரசிகர்களுடனேயே கழித்தார்; ரசிகர்களுக்கு விருந்தும் கொடுத்தார். "தலைவா! நீங்க எந்த கேரக்டரில் வேண்டுமானாலும் நடிங்க. ஆனா, இந்த அரிவாள் தூக்கற கேரக்டரில் மாத்திரம் நடிக்காதீங்க..." என்று ரசிகர்கள் அன்போடு கேட்டுக் கொண்டார்களாம்.



• குஷ்பு : வித்தியாச வேடம்!

"எனக்கு இலக்கணம் பிடிக்கும்; தலைக்கனம் பிடிக்காது. சதையை நம்பிப் படம் எடுக்காமல் கதையை நம்பி எடுக்கிறேன். தடம் மாறாமல் ரசிகர்களின் மனத்தில் இடம் பிடிக்கிறேன். வார்த்தையில் மட்டும் இல்லை; வாழ்க்கையிலும் நான் எதிர்நீச்சல் போடுகிறேன்!'' இப்படியொரு பதிலை நம்மிடம் சொன்னவர் யாராய் இருக்குமென்று இந்நேரம் தெரிந்திருக்குமே! கரெக்ட்! டி. ராஜேந்தர் தான்!

ராஜ்கிரணைக் கோபப்பட வைத்தவர்!

"என் ராசாவின் மனசிலே படத்திலிருந்து இப்போதைய எல்லாமே என் ராசாதான் படம் வரை அவனுக்குச் சான்ஸ் கொடுத்தேன். ஆனால் வரம் கொடுத்தவன் தலையிலேயே கையை வைக்கிறான். தனக்கு உடல்நிலை சரியில்லையென்பதால் இன்று வருகிறேன், நாளை வருகிறேன் என்று சொல்லிச் சொல்லியே என்னைப் பொள்ளாச்சியில் நான்கு நாட்கள் காக்க வைத்துவிட்டான். சென்னைக்கு வந்து பார்த்த போது அவன் வேறு படப்பிடிப்புகளில் கலந்து கொண்டிருக்கிறான். எதற்காக என்னிடம் பொய் சொல்ல வேண்டும்? எனக்கே அல்வாவா? இனி அவன் என் படங்களில் நடிக்க மாட்டான்!" - இப்படிக் கோபப்பட்டுச் சொன்னவர்: ராஜ்கிரண். கோபப்பட வைத்தவர் : வடிவேலு.

ஆடு, மாடு, கோழி, யானை, பாம்பு, குரங்கு என்று வைத்து ராமநாராயணன் மட்டும்தான் படமெடுப்பாரா? என்னாலும் முடியும் என்று 'சின்னத் தங்கம்' மூலம் நிரூபிக்கிறார் ஸ்ரீபத்மம்.

மாதுரி நடத்திக் கொண்டிருந்த துணிக்கடையும் சினிமாவைப் போலவே காலைவாரி விட்டு விட்டதால் கடையை விற்பனை செய்து விட்டார்.



• நெப்போலியன் : 32வது பிறந்த நாள்

தாம் ஒன்றும் துணிக் கடை பொம்மை அல்ல; தம்மாலும் கேரக்டர் ரோல்களில் நடிக்க முடியும் என்பதை 'முத்துக் குளிக்க வாரீயளா' படத்தின் மூலம் குஷ்பு நிரூபித்திருப்பதாகச் சொல்கிறார்கள்.

— ராம் கம்பர்

உலகத் தமிழ் மாநாட்டினால் தமிழருக்கு என்ன பயன்?

● சிவராம சுப்பிரமணியன், தூத்துக்குடி

? "எதிர்ப்பவர்கள் எல்லாம் தலைகுனியும் வகையில் மகா நாட்டை ஜெயலலிதா நடத்தி விட்டார்'' என்கிறாரே, அமைச்சர் முத்துசாமி – எனி கமெண்ட்?

! ஆகா! ஆயிரத்தில் ஒரு வார்த்தை! தலைகுனியும் வகையில்தான் மாநாடு நடந்தது! ஆட்சேபணை என்ன?

● இரா.சக்திவேல், பரமத்தி வேலூர்.

'தாலாட்டு தெரியாத பெண்கள் குழந்தை பெறக் கூடாது' என்று விஜயலட்சுமி தவவீத கிருஷ்ணன் கூறியிருக்கிறாரே?

! குழந்தை பிறந்தவுடன் தாய்க்குத் தாலாட்டு தானாகவே வந்துவிடும் என்பது விஜயலக்ஷ்மிக்குப் புரியாமல் போனது ஆச்சர்யம்! அந்தத் தாயின் குரல்தான் (விஜயலக்ஷ்மி அளவுக்குச் சிறப்பாகப் பாடா விட்டாலும்) குழந்தைக்குப் பிடிக்கும் என்பதும் நிஜம்!

● எல். கோபாலகிருஷ்ணன், அரக்கோணம்

? உலகத் தமிழ் மாநாட்டில் தரமான நூல்களை வாங்க ஆளில்லையாமே, இது என்ன கூத்து?

! அழைக்கப்பட்டு வந்தவர்கள் அத்தகைய தமிழ் அன்பர்கள் என்பது அறிக!

● பி. என். ஜெய்சங்கர், திருவாரூர்.

? "ஒருவேளை சோறு கூட கிடைக்காத ஏழை இருக்கும் வரை நமது நாடு சுதந்திரம் பெற்று என்ன பயன்?" என்று கேட்கிறாரே என்.டி.ஆர்.

! நியாயமான கேள்வி. தெளிவான பதிலை வழங்க வேண்டியவர்களும் அவரைப் போன்று ஆட்சியிலுள்ள அரசியல்வாதிகள்தான். இரண்டு ரூபாய்க்கு கிலோ அரிசி திட்டம் வெற்றி பெற்றால், பதில் சொல்வதற்குப் பதில் செயல்படுத்தியே காட்டியவராவார்.

● எஸ். சாந்தி சுகுமார், காட்பாடி.

? மம்தா பானர்ஜி அடிக்கடி அடிபட்டுக் கொண்டிருப்பது பற்றி?

! அடிபட்டுக் கொண்டிருக்க வேண்டும் என்பதுதானே அரசியல்வாதிகளின் ஆசையே!

● கே. என். பாலகிருஷ்ணன், கும்பகோணம்.

? உலகத் தமிழ் மாநாட்டு நிகழ்ச்சிகளில் ப.நெடுமாறன் கலந்து கொண்டு உரையாற்றியுள்ளாரே?

! இந்தப் புலி ஆதரவாளருக்குக் கிடைத்த வரவேற்பும், வேறு சில அயல் நாட்டவருக்கு, 'புலி ஆதரவாளர்' முத்திரை குத்திக் கிடைத்த மரியாதையும் 'ஜெ' ஆட்சியின் அலாதி நியாயங்கள்!

● எஸ்.ஏ. கேசவன், கே. கழுகாசலபுரம்.

? வயிற்றுப் பிழைப்புக்காக அரசியலில் குதிக்கலாமா?

! 'தேச சேவை', 'மக்கள் பணி' என்ற உயர் நோக்கங்களோடு அரசியலில் குதித்த காலம் மலையேறி விட்டது. எனவே வயிற்றுப் பிழைப்புக்காக அரசியலில் குதிப்பதை அனுமதிக்கலாம். ஆனால் கொள்ளையடிக்க அல்லவோ குதிக்கிறார்கள்!

● கோ. ரா. சந்திரன், சங்கரன் கோயில்

? அரை கட்டணத்தில் தஞ்சாவூர் சென்று வந்தீர்களா?

! தென்னக ரயில்வே ஏகமாக டிக்கெட் விற்று சாதனை புரிந்துள்ளதாக மார் தட்டிக் கொண்ட போதிலும், அரைக் கட்டணத்தில் போனவர்களை விடவும் அ.இ.அ.தி.மு.க. நிர்ணயித்த கட்டணத்தை வாங்கிக் கொண்டு வந்தவர்களே அதிகம்! -நானில்லை சார்!

நீங்கள் கேட்டவை - தராசு



• "தலைகுனிவு"



• தமிழ் மாநாட்டில்....



• "?!?"



• அடிக்கடி அடிபட.....!



• தேவையா?"

• ..."என்ன பயன்?"



• தாலாட்டு...





• ஆதங்கம்



• "ஒத்திப்போடு!"

● எம். சந்திரசேகர், மேட்டு மகாதானபுரம்.

? மதன்!!!

! மேம்புல்லு மேய்ந்தால் பத்தோடு பதினொன்று; பிரச்னைகளை ஆழ்ந்து கவனித்து பதில் சொன்னால் பத்திலே ஒன்று. நகைச்சுவையும் கலந்து பேசினால் சபாஷ், சரியான போட்டி!

● எஸ். குமார், காரைக்குடி.

? "மைக்கேல் ஜாக்சனின் ஆட்டம் நமக்குத் தேவையா?" என்ற பத்மா சுப்பிரமணியத்தின் கூற்று பற்றி...?

! "பத்மா சுப்பிரமணியத்தின் நடனம் நமக்குத் தேவையா?" என்று ஜப்பானியர் நினைத்திருந்தால் லட்சக்கணக்கான ரூபாய் பரிசை பத்மா பெற்றிருக்க முடியாதே!

● டி. சந்திரன், ஈரோடு.

? உலகத் தமிழ் மாநாடு மூலம் தமிழுக்கு அல்லது தமிழருக்கு என்ன பயன் கிடைத்தது?

! 'ஏ' ஜோக் ஒன்றினை பெண் அ.தி.மு.க எம்.எல்.ஏ எடுத்துச் சொல்ல, அதன்மூலம் நமது அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்களின் பெருமை உயர்ந்ததே, போதாதா? அந்த ஜோக்கைக் கேட்டு முதல் வரிசையில் இருந்த முதல்வரும் தோழி சசிகலாவும் குலுங்கக் குலுங்கச் சிரித்து, தமிழகத்தையே உன்னத நிலைக்கு உயர்த்தி விட்டார்களே, காணாதா?

● எஸ். நாரம்புநாதன், காஞ்சிபுரம்.

? போலீஸாருக்கு மயக்க மருந்து கொடுத்து இரு கைதிகள் விலங்குடன் தப்பி ஓடியது பற்றி...?

! பாவம், ஏமாந்து போன இந்தப் போலீஸ்காரர் எவ்வளவோ தேவலாம்! பரோலில் வெளி வரும் கைதியைத் திருட அனுமதித்து, தேட்டையில் பாதி பெற்றுக் கொண்டு, கைதி ஜெயிலிலேயே இருந்ததாகப் பொய்த் தோற்றம் உருவாக்கிய போலீஸ்காரரைச் சொல்லுங்கள்! அடடா! என்ன சாமர்த்தியம்! மெய்சிலிர்க்கிறது!

● முகதி சுபா, திருவண்ணாதபுரம்.

? உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத் தலைவர் கரோஷிமாவே 'முதல்வரைச் சந்திக்க முடியவில்லை' என ஆதங்கப்பட்டுள்ளாரே?

! அரசு பொய் சொல்வது, அதிலும் நீதி மன்றத்தில் பொய் பேசுவது பெருங்குற்றம். அவ்வாறு இருக்க, "மாநாட்டுக்கான அழைப்பிதழ்களை உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனந்தான் அனுப்புகிறது. தமிழக அரசுக்கு அதில் சம்பந்தமில்லை" என்று அரசுத் தரப்பில் நீதி மன்றத்தில் கூறப்பட்டதை, கரோஷிமா எதிர்த்தும் மறுத்தும் பேசியிருக்கிறார். இப்படி தமிழக அரசின் குற்றத்தைப் பிட்டு வைத்த பிறகு, முதல்வரைச் சந்திப்பதாவது ஒன்றாவது! தர்ம அடி கொடுத்து அனுப்பாமல் விட்டதே பெரிய காரியம்!

● அனுபவ், சென்னை.

? பட்ஜெட்டை ஒத்திப் போடச் சொல்கிறாரே சேஷன்?

! 'அதிகார வரம்பு மீறுகிறாரோ? இவர் ஆட்டி வைத்த படியெல்லாம் அரசு ஆடித்தான் ஆக வேண்டுமா?' என்று சிலருக்குக் கோபம் வரக்கூடும் என்றாலும், சேஷனின் கருத்து ரொம்ப நியாயமானது. தேர்தலுக்குச் சில தினங்கள் முன் சமர்ப்பிக்கப்படும் பட்ஜெட்டில் பலவித சலுகைகளை அறிவித்து, அனைத்துத் தரப்பினருக்கும் கவர்ச்சிகரமானதாக்கி, அதன்மூலம் கணிசமான வோட்டுக்களை ஆளும் கட்சி அறுவடை செய்ய வாய்ப்பிருக்கிறது. பத்துப் பன்னிரண்டு நாள் தாமதமாக பட்ஜெட்டை சமர்ப்பிப்பதால் ஒன்றும் குடி முழுகிப் போய் விடாது. ஆனால் தேர்தல் தார்மீக நெறிமுறைகள் பலப்படும்.

● ஞா. சிவக்குமார், திருப்போரூர். ☐

? உலகத் தமிழ் மாநாடு நடத்திய நமது முதல்வர், ஜெயலலிதா என்ற தம் பெயரில் உள்ள 'ஜெ'யை தமிழ்ப் படுத்துவாரா?

! "ஜெயலலிதாவை, 'ஜெயலலிதா' என்றே அச்சுக் கோக்கும் போது, ராஜாஜியை மட்டும் ஏன் 'ராசாசி' என்று அச்சுக் கோக்க வேண்டும்!" என்று கேட்டு முரசொலிக்கு ராஜாஜி எழுதிய கடிதம்தான் நினைவு வருகிறது.

☐ ரூ. 25 பரிசு பெறுபவர்:
ஞா. சிவக்குமார்,
சிதம்பர சுவாமிகள் மடம்,
திருப்போரூர் - 603 110.

வெள்ளறைக்கு ஒரு விஜயம்; வைகுண்ட பதவி நிச்சயம்!

கமலமனராஜன்



• கோபுர தரிசனம்

எமதர்மராஜா தன் லோகத்துக்கு வருகிறவர்களை, "நீங்கள் வெள்ளறையுள் கல்லறை மேல் பொன்னை ஒரு முறையாவது சேவித்ததுண்டா?" என்று கேட்பானாம். "சேவித்திருக்கிறோம்" என்றால், வைகுண்டத்துக்கு மரியாதையுடன் அனுப்பி வைப்பானாம்!

'சேவிக்காதவர்கள் கூட சேவித்திருப்பதாகச் சொல்லி விட்டால் என்ன செய்வது?' என்று குதர்க்கமாகக் கேட்கக் கூடாது! எமன் ஏமாந்தாலும் பக்கத்தில் கணக்குப் பார்த்துக் கொண்டிருக்கும் சித்ரகுப்தனை 'டபாய்க்க' முடியாது என்பது நமக்குத் தெரிந்திருக்க வேண்டும்.

அதைவிட முக்கியமாகத் தெரிந்திருக்க வேண்டிய விஷயம், வெள்ளறைக்கு ஒரு முறை போய் பெருமாளைத் தரிசித்து விட்டால் வைகுண்ட பதவி நிச்சயம் என்பது.

இப்படிப்பட்ட தலத்தில் உடையவர் ராமானுஜர் பன்னிரண்டு ஆண்டுகள் தங்கியிருந்ததில் வியப்பில்லை. இதே உடையவரால் "எங்கள் ஆழ்வான்" என்று பாராட்டப் பெற்ற விஷ்ணு சித்தர் உதித்த தலமும் இதுதான். இதுவும் போதாதென்றால் பெரியாழ்வாரும் திருமங்கை ஆழ்வாரும் மங்களாசாசனம் செய்திருக்கிறார்கள் என்பதையும் நினைவில் கொள்க.


சிபிச் சக்கரவர்த்தியால் கட்டப்பட்டதாகக் கருதப்படுகிற இக்கோயில் திருவரங்கத்துக்கு நிகரான புகழ் ஒரு காலத்தில் பெற்றிருந்தது. பல்லவர் காலத்தில் பாறையைக் குடைந்து குடவரைக் கோயிலாகக் கட்டப்பட்டது, பிற்காலத்தில் பிரும்மாண்ட வளர்ச்சி பெற்றிருக்கிறது. ஆனால் இன்று...? பழைய பெருமை இழந்து, இடிந்த கோபுரத்துடன்தான் காட்சி தருகிறது.

இது நம்முடைய பிழைதானே தவிர, பகவானுடைய குற்றமில்லை என்பதைப் புரிந்து கொண்டு, திருச்சியிலிருந்து சுமார் இருபது கி.மீ. தொலைவில் உள்ள வெள்ளறைக்குச் சென்றால், கொள்ளிடக்கரைக்கு அருகில் உள்ள இப் பிரதேசத்தில் சின்னஞ்சிறு குன்றுகள் இருந்திருக்கின்றன என்பதை உணரலாம். 'அறை' என்றால் கல். வெண்மையான கல்லாக இருந்ததால் 'வெள்ளறை' என்ற பெயர். இத்தகைய ஒரு சிறந்த பாறை மீது கோயில் அமைந்திருக்கிறது.

கீதையின் பதினெட்டு அத்தியாயங்களைக் குறிக்கும் பதினெட்டுப் படிகளில் ஏறி கோபுரத்தை அடைகிறோம். பிறகு நால் வேதங்களைக் குறிக்கும் நான்கு படிகளையும், அஷ்டாக்ஷரத்தைக் குறிக்கும் எட்டு படிகளையும், காயத்ரியின் அக்ஷரங்களைக் குறிக்கும் 24 படிகளையும் கடந்து புண்டரீகாக்ஷப் பெருமாளின் சந்நிதியை அடைகிறோம்.

பிராட்டியாருக்குத் தான் செங்கோல் ஏந்தி அரசாள வேண்டும் என்று ஆசை உண்டாயிற்று. அதை அறிந்த திருமால், "திருவெள்ளறையில் தவம் செய்யும் பூமிப் பிராட்டிக்கும் மார்க்கண்டேய முனிவருக்கும் தரிசனம் தருவேன். அப்போது நீ செங்கோல் செலுத்தலாம்!" என்று அருளினாராம்.

திருவெள்ளறையில் இன்றும் செங்கோல் தரித்து ஆட்சி செய்கிறார் பங்கஜ வல்லித் தாயார்.



• பதினெட்டுப் படிகள்

வாழித் திருநாமத்தில் "சீராரும் பங்கயச் செல்விக் இனியான் வாழியே" என்று போற்றப்படுகிறார். வெள்ளறை மேல் நின்ற நம்பியான புண்டரீகாக்ஷப் பெருமான்.

'நெடியோன்' என்ற பெயருக்கேற்ற திருவடிவம். கையில் பிரயோக சக்கரத்துடன் காட்சியளிக்கிறார். ஸ்ரீநிவாஸ பட்டர் சாந்தமும் அமைதியும் தவழும் முகத்துடன் சேவை செய்து வைக்கிறார். கை விளக்கை ஏற்றி, "இதோ மார்க்கண்டேய முனிவர் தவம் செய்கிறார். இடது புறம் பூமிப் பிராட்டியார். மேலே சூரியனும் சந்திரனும் கவரி வீசுகிறார்கள். கருடனும் ஆதிசேடனும் மனித உருவில் வணங்கி நிற்கிறார்கள்" என்று தரிசனம் செய்து வைக்கிறார்.

செந்தாமரைத் தடங்கண், செங்கனிவாய் எம்பெருமானை எவ்வளவு நேரம் தரிசித்தாலும் போதும் என்று தோன்றாது.


தனிக் கோவிலில் எழுந்தருளியிருக்கும் நாச்சியாரின் தமிழ்த் திருநாமம் செங்கமலவல்லி. தாயார் கோவில் சுவரில் ஒரு இடத்தில் சிறிய துவாரம் இருக்கிறது. அதன் வழியே பார்த்தால், ஸ்ரீரங்கம் கோபுரமும், திருவானைக்கா அகிலாண்டேசுவரி கோபுரமும் மலைக்கோட்டையும் நன்றாகத் தெரிகிறது. குன்றின் மீது கட்டப்பட்ட கோவிலாகையால் துல்லியமாகத் தரிசிக்கலாம்.

சிபிச் சக்கரவர்த்தி கோவிலைக் கட்டி முடித்தவுடன் அந்தர் வேதி என்ற ஊரில் வாழ்ந்து வந்த 3700 ஸ்ரீவைஷ்ணவர்களை அழைத்து வந்து இங்கே குடியேற்றினாராம். ஒருவர், வரும் வழியிலேயே வைகுண்ட பதவி அடைந்து விட்டார். எம்பெருமானே இறந்தவருடைய இடத்தில் வந்து அருளினாராம். இங்கே வசிக்கும் ஸ்ரீவைஷ்ணவர்கள் இன்றும் கோவிலில் ஆவணி அவிட்ட ஹோமம் செய்கிறார்கள். அதில் பகவானும் கலந்து கொள்வதாக ஐதீகம்.

தாயார் கோவிலிலிருந்து வரும் போது பல அபூர்வச் சிற்பங்களைக் காண்கிறோம். முக்கியமாகத் தரிசிக்க வேண்டிய சந்நிதி. பதினாறு புஜங்களுடன் சக்கரத்தாழ்வார். பின்பக்கமாகத் தரிசிக்கும் போது யோகநரசிம்மராகக் காட்சியளிக்கிறார்.

உடையவர் இங்கே தங்கியிருந்த போது பங்கஜநாயகிப் பிராட்டியார், "இங்கே ஒரு சந்நியாசி வந்து தங்கியிருக்கிறாரே. அவருக்கு ஏதாவது நாம் செய்ய வேண்டாமா?" என்று கணவரிடம் கருணை பொங்கக் கேட்டிருக்கிறார். "நீ அமுது செய்யும் பிரசாதத்தை அனுப்பு" என்று சொன்னாராம் பெருமான். தாயாருக்கு. நிவேதனம் செய்த தளிகை, இன்றும் தேரோடும் வீதியில் உள்ள ராமானுஜர் சந்நிதிக்கு தினந்தோறும் கொண்டு வரப்பட்டு அமுது செய்விக்கப்படுகிறது.

இங்கு கிடைக்கும் பிரசாதத்தின் மகிமை அத்தகையது!



"நம்ம கல்யாணத்திற்குப் பிறகும், என் சம்பளத்தை எங்கப்பா கிட்டே தான் நான் தருவேன்..."

"அப்போ சரி சுஜாதா.. நானும் உங்க வீட்டிலிருந்தே ஆபீஸுக்குப் போறேன்..."

— ஆர். வசந்தகுமார்



"உனக்காக எதையும் தாங்குவேன்னு சொன்னது நிஜம் தான். அதுக்காக உன் ஹேர்பின் தொடையைக் குத்தறதை எவ்வளவு நேரம் பொறுத்துக் கறது?"

- 'வானவில்' மூர்த்தி



வேடிக்கை மனிதர்கள்

திலகவதி

குழந்தை கை கிலுகிலுப்பையாக விடு குலுங்கியது. சிரித்தது. என்றால் சௌரி வந்திருக்கிறார் என்று அர்த்தம். ஊருக்குள் என்னவோ டாக்டர் சௌரிராஜன் என்று பெத்த பேருதான். வைத்தியம் பார்ப்பதிலும் சரி, வருமானம் பார்ப்பதிலும் சரி சோடையில்லை. எப்படி சோடை போகும்? திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் ராஜவைத்தியம் பார்த்த பரம்பரை. இப்போதும் கல்யாணம், காட்சி என்று வீட்டு மனுஷாள் ஒன்று சேர்ந்தால் பத்துக்கு ஒம்பது பேர் அதில் டாக்டர்தான். தாத்தா டாக்டர், பாட்டி டாக்டர், அப்பா, அம்மா, அண்ணன், அண்ணி, தங்கை, தங்கை புருஷன், சகலை, அத்தான் எல்லாம் டாக்டர் மயம்.

இவர் கூட சௌரியைக் கேலி பண்ணுவார். "ஒரு பெரிய பாலிகிளினிக் தெறந்தா வெளியிலே இருந்து ஒரு பயலை வாங்கன்னு அழைக்க அவசியமே இல்ல, போங்க." இது வெறும் பேச்சுதான். நெருங்கிப் பழகியதால் எங்களுக்குத் தெரியும். காசும், பணமும், பரம்பரைச் சொத்துமாக வாழ்கிற எல்லாக் குடும்பங்களையும் போலவே டாக்டர் வீட்டாருக்குள்ளும் மௌனப் புகைச்சல், பூசல், உட்பகை, வெளிப்பகை என்று ஒன்று பாக்கியில்லாமல் இருந்தது. என்றாலும் சம்பிரதாயமாக நாகரிகம் தவறாமல் வெளிப்பூச்சாகப் பழகிக் கொள்ளுவதில் குறைச்சல் இருக்காது. மேல்பார்வைக்கு முறை தவறாது சடங்குபூர்வமாக விஷயங்கள் நடந்தாலும் அவனவன் வயிற்றுவலிக்கு அவன் தான் மருந்து குடித்தாக வேண்டும் என்ற ரீதியில் ஒவ்வொருத்தரும் தங்கள் சாமர்த்தியபடி தங்கள் காரியத்தை சாதித்துக் கொள்ள வேண்டியதாகவே இருந்தது.

அதனால்தான் சௌரிக்குக் கல்யாணம் பேசியபோது அவர் தன் சொந்த அண்ணன் அண்ணி அபிப்பிராயத்தை விட எங்கள் அபிப்பிராயத்தையே முக்கியமானதாகக் கருதினார். பெண் பார்த்தலில் தொடங்கி, பிள்ளையைத் தொட்டிலில் போடுவது வரை இவரை முன்வைத்துத்தான் சகல காரியங்களும். சௌரிக்கு ரம்யா வந்து வாய்த்தது அவருடைய உடன் பிறப்புகளின்– முக்கியமாக மூத்தவர்களின்– வயிற்றெரிச்சலைக் கிளப்பியது பலவிதங்களில் வெளிப்படையாகவே தெரிந்தது.

குடும்ப வழக்கம் தவறாமல் ரம்யாவும் டாக்டருக்குப் படித்திருந்தாள். போஸ்ட் கிராஜுவேஷன் வேறு. குழந்தை வைத்தியத்தில் டிப்ளமா. வெண்தாழையால் செய்து வைத்த தேக வாகு. புரளப் புரள தலைமுடி. விளக்கேத்தி நிற்கிற வெங்கலப் பதுமை மாதிரி தோற்றம். பெற்றோருக்கு ஒரே பெண். சொல்லி மாளாத சொத்து. தென்னிந்தியத் திரைப்படங்களில் முடங்கிக் கிடக்கிற மூலதனத்தில் பாதி, ரம்யாவின் அப்பா லட்சுமிபதியின் "பைனான்ஸ்"தான். அமிர்தா நதிக்கரையில் ஆயிரம் ஏக்கர் நிலம். பெரிய நகரங்களில் எல்லாம் வீடுகள். அப்புறம் வயித்



"ஆனாலும் நம்ம டாக்டருக்கு இவ்வளவு ஞாபகமறதி கூடாது."

"ஏன், என்னாச்சு?"

"பிறந்தநாள் கேக் வெட்டும் போது கூட 'அனஸ்தீசியா கொடுத்தாச்சா?' ன்னு கேட்கிறாரே?"

- இரத்தின.மனோகரன்

தெரிச்சலுக்குக் கேட்பானேன்? போதாக் குறைக்கு இந்தத் தலைமுறையின் முதல் பேரக்குழந்தையென்று கிருஷ்ண விக் கிரமாகப் பையனை வேறு பெற்று விட்டாள்.

இத்தனைக்கும் நடுவில் சௌரி என்னவோ பத்து வருடங்களுக்கு முன்னால் மருத்துவக் கல்லூரி மாணவராக எங்களுக்கு அறிமுகமான போது இருந்தது போலவே இப்போதும் ஒரே கேலியும் கிண்டலும் கேளிக்கையுமாகவே இருந்தார். டாக்டராகச் செய்கிற தமாஷ் ஒரு பக்கம் இருக்க, அவருடைய நடவடிக்கைகளும் அவரைச் சூழ நடக்கிற விஷயங்களும் எங்களுக்குப் படு வேடிக்கையாக இருக்கும்.

இருக்காதா பின்னே? அனுப்பம்பட்டியில் சொந்த கிளினிக் வேலையை முடித்துக் கொண்டு, ஒரு கோடியாகப் பயணம் பண்ணிக் கொண்டு, காயலாங்கடைக்குக்கூட பெறாத ஒரு மோட்டார் சைக்கிளில் எங்கள் வீட்டுக்குப் 'பல் விளக்குவதற்காக' வருவார். ஆமாம்! பல் விளக்குவதற்காக... இந்த மர்மம் விடுபடவே பத்து நாட்களுக்கு மேலானது எங்களுக்கு.

"நான் சிகரெட் குடிக்கிறேங்கறது தெரிஞ்சா ரம்யா உசுரோடவே இருக்க மாட்டான்" உள்ளங்கையில் வாயால் ஊதி டூத்பேஸ்ட் மணத்தை நுகர்ந்தபடி சொல்லும் டாக்டரைப் பார்த்து எப்படித்தான் சிரிக்காமல் இருப்பது?

"உங்களுக்கென்ன அண்ணி? தைரியமா பொண்ணு பாக்கப் போன அன்னிக்கே சொல்லித் தொலைச்சிருந்தீங்கன்னா தேவலை. ரம்யா, ஒரு நாளைக்கு ஒரு தடவையாவது அவனோட அப்பா என்னைப் பத்தி என்னவெல்லாம் வெசாரிச்சு, நான் சிகரெட் கூட குடிக்காத நல்ல பையன்னு எனக்கு அவளைக் கட்டிக் கொடுத்திருக்கார்னு அலட்டாத நாளில்லை. இந்த விஷயம் தெரிஞ்சுதோ, அழுதழுதே என்னைக்

கல்கி

19.2.95 இதழில்

கி. ராஜேந்திரன்

எழுதும்



பூனைகள் ராஜ்ஜியம்

ஒரு மாறுபட்ட மர்மத்தொடர் ஆரம்பம்

கொன்னுடுவா...'' டாக்டர், சட்டைப் பையையும் பேண்ட் பாக்கெட்டையும் உள்ளே வெளியே என்று கவிழ்த்துத் தட்டி விட்டுத்தான் கிளம்புவார். சிகரெட் தூள் இருந்துவிடக் கூடாதாம்.

டாக்டர் மட்டும்தான் என்றில்லை. ஒரே மகளுக்குத் துணையாக வீட்டோடு தற்காலி கமாகத் தங்கியிருக்கிற அவருடைய மாமனா ரும் மாமியாரும் கூட அவரைப் போலவே வேடிக்கையாகவே எங்களுக்கு இருந்தார்கள்.

டாக்டரின் மாமியார் பள்ளிச் சிறு மியைப் போல நோட்டுகளையும் புத்தகங் களையும் வைத்துக் கொண்டு வீட்டுப்பாடம் எழுதிக் கொண்டிருந்தார். தபால் முறையில் படிப்பு. இது ஒன்றும் வேடிக்கை இல்லை. ஆனால் சமையல்காரம்மாளின் தாமதத்துக்கு மன்னிப்புக் கேட்டு, ''டின்னர் இஸ் டிலேய்டு. ப்ளீஸ் ரெக்ரெட்'' என்று ஆங்கி லம் பேசியபோது சிரிப்பை அடக்கிக் கொள் ளத்தான் வேண்டியிருந்தது.

எங்கிருந்தோ அசரீரியாக எங்களை வரவேற்றது டாக்டரின் குரல். காயலாங் கடை மோட்டார் சைக்கிளுக்கு நெருங்கிய உறவாக நின்றிருந்த மாரிஸ் மைனருக்குக் கீழே இருந்து கரியும் கிரீசுமாகத் தலையை நீட்டி தன் இருப்பைத் தெரிவித்துக் கொண் டார்.

''வாங்கண்ணி. ரம்யா குழந்தையை எடுத்துகிட்டு டாக்டர் கிட்டே போயிருக் குது... வந்துடும்'' வாயில் கவ்விக் கொண் டிருந்த ஸ்க்ரூடிரைவர் போன்ற ஆயுதத்தைத் தாண்டி வந்த வார்த்தைகளை இப்படித்தான் மொழிபெயர்த்துக் கொள்ள வேண்டிய தாயிற்று.

"என்ன சொல்றீங்க டாக்டர். அவங்களே குழந்தை வைத்திய நிபுணர் ஆச்சே... அப் புறம் நீங்க வேற இருக்கறீங்க...''

"அதனால என்ன? ஒரு நல்ல டாக்டர் கிட்டே காட்டலாமேனு போயிருக்கிறாள்.'' – சொல்லி முடித்த பின்னரே பேச்சின் அபத் தம் டாக்டரின் மாமியாருக்கு உறைத்திருக்க வேண்டும்... "அதாவது... என்னன்னா நேத்து ராத்திரி பூரா அந்தப் பையன் அழுத அழுகை இருக்கே... அதைப்பார்த்து சகிக்க முடியாம நான் அழ, என்னைப்பார்த்து ரம்யா அழ, ஒரே ரணகளம்தான் போங்க... நல்லவேளையா ரம்யாவோட அப்பா ஊர்லே இல்லே. இல்லேன்னா அவரும் ஆரம்பிச்சிருப்பாரு...''

அம்மாளுக்கு ரம்யா ஒரே குழந்தை. அனுபவம் போதாது. ஆனாலும் இப்படியா?

"சாரி... ஐ பர்காட்டட்... காபி சாப் பிடறீங்களா?'' என்று உபசரித்தார்.

இவர் போய் மாரிஸ் மைனர் அருகே நின்று கொண்டு, "ஏன் டாக்டர் நல்ல டாக்டரைப் பார்க்கப் போற அதே கொள்கையைக் கடைப்பிடிச்சு இந்த வண்டியையும் எதாவது ஒரு நல்ல மெகானிக்குக்கிட்டே வுட்டுப்பாத்திர வேண்டியதுதானே...'' என்றார் நமுட்டுச் சிரிப்புடன்.

"ஏன் நான் ரிப்பேர் பார்த்தா கெட்டுடுமா... ஒண்ணு சொல்லவா... இன்னிக்கு துறுதுறுன்னு ஒரு அம்மா.... இவங்க வயசிருக்கும்" என்று மாமியாரைச் சுட்டிக் காட்டி விட்டுத் தொடர்ந்தார். ''காது கேக்காத புருஷனோட ஆஸ்பத்திரிக்கு வந்தாங்க. மருத்துவம்தான் எத்தினியோ முன்னேறி இருக்குதே. இதைச் சரி பண்ணிடக் கூடாதாம்மான்னு கேட்டேன். அதுக்கு என்ன பதில் சொன்னாங்க தெரியுமா...? 'டாக்டர், காதுக்குள்ளே ஏதாவது இருந்தாத்தானே சரி பண்ணறதுக்கு. அப்பப்ப கொஞ்சம் கொஞ்சமா தோண்டியெடுத்து டாக்டருங்க வெளியே போட்டுட்டாங்க. காதுங்கற வடிவந்தான் இப்ப பாக்கியா இருக்கு'ன்னாங்க. அந்த மாதிரி ரம்யாவோட அப்பா ஒரு வெள்ளி விழாக் காலத்துக்குத் தானே ரிப்பேர் பார்த்துப் பராமரிச்சு இதை இந்த நிலவரத்துக்குக் கொண்டாந்துட்டார். இனிமே அதிலே பாழாக எதுவும் இல்லை..."

"சொல்ல மாட்டீங்களோ...போன வாரம் அப்படித்தான் மெகானிக் இருபத்தியஞ்சு ரூபா கேட்டான்னு இவரே எதையோ பண்ணிட்டு, கடைசியிலே கோயிலுக்குப் போற வழியிலே குப்குப்னு புகையும் சத்தமுமா வந்து முந்நூத்தி சொச்சம் செலவு வச்சது" என்றாள் மாமியார்.

கார், டாக்டருக்கு வரதட்சணை என்று தரப்பட்டதல்ல. வீட்டோடு மாமனாராக வந்த லட்சுமிபதியுடனே சேர்ந்து வந்த பல வஸ்துக்களில் இதுவும் ஒன்றாக இருந்தது. வண்டியின் கல்யாண குணங்களையும் அரபிக்குதிரை தோற்கும் விதத்தில் அது சவாரி போகும் அழகையும் சொல்லி பெரியவர் எங்களை மிகவும் வற்புறுத்தி அதில் பயணம் செய்ய வைத்ததும் நினைவுக்கு வந்தது.

வீட்டிலிருந்து கிளம்பும்போது நன்றாகத்தான் இருந்தது. பத்து கிலோ மீட்டர் போவதற்குள் நான் சாய்ந்து கொண்டிருந்த முன்புற இடப்பக்கக் கதவு கழன்று சரிந்தது. நான் அதிர்ந்து போனேன்.

"டயட்டிங் பண்ணு. எக்சர்சைஸ் செய் என்று சொன்னா கேட்டாதானே. போற எடத்திலேயாவது எதுமேலயும் சாயாம நில்லு... எல்லாம் என்னை மாதிரி உறுதியா இருக்குமா" பேசிக் கொண்டே கதவை ஒரு மாதிரியாகப் பொருத்தினார் இவர். அவர் சொன்னபடியே இடக்கை முட்டியின் பலத்தால் கதவை இறுகப் பற்றிக் கொண்டேன் நான்.

அடுத்த ஐந்தாவது கிலோ மீட்டரில் அவர் பக்கத்துக் கதவு திறந்து கொண்டது. எனக்குக் கொஞ்சம் மனசு சமாதானமாயிற்று. தலையில் அடித்துக் கொண்டு காரிலிருந்து இறங்கினார் இவர். மீண்டும் கதவு யதாஸ்தானத்தை அடைந்தது. கடகடப்பு என்னவோ நிற்கவில்லை. இவர் வலது கையால் ஸ்டீயரிங்கையும் வலது முழங்கையால் மூடப்பட்ட கதவையும் பற்றியபடி பயணத்தைத் தொடர்ந்தோம்.

சற்று நேரம்தான் ஆகியிருக்கும்; பெருத்த ஓசையுடன் டிக்கி திறந்து கொண்டது. அலிபாபாவின் மந்திரச் சொல் கேட்ட குகைப்பாறை போல டிக்கியின் கதவு தானாக மேலே எழுந்து வாய் பிளந்து நின்றது.

கைக்குக் கிடைத்த கயிறு, பழந்துணி எல்லாவற்றையும் சேர்த்து வெள்ளரிப் பழத்துக்கு பூண் போடும் பாவனையில், பார்சல் கட்டுவது போல, திறந்து கொள்ள முடியாதபடி காரைக்கட்டிவிட்டு பயணத்தைத் தொடர்ந்தோம்.

"அப்பாடா! இனி கவலை இல்லை" என்று நிம்மதிப் பெருமூச்சு விட்ட வேளையில் படாரென்று திறந்து கொண்டது பானெட். அப்புறம் என்ன? கடைசியாக வண்டியைக் கட்டித்தான் இழுத்துவர வேண்டியதானது.

சிந்தனையைக் கலைத்தது, கேட்டின் கிரீச்சொலி. இரண்டு கைகளிலும் கனத்த துணிப்பைகளைச் சுமந்து கொண்டு ரெட்டைநாடி தேகம் வேர்த்து வழிய தஸ்புஸ்ஸென்று மூச்சுவிட்டுக் கொண்டு லட்சுமிபதிதான் வந்து கொண்டிருந்தார்.

காதலி: "உங்க வீட்ல உங்களுக்குப் பெண் பார்க்கறாங்களாமே.. நீங்க என்கிட்ட சொல்லவே இல்லியே!"

காதலன்: "சொல்லியிருப்பேன். ஆனா நீ பொறாமைப் படுவியே... அதுக்குத்தான் சொல்லலை!"

— கொங்கணாபுரம் வே.செந்தில்



"என்ன அப்படிப்பாக்கறீங்க.எவ்வளவு பெரிய பணக்காரன். ஒரு காரை எடுத்து கிட்டு வரக் கூடாதான்னா? அடக் குறைஞ்ச பட்சம் பஸ்ஸ்டாண்டில இருந்து ஒரு ஆட்டோவாவது டாக்சியாவது வச்சிகிட்டு வரக் கூடாதான்னா? பெரியவங்க சேத்து வச்சிட்டுப்போன சொத்தையும் பணத்தையும் அப்படியெல்லாம் விரயமாக்கப்படாது. இப்பப்பாருங்க சிக்கனத்துக்குச் சிக்கனம், எளிமைக்கு எளிமை, வாக்கிங் போனாப் பலயும் ஆச்சு" சொல்லிக் கொண்டிருக்கும் போதே, பை வார் அறுந்து பொத்தென்று விழுந்தது.

டாக்டர் வீட்டில் இப்படியெல்லாம் நடப்பது சகஜம்தான். ரம்யா குழந்தையோடு வீடு திரும்பினாள். ஏதோ முக்கிய வேலையை மறந்துவிட்டுப் போன இனுசில் பையன் போய் அலாரம் டைம் பீசை எடுத்துக் கீழே போடப் போனான்.


"டேய், டேய்..." பதறிக் கொண்டு வந்த டாக்டரை கையமர்த்தி அமைதிப் படுத்தினார் லட்சுமிபதி. "உடைக்கட்டும் மாப்ளே. வேற வாங்கிக்கலாம். தடுக்காதீங்க. அழ ஆரம்பிச்சுடுவான். அவங்கம்மா வழக்கம் அவனுக்கு அப்படியே வந்திருக்கு..." ஒவ்வொரு தடவையும் ரம்யா பரீட்சை எழுதி விட்டு வருகிறவரை அவர் எப்படி கடும் பிரார்த்தனை செய்வார் என்றும் அப்படியும் ரம்யாவுக்குப் பரீட்சை கடினமாகி விட்டால் அவள் எப்படி இவருடைய பிரார்த்தனை சரியில்லையென்று அழுது கதறுவாள் என்பதையும் பல தடவைகள் சொல்லியிருக்கிறார்.

பல்லைக் கடித்துக் கொண்டு, நிராசையாகக் கண்களை இறுக மூடித்திறந்தார் டாக்டர். அதற்கென்றே காத்திருந்ததுபோல மியூசிக் ஹாரன் ஒலிக்க, படகுக்கார் வந்து வாசலில் நின்றது. மடிப்புக்கலையாத சபாரியும் பளபளக்கும் சூட்கேசுமாக லட்சுமிபதியின் மானேஜர் வந்து இறங்கினார். அந்தப் பாணியைக் கண்டு நாங்கள் அதிர்ந்து போனதை அவர் உணர்ந்திருக்க வேண்டும்.

"சார்... நான் பஸ்ஸிலே வந்திருக்கலாம். ஆனா, அது அய்யாவுக்குக் கேவலமில்லையா? இன்னாருடைய மானேஜர் பஸ்ஸிலே போறாருன்னு நாலுபேரு சொன்னா நல்லாவா இருக்கும். ஆயிரம் ரூபாயா பெரிசு... என்ன சொல்றீங்க..." என்று புன்னகைத்தார்.

யாரும் பேசவில்லை. டாக்டர் வீட்டில் தான் எதுவும் நடக்குமே!


தலைகீழான தாலாட்டு!
கதை : மதுமனோ
படம் :
ஏம்பா என் மகன் கிட்டேர்ந்து தபால் ஏதும் வந்திருக்கா...?
முதியோர் இல்லம்
நீங்க தினமும் தான் கேட்-குறீங்க. வந்தாத்தானே...
உங்க மகனுக்குப் பாசம் இருந்தா உங்களை இங்கே சேர்ப்பாரா?
ம்... அவனுக்கு எத்தனை வேலையோ.
அடுத்த வாரம்.
ஹலோ... முதியோர் இல்லம் தான் யார் வேணும்?
ஏம்மா என் மகன் கிட்ட இருந்தா போன்.?
இல்ல பாட்டி...
ம்... அவனுக்கு எத்தனை வேலையோ...
மறு நாள். முதியோர் இல்லத்தின் பத்தாவது ஆண்டு விழா கொண்டாடப்படுகிறது. கஸ்தூரி பாட்டியை மட்டும் காணவில்லை...


கஸ்தூரிப் பாட்டிக்கு உடல் நிலை சரியில்லை. டாக்டர் வந்து பரிசோதிக்கிறார்.
பிரஷர் அதிகமாயிருக்கு உடனே ஆஸ்பத்திரியில அட்மிட் செஞ்சாகணும்.
சரி டாக்டர்!
ஆஸ்பத்திரி சிகிச்சையிலும் உடல் நிலை தேறாததால் பாட்டியின் மகனுக்குத் தகவல் தெரிவிக்க அவன் வந்து சேர்கிறான்...
என்னம்மா உடம்புக்கு நா பதறிப் போயிட்டேன்.
ஒண்ணுமில்லப்பா... நீ வந்துட்டேல்ல. இனி குணமாயிடுவேன்.
அதனால என்னப்பா வருத்தப் படாதே...
சாரிம்மா... எனக்கு ஏகப்பட்ட வேலை. அதனால-தான் லெட்டர் கூட எழுதலை...
மறுநாள்...
அட ஆச்சரியமா இருக்கே! உங்க-ளுக்கு எல்லாமே நார்மல். மகன் வந்த சந்தோஷமா! இனி முதி-யோர் இல்லத்துக்கே போயிடலாம்!
வேண்டாம் டாக்டர். எனக்கு இன்னும் குணமாகலேன்னே சொல்லுங்க. அப்பத்-தான் என் மகன் என்னோட இருப்பான். இல்லைன்னா போயிடு-வான்... டாக்டர்...
டாக்டர் பிரமித்து நிற்கிறார்.

ஒரு சூப்பர் ஸ்டாரின் பூர்வ கதை



சில்வெஸ்டர் ஸ்டாலோன்! இன்று ஹாலிவுட்டின் சூப்பர் ஸ்டார்களில் ஒருவர். ஆனால் இவர் வாழ்க்கை - பிறந்த நாள்தொட்டு இன்று வரை - போராட்டங்கள் நிறைந்தது.

இலவச மருத்துவமனை ஒன்றில் பிரசவத்துக்காகச் சேர்ந்தார் ஜாக்குலின். குழந்தையை ஸிஸேரியன் செய்து வெளியே எடுத்தார்கள். ஆனால் எப்படி.? ஆபரேஷன் மிக மோசமாகச் செய்ததில் குழந்தையின் தலை, உடல், கால், முகம் எல்லாமே ஏறக்குறைய வாதம் பிடித்தாற்போலச் செயலிழந்து இருந்தன.

அந்தக் குழந்தைக்கு சில்வெஸ்டர் என்று பெயரிட்டார் தாயார். சினிமாவுக்காகக் கூட இப்பெயர் பிற்காலத்தில் மாற்றப்படவில்லை.

வளர வளர உடலாலும் மனத்தாலும் பலவீனமாக, கோணலாக இருந்தான் சில்வெஸ்டர். ஒவ்வொரு நாளும் சில்வெஸ்டரின் உடலை உறுதியாக்கும் முயற்சியில் ஈடுபட்டார் ஜாக்குலின்.

"ஒவ்வொரு நாளும் நீண்ட தூரம் நடக்க வைப்பேன். அதற்காக விசேஷ ஷூக்களை அணிவித்தேன். அவன் உடல், மனச்சக்திகளை உசுப்பிவிட என்னால் முடிந்த பயிற்சிகளை எல்லாம் அளித்தேன். அவனுக்கு மூன்று வயதானபோது அவனுக்கு ஆர்வமில்லாதபோதிலும் நடனப் பள்ளிக்கு அனுப்பினேன்."

சில்வெஸ்டர் பள்ளியில் சேர்ந்த பின்னர் பிரச்னைகள் மிக அதிகமாயின. "அவன் மனத்தாலும் உடலாலும் குலைந்த நிலையில் இருக்கிறான்' எனக் கூறிச் சக குழந்தைகள் பள்ளியில் அவனோடு விளையாட மறுத்தனர். ஆசிரியர்கள் வெறுத்து ஒதுக்கினர். சில்வெஸ்டர் கோமாளித்தனமெல்லாம் செய்து அவர்களை மகிழ்விக்க முயற்சிப்பான். ஆனால் அதனால் எந்தப் பிரயோஜனமும் ஏற்படவில்லை. ஜாக்குலின் மனம் தளராமல் எப்படியோ வருடத்தில் 12,000 டாலர் கட்டணம் வாங்கும் விசேஷப் பள்ளியில் அவனைச் சேர்த்துவிட்டார்.

எந்தக் கல்லூரியிலும் சில்வெஸ்டருக்கு இடம் கொடுக்க மறுத்துவிட்டனர். அமெரிக்காவிலிருந்து மகனுடன் புறப்பட்டு சுவிட்சர்லாந்துக்குப் போய் அங்கே இருந்த 'அமெரிக்கன் கல்லூரி'யில் சேர்க்கப் பெருமுயற்சி செய்தார் ஜாக்குலின். கல்லூரித் தலைவரைச் சந்தித்துக் கெஞ்சினார். கடைசியில் இருவருக்கும் இடையே ஒரு ரகசிய ஒப்பந்தம் உருவாகியது. ஜாக்குலின் ஓர் ஆண்டின் கல்லூரிக் கட்டணம் முழுவதையும் அப்பொழுதே கொடுத்துவிட வேண்டும். சில்வெஸ்டருக்கு மூன்று வாரம் பயிற்சி கொடுத்துப் பார்ப்பார்கள். சரியில்லை என்றால் கல்லூரியிலிருந்து அனுப்பிவிடுவார்கள். ஜாக்குலின் ஒப்புக்கொண்டார். மகனை விட்டுவிட்டு அமெரிக்கா போய்விட்டார். சில்வெஸ்டரிடமிருந்து போன் வந்தது - தான் படிக்க விரும்பவில்லை என்றும், அமெரிக்கா திரும்ப அனுமதிக்கும்படியும். ஆனால் தமக்கு இதயநோய் ஏற்பட்டிருப்பதாகவும் அதனால் அவன் திரும்பினால் தம்மால் கவனிக்க முடியாது எனவும் போனில் நடித்தார் ஜாக்குலின்.

அந்த சுவிட்சர்லாந்து 'அமெரிக்கன் கல்லூரி'யில்தான் சில்வெஸ்டருடைய வாழ்வின் திருப்புமுனை ஏற்பட்டது. அவருக்கெனவே கல்லூரியில் ஒரு மனோதத்துவ நிபுணர் நியமிக்கப்பட்டார். தாழ்வு மனப்பான்மையுடன் இருந்து வந்த சில்வெஸ்டர் அதிசயிக்கும் வகையில் மாணவர்களுடன் இயல்பாகப் பழக ஆரம்பித்தார். விளையாட்டுக்கான பல ஸ்காலர்ஷிப்புகளைக் கல்லூரியில் வென்றார். மறைந்திருந்த திறமைகளெல்லாம் வெளிவரத் தொடங்கின. பின்னாளில் சில்வெஸ்டர் திரை உலகம் மூலம் பிரபலமடைந்தபோது, அவர் வாழ்வை மாற்றி அமைத்த இந்தக் கல்லூரியும் பிரபலமடைந்தது.

தகவல் : **ஆலன்**

ஆதாரம் : **ஃபிலிம்பேர், 'ஸ்கிரீன்'**

பாலம்

●● கந்த புராணம், கச்சியப்ப சிவாசாரியார் ஆறு காண்டங்கள் அருளிச் செய்துள்ளார். உபதேச காண்டம் என, ஏழாவது காண்டம், கோனேரியப்ப நாவலர் என்பார் எழுதிய நூல் உண்டு. அதன் ஒரு பிரதி கிடைக்க அன்பர்கள் உதவக் கோருகிறேன். விலை தரத் தயாராயிருக்கிறேன்.

ஸ்ரீ ராமகதா வே. தியாகராஜன்,
17, 27வது தெரு, டி.ஜி.நகர்,
சென்னை-600 061.

●● ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்படும் ஒரு சிறந்த பல்பொடியை நல்ல முறையில் 'பேக்' செய்து 'மார்க்கெட்டிங்' செய்ய விருப்பமுள்ளோர் விண்ணப்பிக்கலாம்.

என்.ராமகிருஷ்ணன்,
ஏ6-, தாராபூர் அபார்ட்மெண்ட்,
22, ஸ்டேஷன் ரோடு,
சென்னை - 600 033.

●● எங்கள் கடையில் சான்றிதழ்கள் நகல் எடுக்க வந்த ஒரு மாணவி ஒரு சான்றிதழைத் தவறுதலாக விட்டுச் சென்று விட்டார். எஸ்.எஸ்.எல்.ஸி. தனித் தேர்வர் மதிப்பெண் சான்றிதழ். இதில் கணிதம் பாடத்தில் தேர்ச்சி பெற்றுள்ளார். பிறந்த தேதி 23.11.1976. சான்றிதழ் எண்: 1040724.

டி.கே.வி. பாலசுப்பிரமணியன்,
10, ஆர்த்தி ஆர்கேட்,
86, டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை,
சென்னை - 600 004.

●● உவர் நீர் இறால் வளர்ப்புத் துறையில் ஈடுபட்டுள்ளேன். தொழில் நுட்பம் மற்றும் புத்தகங்கள் தேவைப்படுகிறது. உதவுக.

பி.முத்துக்குமரன்,
53, உத்தரதெற்கு வீதி, குத்தாலம் (அஞ்சல்)
நாகை (மா.வ.) 609 801.

●● தையல் கலை மற்றும் எம்பிராய்டரி கலை தெரிந்தவர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்து உதவ இயலும்.

சீனிவாசன்,
26-D, ஆஸ்பத்திரி காலனி,
உப்பிலயபுரம் அஞ்சல்,
திருச்சி (மாவ) 621 011

●● மதுரை பல்கலைக் கழகம் அஞ்சல் வழி கல்வியின், அறிமுகநிலை வகுப்பின் தமிழ், ஆங்கிலம், கணிதம், அறிவியல் பாடநூல்கள் தேவை. தக்க விலை தரப்படும்.

சோ.தெ.பாலமுருகன்,
குஜிலியம்பாறை,
திண்டுக்கல் (மாவ)- 624 703.

●● உணவுக் காளான் வளர்ப்பில் ஈடுபட்டுள்ளேன். அனுபவம் உள்ளவர்களின் ஆலோசனை தேவை. தொடர்பு கொள்ளவும்.

தவமுதல்வன், திருவள்ளுவர் நகர்,
நியாங் (அஞ்சல்)
கோத்தகிரி - 643 217. நீலகிரி (மாவ)

●● ஸ்கிரீன் பிரிண்டிங், பவுண்டரி போன்றவற்றுக்கு மூலப் பொருளாகத் தேவைப்படும் சோடியம் சிலிகேட் தொழிலகம் முப்பது லட்சம் முதலீட்டில் ஆரம்பிக்கப்பட்டு மாதிரி தயாரிப்புகள் வெற்றிகரமாக வந்துள்ளன. வர்த்தக ரீதியில் தயாரிப்புக்கு ரூ.50,000 அல்லது அதன் மடங்குகளில் முதலீடு செய்யக் கூடியவர்களுக்கு, லாபப் பங்கு தவிர, நிர்வாகக் குழுவில் பதவியும், நிரந்தரப் பணியும் வழங்கப்படும்.

எம்.ஏ.பி. ராஜன்,
மதுரா டிஸ்ட்ரிபியூட்டர்ஸ்,
4/167, மருது பாண்டியர் தெரு,
தாசில்தார் நகர்,
மதுரை - 20.

●● கட்டிட வரை படங்கள் வரைய முன் அனுபவமுள்ள டிராப்ட்ஸ்மேன்கள் தேவை. பயின்றவர்கள் எழுதவும்.

நேஷனல் பில்டர்ஸ்,
M 14, காமதேனு அபார்ட்மெண்ட்,
பொன்னம்பலம் சாலை,
கே.கே.நகர், சென்னை - 78.

(பாலம் மூலம் இணையும் வாசகர்களின் வெற்றி தோல்விகளுக்குக் கல்கி நிறுவனம் பொறுப்பு ஏற்காது.)

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் : வி. முரளி, பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : சீதா ரவி. நிர்வாக ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்குலேஷன் மானேஜர் : 2345623; சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் : ரூ. 525/-.

பதிவு எண்: 26383 போன்: 583241

கல்பதரு பெனிபிட் பண்டு லிமிடெட்

(கம்பெனிகள் சட்டப்படி பதிவு செய்து நிறுவப்பட்டது)
பதிவு அலுவலகம்: 134, ராசப்ப செட்டி தெரு,
(ஸ்ரீ கந்தகோட்டம் அருகில்) பார்க் டவுன், சென்னை-600 003.

பிக்சட் டிபாசிட் திட்டம் மாத வட்டிக்கான காசோலைகள் முன் கூட்டியே வழங்கப்படும்

காலம்	46 நாள்	90 நாள்	6 மாதம்	1 ஆண்டு	2 ஆண்டு	3 ஆண்டு	4 ஆண்டு	5 ஆண்டு
வருட வட்டி விதம்	14%	15%	16%	17.5%	18.5%	19%	19.5%	20% *



பிறந்த நாள் பரிசு திட்டம்

ஆண்டுக்கு ரூ. 920/- வீதம் 4 ஆண்டுகள் செலுத்தி 5ஆம் ஆண்டு முதல்
ரூ. 1000/- ஆண்டுதோறும் தொடர்ந்து பெறுவீர்!!

அமுத சுரபி டிபாசிட் திட்டம்



டிபாசிட் தொகை	காலம்	கிடைக்கும் தொகை
ரூ. 5,600	15 வருடம்	ரூ. 1,00,000
ரூ. 7,000		ரூ. 1,25,000

கல்பதரு மணிபேக் திட்டம்



அ) பிரதி மாதம் ரூ.100/- வீதம் தொடர்ந்து 15 வருடம் செலுத்த வேண்டும்.
முதல் 5ம் ஆண்டு முடிவில் நீங்கள் செலுத்திய ரூ. 6000/-ஐ பெறுவீர் !
2வது 5ம் ஆண்டு முடிவில் மீண்டும் ரூ.6000/-ஐ பெறுவீர் !
3வது 5ம் ஆண்டு முடிவில் ரூ.51,000/-ஐ பெறுவீர் !



முதியவர் நலத்திட்டம்: வயோதிகர் விதவைகள் கல்வி மற்றும் அறக்கட்டளை பயன் பெறலாம்.

தொகை	காலம்	வட்டிவிதம்
ரூ. 10,000	12 மாதங்கள்	**20%**
ரூ. 10,000 கீழ்		**19%**

சேமிப்பு டிபாசிட் திட்டம் - 10% வரை வட்டி வழங்கப்படும்



கடன்

நகைகள் பேரில் கிராம் 1க்கு ரூ.300/- வழங்கப்படும்
சென்னை மாநகரில் உள்ள சொத்துக்கள் பேரிலும் வழங்கப்படும்

வட்டி விகிதம் ரூ.1.95

அலுவலக நேரம் : காலை 8.30 முதல் 12.30 வரை மாலை 2.00 முதல் 6.00 வரை ஞாயிறு காலை 8.30 முதல் 12.30 வரை


பயன் பெற ரூ. 5/- செலுத்தி பங்குதாரர் ஆவீர். (செவ்வாய் விடுமுறை) பாதுகாப்பு • சேவை • சுபிட்சம்

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka

திடீரென்று உங்களை உடம்புவலி தாக்கினால்... குடும்பப் பொறுப்பு,
சிரித்துப் பேசி மகிழ்வது, வேலை, எதுவுமே பாரமாகத் தோன்றும்.

உடம்பு வலியைப் போக்குங்கள் ஜண்டு பாம் தடவுங்கள்.


விரைவில் துடிப்புடன் விளங்குங்கள்.



உடம்புவலி தனியாக வருவதில்லை. கூடவே வேறு சில உபாதைகளையும் அழைத்து வரும் – நடையிலே தளர்ச்சி, நிற்பதிலும் உட்காருவதிலும் சிரமம், போன்றவை. இதில் கவலைப்பட ஏதுமில்லை.

வலியை நீங்கும் ஜண்டு பாமிலே ஆழமாக ஊடுருவி செயல்புரியும் விசேஷ மருந்துப் பொருட்கள் உள்ளன. இவை உடம்புவலி மற்றும் இதர உபாதைகளையும் இழுத்து வெளியேற்றி, உங்களுக்கு உடனடி நிவாரணம் அளிக்கின்றன.

வலியை நீக்கும் ஜண்டு பாமை எப்போதும் கைவசம் வைத்திருங்கள்.
இது ஜலதோஷம் மற்றும் தலைவலி போன்ற
உபாதைகளிலிருந்தும் விரைவில் நிவாரணமளிக்கிறது.



ஜண்டு பாம் ஜண்டு பாம் வலியை நீக்கும் பாம்
ஜலதோஷம் தலைவலி நோவுகளையும்
நொடியில் நீக்கிடுமே

புதிய
5 கிராம் டியூப்

பாம் ஒன்று
செயல் மூன்று

30, 10 கிராம் பேக்கிலே

1. ஜலதோஷம் 2. தலைவலி 3. உடம்பு வலி

AP/ZB/524/94/TAM/6